# திருவள்ளுவத்தில் பகுத்தறிவு முனை

கவிஞர்கோ
கோவை. இளஞ்சேரன்

கலைக்குடில்
வெளியீடு

# திருவள்ளுவத்தில் பகுத்தறிவு முனை

'கவிஞர்கோ'
கோவை. இளஞ்சேரன்

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | **திருவள்ளுவத்தில் பகுத்தறிவு முனை** |
| ஆசிரியர் பெயர் | : | **'கவிஞர்கோ' கோவை. இளஞ்சேரன்** |
| விலை | : | உருபா இருபது |
| முதற் பதிப்பு | : | தி.பி. 2025 (1994) |
| பக்கங்கள் | : | 152 |
| உரிமை (C) | : | ஆசிரியருக்கே. |
| நூலின் அளவு | : | 1 × 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : | 10 புள்ளி |
| வெளியீடு | : | கலைக்குடில்<br>58, எழில் நகர்,<br>தஞ்சாவூர்-7. |
| அச்சிட்டோர் | : | வெற்றி அச்சகம்,<br>91, டாக்டர் பெசன்ட் சாலை,<br>இராயப்பேட்டை, சென்னை-14 |

## மன்னைக்கு இந்நூல் மலர்

என்னுள் தன்னை இருத்தி,
என்னைத் தன்னுள் தழுவியவர்
"மன்னை"* அண்ணன்; அன்பின்
மன்னன்; உண்மைப் பகுத்தறிவின்
பொன்னே அனையார்; பண்பில்
பொய்யே அறியார்; அவர்க்கிந்நூல்
தன்னை மலராய் வைத்தே
தளம்பு கண்ணீர் தணிக்கின்றேன்.

*அன்பன்,*

**கோவை. இளஞ்சேரன்.**

* *தமிழக முன்னாள் அமைச்சர், 'மன்னைப் பெரியார்' என்று போற்றப்பெற்ற மன்னார்குடி ப. நாராயணசாமி.*

கலைக்குடில்

# பதிப்புரை

கவிஞர்கோ கோவை. இளஞ்சேரனாரின் நூல்களை மலர்த்துவது கலைக்குடில். 'திருவள்ளுவத்தில் பகுத்தறிவு முனை' பத்தாவது வெளியீடு.

நூல் விற்பனைக்களம் தொய்வுபட்டுள்ளது; புதுவெளியீடுகளில் கதை, கவர்ச்சி, கமுக்க நூல்கள் ஆட்சி செலுத்துகின்றன. ஆய்வு நூலென்றால் பாய்ந்து ஓடுவோரைக் காண்கின்றோம். இந்தக் கம்பலையில் நெறி வாய்ந்த படிப்பாளர்கள் வரவேற்கும் நூலை வெளியிட வேண்டியுள்ளது. இந்நூலும் அவ்வாறே.

பதிப்பார்ந்த டாக்டர் கலைஞர் அவர்களின் அணிந்துரையும், இனிய நண்பர் திரு. அருண் அவர்களின் அன்பளிப்பும், ந. இர. இரத்தினகிரி, ந. பி. சிவானந்தம் ஆகியோரின் பங்களிப்பும் நூற் சிறப்பிற்கும், பதிப்பிற்கும் தோள்கொடுத்தன. நெஞ்சார்ந்த நன்றி படைக்கின்றோம்.

நூற்பதிப்பில் கவனங்கொண்டு கைகொடுத்த இளவல் திரு. ப. முருகையன், சென்னை ஓவியர் ந. சமால், சென்னை வெற்றி அச்சகத்தார் முதலியோர் பாராட்டிற்கும் நன்றிக்கும் உரியவர்கள்.

பகுத்தறிவாளர்க்கு உந்து முனையாக,
படிப்பாளர்க்கு ஊட்ட உணவாக,
அறிவாளர்க்குச் சாணைக்கல்லாக,
இந்நூல் வரவேற்பில் மிளிரும்.

58, எழில் நகர்
தஞ்சாவூர்—613007

கலைக்குடில்
வெளியீட்டகத்தார்

## முத்தமிழறிஞர்
## டாக்டர். கலைஞர் மு. கருணாநிதி
## அவர்கள் வழங்கிய
## அணிந்துரை

உலகிற்சிறந்த உயர்தனிச் செம்மொழி தாய்த்தமிழ். அஃதேபோல் அழியாப்புகழ்கொண்ட அறிவுக் கருவூலமே திருக்குறள். குறளுக்குப் பதவுரை என்றும் விரிவுரை-யென்றும் விளக்கவுரையென்றும் அக்காலந் தொட்டு இக்காலம் வரையில் ஆய்ந்து வழங்கியுள்ள அறிஞர் பெருமக்கள் பலர் எனலாம்.

பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், காளிங்கர், பரிப்பெருமாள் போன்றோர் குறளுக்குத் தந்துள்ள விளக்கங்களேயல்லாமல் பிற்காலத்திலும் புலவர் பெருமக்கள் அரிய விளக்கங்களை அளித்துள்ளனர்.

வள்ளுவப் பெருந்தகையின் சமகாலப் புலவர்களே குறளின் மேன்மையை உயர்ந்தேத்திப் புகழ்ந்துள்ளனர்.

உரைநடையில் குறட்பாக்களை மலர்மாலையாக ஆக்கியோர் உளர்.

செய்யுள் செய்து குறளுக்குப் பொருள்-உரைத்தோர் உளர்.

சுருக்கமாகச் சுவையாகக் குறளுக்குப் பொழிப்புரை புகன்றோர் உளர்.

இசைத்தமிழால் இனிய குறளைச் செவிவழி பாய
செய்து சிந்தை குளிர்விப்போர் உளர்.

நிகழ்ச்சிகளைக் காட்சிகளாக்கி நிழல்தரு
குளிர்தருக்கள் அடர்ந்த நீரோடைத் தமிழிலும், நெஞ்ச்
கனமேற்றும் முழவோசைத் தமிழிலும், நீர் விழியில்
தோன்றத்தூண்டும் உருக்கமிகு உணர்ச்சித் தமிழிலும் வ
'குறளோவிய'ங்களைத் தமிழகம் பெற்றதுண்டு.

இந்த வகையில், இந்நூற்றாண்டில் தமிழறிஞர்க
புலவர்கள், ஆசிரியர்கள் கதை வடிவில்-சிறுகதை வடிவ்
சிறு நாடகங்கள் வடிவில் இன்னபிற உருவங்கள
குறளுக்கு ஓவியங்கள் தீட்டியுள்ள புலவர்கள் பல
பெருகியுள்ளனர்.

இன உணர்வுடன் இலக்கியப் பணியாற்
தன்மானத் தமிழ்ப் புலவர் திரு. கோவை. இளஞ்சே
நற்றமிழ்த் தொண்டில் முன்னிற்கும் பெருமகனார்; ந
தமிழறிஞர்; தமிழ்ப்பணியினை இதயமெனக் கொ
தன்மானக் கருத்துக்களை வரித்துக்கொள
தமிழியக்கத்திற்கும் மொழிப்போர்க் களத்திற்கும் பெரு
சேர்த்து வருபவர்.

நீண்ட காலம் ஆசிரியப்பணியில்
வகித்தபோதும் திராவிட இயக்கப்பணியில் த
ணிச்சலுடன் பிணைத்துக் கொண்டவர்.

இத்தகைய நண்பர் இளஞ்சேரனார் இன்
தலைமுறையினர் எளிதாகவும் ஏற்புடையதா

படித்துணர்ந்திடத் திருக்குறளைப் பகுத்தறிவுச் சித்திரங்களாகத் தீட்டியுள்ளார். இச்சித்திரங்கள் நிச்சயம் படிப்போர் நெஞ்சங்களில் பதியும் சிறப்புப்பெற்றவை. பகுத்தறிவாளர்களின் நெஞ்சங்களில் திருவள்ளுவர் பெருந்தகை நிறைவிடம் பெறுவார்.

வள்ளுவத்தில் - உணர்வு அறிவும், பகுத்தறிவு, இறைவன், தெய்வம், கடவுட் கோட்பாடும் இவற்றில் திருவள்ளுவரின் அணுகுமுறை, சாதி ஒழிப்புக் கொள்கை, மூட ஒழிப்புக் கொள்கை, ஐயம் நீக்கும் பகுத்தறிவுக் கொள்கைகள், பகுத்தறிவுடன் எளிமை ஆகியவற்றை இளஞ்சேரன் தெளிவாக ஆராய்ந்து கூறியுள்ளார்.

திருவள்ளுவரின் காலச்சூழலையும் அதனை யொத்து அவரது அணுகுமுறையினையும் மனத்திற் கொண்டு நடுநிலை ஆய்வாக இந்நூல் அமைந்துள்ளது.

'திருவள்ளுவர் கொண்டு காட்டிய பகுத்தறிவுக்கு ஒவ்வாதவை சில அவர் நம்பிக்கையாகவே கொள்ளப்பட்டன'

-எனவும் விளக்கி, தாம் தமது ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட அளவிற்கு ஏற்ப இருபது பகுத்தறிவு முனைகளைத் தெளிவுற உணர்த்துகிறார் ஆசிரியர்.

'காய்தல் உவத்தல் அகற்றிய ஆய்வு ; நடுநிலை ஆய்வு; நேர்மையான ஆய்வு; எடுத்த கருத்தை இறுகப்பிடித்துக்கொண்டு வலிந்து எக்கருத்தும்

கொள்ளப்படவில்லை' -என்று இளஞ்சேரன் தம் நேர்மையைக் குறிப்பிடுகின்றார்.

நாம் கண்டறிந்த பகுத்தறிவு முனைகளை எடுத்துக் கூறுவதோடு, இவைபோன்று பல பகுத்தறிவு முனைகள் காணப்படவேண்டியவை திருக்குறளில் உள்ளன என்றும் உரைக்கின்றார்.

உருவத்தைக் குறிக்கும் இலக்கிய வழக்குச் சொல்லான 'கடவுள்' என்பதை விடுத்து 'இறைவன்' என்னும் அருகிய வழக்குச்சொல்லை வள்ளுவர் தேர்ந்து கையாண்டமுறை பகுத்தறிவுக்குச் சான்று. 'பகவன்' என்னும் சொல்லாக்கத்தால் கண்ட பகுத்தறிவாண்மை, இறை இறைவன்', என்னும் சொற்கள் கடவுட் பொருட்குறிப்பில் தனித்தன்மையுடன் காட்டப்படாமல் 'மன்னவன்' எனும் பொருளுடன் சமமாக்கிய துலாக்கோல், திருமாலைப்பகடிக்குள் வைத்தும் மடியிலா மன்னவனுக்கு அடுத்த நிலையில் வைத்தும் காட்டிய பொருட்காட்சி, திருமகளை மடியிலான் தாள் உள்ளே பொருத்திய தாக்கம் ஆகியவை வள்ளுவரின் நெஞ்சத்தைக் காட்டுகின்றன.

கையேந்தி இரப்போரைக் கண்டு மனக்குமுறலுடன் உலகை இயற்றியவனாம் நான்முகக் கடவுளையே 'பரந்து [illegible]' என மிடுக்குடன் கூறிய கூற்று பகுத்தறிவின் உச்சம். நோன்பு வலிமையுடையவர்க்கு முன் கூற்றுவன் எதிர் நிற்க முடியாமல் தோற்றோடச் செய்யப்படுகிறான். மாந்தனே தெய்வம், நான்மறை ஓதலைவிட நல்லொழுக்கம்

குன்றுவது கேடுதரும், பார்ப்பனர் 'அந்தணர்' ஆகார் என்ற கருத்தேற்றமும் அந்தணர் நூல் நான்மறையாகாது என்ற பொருள் தோற்றமும், 'உழுதொழில் இழிதொழில்' என்று ஆரியர் எழுதிய பழிப்பைப் புறந்தள்ளி 'உழவே தலை' என்ற பெருமிதக்கருத்தும் வள்ளுவத்தில் உயர்ந்து நிற்பதை ஆய்ந்துள்ளார் இளஞ்சேரன்.

இருவினை 'இருள் வினை' என்ற கருத்துக்களில் வள்ளுவரின் முதற்புரட்சி, மனிதனின் பெரு வலிமையும் முயற்சியும் 'ஊழ்' எனப்படும் விதியை முந்துறும் பெருமிதக்கருத்து, ஈகையின் சிறப்பால் மேல் ஆரியர் செய்யும் ஆயிரம் வேள்வியும் தீமையாகும் என்கிற திண்மையைத் தெளிவுற இளஞ்சேரன் ஆய்வு செய்துள்ளார்.

'மேல் உலகம்' ஒதுக்கப்பட்ட போர்முரசம், கொல்லாமையின் முன்னே ஆரியர் செய்யும் ஆயிரம் வேள்வியும் தீமையாகும் என்கிற தோலுரிப்பு இக்கருத்துக்களில் உள்ள வள்ளுவரின் பகுத்தறிவுத் திண்மையைத் தெளிவுற இளஞ்சேரன் ஆய்வு செய்துள்ளார்.

மக்கள் வேண்டும் போது மழை பெய்தால் எத்துணை பயனோ அத்துணை பயன் போன்றவள் கற்புடையவள் என்று பெண்ணுக்குச் சூட்டும் புகழாரம், திங்களைப் பாம்பு கவ்வும் வானவியல் கருத்து, தனக்குத் தானே வருந்துமளவுக்குத் தீயவற்றைச் செய்தவனை 'நிரயம் செல்வாய்' என்று அச்சுறுத்திக் 'கயவன்' ஆக்காமல்

மீண்டும் அதனைச் செய்யாமல் 'திருந்து' என்று வள்ளுவர் புகட்டிய எளிய அறிவுரை ஆகியவையான திண்மைக் கருத்துக்களைத் தெளிவுற எழுதி 'திருவள்ளுவத்தில் பகுத்தறிவு முனைகள் தமிழகத்தின் பண்பாட்டுச் சுனைகள்' எனப் பகுத்தறிவு உலகின் முன் வள்ளுவத்தை வானைத்தொடும் சிகரமென உயர்த்தேத்தியுள்ளார் கவிஞர் இளஞ்சேரன். இந்நூலில் நடுநிலை ஆய்வுக்குட்பட்டது என இளஞ்சேரன் தெளிவான சான்றுகள் கூறுகிறார். 'எந்த நூலாயினும் அதில் உள்ளவை அனைத்தும் நூலாசிரியர் உட்கிடக்கையல்ல. அவர் எடுத்து மொழியப் புகுந்தமைக்குச் சான்றுகள் இருக்கும்; எடுத்துக்காட்டுக்கள் இருக்கும்; பிற செய்திகளும் இருக்கும். வேறுபட்ட கருத்துக்களுக்கும் இடம் கொடுக்கப்பட்டிருக்கும். இவற்றையெல்லாம் ஒருங்குவைத்து நோட்டமில்லாமல் நூலாசிரியர் தந்துள்ளவற்றைச் சுருக்கமாக இரண்டில் அடக்கலாம். ஒன்று கருத்து; மற்றொன்று செய்தி. செய்திகள் ஆசிரியர் கொண்ட கருத்தின் சார்புகள் அல்லது துணைகள். கருத்துக்கள் இரண்டு வகைகளாக அமையலாம். ஒன்று, நூல் நோக்கக் கருத்து; மற்றொன்று நோக்கத்தின் விளக்கத்திண்மைக்கு உரமாகும் கருத்து. இங்கு முதலில் நூல் நோக்கத்திண்மைக்கு உரமாகும் கருத்தைக் குறித்துக்காட்ட வேண்டும்.

-இவ்வாறு திருவள்ளுவரின் அணுகுமுறை குறித்து விளக்கிவிட்டு, அதே வழியில் தாம் கொண்டுள்ள

அணுகுமுறையில் வள்ளுவத்தில் காணும் பகுத்தறிவைத் தம் நூல் மூலம் சிறப்புடன் தந்துள்ளார் இளஞ்சேரன்.

இருபது பகுத்தறிவுமுனைப் பிரிவுகளிலும் குறட்பாக்களை எடுத்துக்காட்டுவதோடு, சான்றாகச் சங்கத் தமிழ் நூல்களில் காணப்படும் கருத்துச் செய்யுட்களையும் இணைத்துக் காட்டியுள்ளார்.

'திருவள்ளுவத்தில் பகுத்தறிவு முனை' எனும் இந்தப் போற்றற்குரிய ஆராய்ச்சி நூல், கவிக்கோ கோவை இளஞ்சேரனின் பல ஆண்டுகாலச் சிந்தனையினையும் அவர் வழிநின்று காட்டும் பகுத்தறிவு நெறியினையும் துணைகொண்டு வெளிவந்துள்ள பகுத்தறிவுக் கருவூலம் எனப் புகழ்வதில் ஐயமில்லை.

விழித்தெழவேண்டிய தமிழ் இளைஞர் உலகிற்கு, இந்த நூல் பெரிதும் துணை புரியும். அறிவார்ந்த வாழ்வின் பாதுகாப்பிற்கு இஃது ஒரு கேடயம்; இளைஞர்களின் சமுதாயப் புரட்சிக்கு இஃது ஓர் அறிவாயுதம்.

சுயமரியாதைத் தடத்தில் சுடரேந்திப் பயணம் செய்துவரும் கவிஞர் இளஞ்சேரனின் படைப்பைப் பாராட்டுவதுடன் அவர்தம் உயரிய ஆற்றலையும் போற்றுகிறேன்.

(ஒம்.) மு. கருணாநிதி

# நெஞ்சார்ந்த நன்றி

திருக்குறள், பகுத்தறிவு இரண்டும் தழுவிய ஆய்வு நூல் இது. இரண்டிலும் புகழொளியில் நிலைத்துள்ள டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் இதற்கு அணிந்துரை வழங்கி நூலுக்குப் பொலிவும், பெருமையும் கூட்டியுள்ளார்கள். உலக வளாகத்தில் 'குறளோவிய'த்தால் குறளின் ஒளியேற்றிக்காட்டிய இப்பெருந்தகை நண்பரின் அன்பார்ந்த பேருள்ளத்திற்கு என் நெஞ்சார்ந்த நன்றி படைக்கின்றேன்.

அன்பன்

கோவை.இளஞ்சேரன்.

# பொழிப்புரைக்கு ஒரு சிற்றுரை

வணங்கி மகிழ்கின்றேன்.

இந்த வணக்க மகிழ்ச்சி பகுத்தறிவு முனையின் மலர்ச்சி.

'அறிய அறிய அறியாமை தீரும்'— என்றார் திருவள்ளுவர். அறியாமையை அறிய வைப்பது புத்தறிவு. அறியாமையை அகற்றுவது பகுத்தறிவு. பகுத்தறிவு கூர்மையான முனையை உடையது. இந்த முனை பகுத்தறிந்துதான் பாயும். இக்கூர்முனை திருவள்ளுவரால் எங்கெங்கே எவ்வெவ்வாறு பாய்ச்சப்பெற்றுள்ளது என்பதைக் காட்டுவதே,

''திருவள்ளுவத்தில் பகுத்தறிவு மூனை''
—என்னும் இந்நூல்.

இஃதொரு சொற்பொழிவின் எழுத்துருவம். இப்பொழிவு ஈரோடு திருக்குறள் பேரவையில் நிகழ்ந்தது. ஆம், ஈரோட்டில் நிகழ்ந்தது.

பகுத்தறிவாளர் என்று அறிமுகமானோர் பலர் பகுத்தறிவு நடைமுறைகளுக்குத் தொய்வை ஏற்படுத்தி வருகின்றனர். வேறுபாடும் மாறுபாடும் முரண்பாடுகளும் மலிந்து வருகின்றன, தன்னலத்திற்குள் பகுத்தறிவை

முடக்கிவருகின்றனர். பகுத்தறிவிற்கு மாறான கருத்துக்களுக்கும் திருக்குறள் சான்றாகக் கூறப்படுவது ஒரு பெரும் அவலம். இந்த அவலம் தலையெழுத்துக்கொள்வதற்கு இந்நூல் ஓரளவேனும் உதவும்.

திருவள்ளுவரின் காலச்சூழல், அச்சூழலால் தமிழ்மாந்தர் உணர்வும் அறிவும், திருவள்ளுவரின் நோக்கு, சூழலுக்கேற்ற திருவள்ளுவர் அணுகுமுறை என்பனவற்றை முன்னோட்ட விளக்கமாக இந்நூல் கொண்டுள்ளது.

பகுத்தறிவுப் பெரியார் ஈ. வே. இரா. அவர்களின் வழியில்

**''கடவுள் மறுப்புக் கொள்கை**
**சாதி ஒழிப்புக் கொள்கை**
**மூட ஒழிப்புக் கொள்கை''**

எனும் இவை பகுத்தறிவுப் பாங்குகளாகக் கொள்ளப்பெற்று இவற்றில் திருவள்ளுவப் பகுத்தறிவு முனைகள் ஆய்ந்து விளங்கப்பெற்றுள்ளன. முழுமையும் தொடர்களுமாக 145 குறட்பாக்கள் மேற்கொள்ளப்பெற்றுள்ளன. இவற்றுள் நேர்முகச் சான்றுகளும் அணுக்கச்சான்றுகளும் அடங்கும்.

இந்நூல் பதிப்பாவதில் ஆர்வங்கொண்ட பொறியாளர் திரு. பி. அருண் அவர்கள் மனம்பற்றி நூற்பதிப்பிற்குரிய தாள் செலவை ஏற்று மகிழ்வித்தார்கள். என் இளவல் போன்று அன்பைப் பெய்பவர். பண்புள்ளமும், பழகுதற்கினிய பாங்கும் நிறைந்தவர். உணர்வால் தமிழர். ஆர்வத்தால் குறளன்பர். இவரை என் நெஞ்சத்துள் அமர்த்தி 'வாழ்வு நலம் பொலிக' என்று வாழ்த்துகின்றேன். பாராட்டி நன்றி கூறுகின்றேன்.

'பெரியார் இயக்கம்' என்னும் இதழாசிரியரும், பகுத்தறிவுச் செம்மலுமாகத் திகழ்பவர் தஞ்சை திரு. இரா. இரத்தினகிரி அவர்கள். பகுத்தறிவு தோய்ந்த பாங்கினர். உயிர்மூச்சாகப் பகுத்தறிவுப் பணி பூண்டவர். நிரல்பட நிகழ்ச்சிகளை நிகழ்த்துவதில் திறனாளர். இந்நூற் பதிப்பில் தம் பங்களிப்பை வழங்கியுள்ளார். திரு. பி. சிவானந்தம் பொறியாளர்; என்னருமை மாணவர். அடக்கத் தெளிவும், தொழில் ஊக்கமும் நிறைந்தவர். என்பால் அன்பு நிறைந்தவர்; இலக்கிய ஆர்வலர். அவரும் தம் பங்களிப்பை இந்நூற் பதிப்பில் வைத்தார். இருவர்க்கும் வாழ்த்தும் பாராட்டும் நன்றியும் உரியன வாகின்றன.

பகுத்தறிவு முனைக் கருத்துக்களாக 20 தெளிவாக்கப் பெற்றுள்ளன. முனைக் கருத்துக்கள் அமைந்த பகுதிகளில் வலப்புறம் அறையமைப்பில் தொடர் எண்ணிடப் பட்டுள்ளன. நூல் நிறைவிலும் தொகுத்துக் காட்டப் பெற்றுள்ளன.

பகுத்தறிவுக் கொள்கைகள் நடைமுறைப்படவேண்டும்.

திருவள்ளுவக் கோட்பாடுகள் கடைப்பிடிகள் ஆக வேண்டும்.

தமிழ்ப் பண்பாடுகள் உலகளாவித் தழுவப்பட வேண்டும்.

நூலில் புகுவோர் தம்மையும் சீர்தூக்கிப் பார்க்கலாம்.

மக்களிடையே பரப்பியும் பயன் விளைக்கலாம்.

நன்றி, வணங்கி அமைகின்றேன்.

கலைக்குடில் — அன்பன்,

தஞ்சாவூர் - 613 007. — **கோவை. இளஞ்சேரன்**

# நூல் அடங்கல்

| | |
|---|---|
| மன்னைக்கு இந்நூல் மலர் | 3 |
| பதிப்புரை | 4 |
| பொழிப்புரைக்கு ஒரு சிற்றுரை | 5 |
| உள்ளுறை கருத்தடங்கல் | 8 |
| நெஞ்ச மலர் | 10 |
| சான்றுகளின் குறுக்க விளக்கம் | 12 |
| திருவள்ளுவத்தில் பகுத்தறிவு முனை | 15 |
| பின் இணைப்பு | 20 |
| கருத்துறு சொற்கள் அகர நிகர | |
| பெரியாரைத் துணைக்கோடல் | |

# திருவள்ளுவத்தில் பகுத்தறிவு முனை

## 1. உணர்வும் அறிவும்

**தேய்ந்த பழங்கயிறு**

இரண்டு ஆண் யானைகளுக்குள் ஒரு போட்டி நிகழ்ந்தது. அது கயிறு இழுப்புப் போட்டி. இரண்டும் சம வலிமையுடையவை. இவை மெருகு ஏறிய வெண்மை மருப்புக்கள் ஏந்தலாக வளர்ந்த களிறுகள். ஒன்றைக் கிழக்கு முகமாகவும், மற்றொன்றை மேற்கு முகமாகவும் நிற்கவைத்து இரண்டின் கழுத்திலும் ஒரு கயிற்றின் இரு முனைகளையும் கட்டினர். கயிற்றைப் பற்றிய ஒரு குறிப்பு : கயிறு பழங்கயிறு; எதனால் திரிக்கப்பட்ட கயிறு? வைக்கோல் புரியினால் திரிக்கப்பட்ட புரிக்கயிறு. என்ன ஆகும்? களிறுகள் மாறுபட்டு இழுக்கவா வேண்டும்? களிறுகள் கழுத்துக்களை அசைத்தாலே கயிறு பிய்ந்து சிதறித் தூசியாகும். இதனை ஒரு புலவர்,

> **''ஒளிறு ஏந்துமருப்பிற் களிறு மாறுபற்றிய**
> **தேய்புரிப் பழங்கயிறு''[1]**

என்று பாடினார்.

---

1, தேய்புரிப் பழங்கயிற்றினார் : நற் 284—9, 10

அப்புலவர் சங்க காலத்தவர். அவர் பெயரை அறிய முடியவில்லை. நற்றிணை என்னும் நூலைத் தொகுத்தவர் இப்புலவருக்கு ஒரு பெயரைச் சூட்டினார். புலவர் பாடிய ஒரு தொடரையே பெயராக்கினார். ''தேய்புரிப் பழங்கயிற்றினார்'' என்பது அப்பெயர். அப்புலவர் இக் கயிற்றையும் களிறுகளையும் உவமையாக்கி முன்கண்டபடி,

**''தேய்புரிப் பழங்கயிறு போல''**

என்று உவமையாகப் பாடினார்.

இது எதற்கு உவமை?

அதனை இக்காலக் காட்சி போன்று காணமுடிகிறது.

'திருப்பூர்ப் பேருந்து நிலையத்தில் ஈரோட்டிலிருந்து வந்த பேருந்து நின்றது. ஒரு கட்டிளங்காளை தயங்கித் தயங்கி இறங்கினான். கால்களில் தள்ளாடிய தயக்கம் பயணத்தை இடையில் தயக்கிக் கொண்டதாகக் காட்டியது. கோவைக்குச் செல்லவேண்டியவன் இடையில் திருப்பூரில் இறங்கி நின்றான்.

அண்மையில் மணம்முடித்து 'அவளின்' அன்பையும் இன்பத்தையும் கண்ட புதுமையில் உள்ளான். வாழ்க்கை நடத்தப் பொருளீட்டுவதற்காகக் கோவை செல்கிறான். இடையில் அவன் நெஞ்சம் அவனைவிடவில்லை. அது பேசிற்று ;

'முதுகுப்புறத்தே தாழ்ந்து தொங்கும் கரிய இருட்டு போன்ற கூந்தல், சாட்டைக் கயிறாகச் சுற்றி உன்னை இழுக்கின்றது. கண்ணீர் பனித்த கண்கள் வலைக்கண்ணிபோட்டுப் பிணிக்கின்றன. வேண்டாம்; மேலே போகாதே! அவளிடம்போய் அவள் உன்னைப் பிரிந்த இன்னலைத் தீர்ப்போம்; திரும்பு' என்று இறக்கிவிட்டது.

ஆனால்,

அவன் அறிவோ இப்படிப் பேசியது :

'எடுத்த செயலை முடிக்காது தளர்தல் அறியாமை மட்டுமன்று; இகழ்ச்சியையும் தரும். இதுதான் உறுதிப்பாடு. அயராதே; சற்று விரைந்து மேலே பயணம் கொள்; செல்வோம்' என்று பேருந்திற்கு உந்தியது.

இடையில் தத்தளித்த அவன்,

'உள்ளத்து உணர்வென்னும் களிறு ஒருபுறம் இழுக்கின்றது. மூளையின் அறிவென்னும் களிறு மறுபுறம் இழுக்கின்றது. இரண்டிலும் அகப்பட்ட என் உடலாகிய கயிறு வீழ்ந்து சிதறிப்போகும் போலும்' என்று தனக்குத்தானே ஓலமிட்டான்.

இவ்விளக்கம் நற்றிணை 284ஆம் பாட்டின் விரிவாக்கம். ஈரோடு, திருப்பூர், கோவை. பேருந்து ஆகியன எம் இடைச் செருகல்கள். மற்றவை 'தேய்புரிப்பழங் கயிற்றினார்' பாட்டின் உள்ளொளி.

இப்பாடல் ஒரு காதலனின் காதல் தத்தளிப்பை மட்டும் காட்டவில்லை. ஓர் உயிரியல் கருத்தைத் தருகிறது.

'உணர்வும் அறிவும் மாறுபடுமானால் வீழ்ச்சிதான் நேரும்' என்பதை நயமாகக் காட்டியுள்ளது.

மாந்தரின் வாழ்வியக்கம் மட்டுமன்று, உயிர் இயக்கமும் உணர்வையும் அறிவையும் கொண்டே நிகழும். உணர்வும்

அறிவும் மாறுபடக்கூடாது. ஒன்றையொன்று தழுவிச் செல்ல வேண்டும். இங்கு மாறுபட்டன.

**உணர்வைத் தாழ்த்தும் அறிவு**

பெருமன்னன் அக்பர் நல்ல கல்விமான். அதற்கு நிகரான ஒழுக்கசீலன். எச்சிறு தீய பழக்கமும் இல்லாதவன். அவன் அவைக்கவிஞன் பீர்பால் நல்ல அறிஞன்; கவிஞன்; நயமான பேச்சுக்காரன், தீய பழக்கமாகிய புகையிலையைப் பயன்படுத்துவதை விடாதவன்.

ஒருநாள் இருவரும் உரையாடியவாறே உலாப் போந்தனர். ஒரு புகையிலைத் தோட்டத்தின் வழியே நடந்தனர். அங்கே ஒரு கழுதை புகையிலையை நோக்கி விரைந்து வந்தது. நெருங்கியதும் புகையிலையை மோந்து பார்த்து உதடுகளைப் பிதுக்கிக் கொண்டு திரும்பியது. இதனைப் பயன்படுத்த நினைத்த அக்பர்,

'பார்த்தீரா பீர்பால்; கழுதைகூட புகையிலையை வெறுக்கிறது, என்றார். உடன் பீர்பால்,

'ஆம்! கழுதைதான் புகையிலையை வெறுக்கும்' என்று எதிர்ச்சாடல் வீசினான். இந்த எதிர்ச்சாடலில் அறிவு முனைப்பாக வேலை செய்துள்ளது. ஆனால், நல்லுணர்வு வலிமையற்றுத் தோற்றது. உணர்வு தாழ்த்தப்பெற்று அறிவு முனைப்பானால் நன்மை பிறககாது. அதற்கு இது எடுத்துக்காட்டு.

**அறிவை மீறிய உணர்வு**

பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் தன் அவையில் நாடகக் கூத்தியரின் அழகுக் கூத்தைச் சுவைத்து முகம் மலர்ந்தான். அண்மையிலிருந்த கோப்பெருந்தேவி,

மன்னன் கூத்தியைச் சுவைத்ததாக ஊடல் கொண்டாள். ''தலைநோய் வருத்தம் தன்மேலிட்டு''ப் படுக்கையிற் கிடந்தாள். அவளை மன்னன் கண்டு ''தாழ்ந்து பல ஏத்தி''யும் ஊடல் தணியவில்லை. அந்த உணர்வுக் கொப்பளிப்புடன் வெளியே வந்தான். இந்நேரம், பொய்யன் பொற்கொல்லன் 'களவுபோன சிலம்பு கண்டேன்; கள்வனும் உள்ளான்' என்றான். ஆராய்ந்து அறிய வேண்டிய மன்னனை அவன் உணர்வு அழுத்திவிட்டது. அறிவை அமுக்கிவிட்டது. **அறிவறை போகியன் ஆனான்.** அறிவை அமுக்கிய உணர்வினால் 'கொன்று அச்சிலம்பைக் கொணர்க' என்றான். அவ்வாறே செய்தனர். முடிவு என்ன ஆயிற்று? அறிவு உணர்ச்சிக்கு ஆட்பட்டதால் 'தாழ்ந்த குடையினனானான்; தளர்ந்த செங்கோலினன் ஆனான்; வீழ்ந்து இறந்தான். [1]

இது, உணர்வு அறிவை மீறியதால் நேர்ந்த அவலத்திற்குச் சான்று.

**ஒன்றையொன்று தழுவல்**

என்வே, உணர்வும் அறிவும் மோதிக்கொள்வதும் தீது, ஒன்றில் ஒன்று ஆட்படுவதும் தீது; ஒன்றை ஒன்று தழுவிச் செல்வதே நலமாகும் இந்த உண்மையின் படைப்பே திருக்குறள். மக்களது உணர்வையும் தெளிவாக்கும் ஆழ்ந்த ஆய்வின் வெளிப்பாடே திருவள்ளுவம் என்னும் திருக்குறள்.

**வள்ளுவத்தில் உணர்வும் அறிவும்**

அரம் போலும் கூர்த்த அறிவிருக்கலாம். ஆனால்; அது பிறிதின் நோயைத் தன் நோய்போல் உணர்ந்து

1. இளங்கோவடிகள் : சிலம்பு : வழக்குரை—73

போற்றாது போனால் அந்த அறிவினால் பயனில்லை. "அறிவுடையார் எல்லாம் உடையார்" (430) என்பதே பொய்த்துப் போகும்.

**"அறிவினால் ஆகுவ துண்டோ; பிறிதின்நோய்**
**தன்நோய்போல் போற்றாக் கடை"[1] (315)**

என்றதும்,

**"அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண் பில்லா தவர்" (997)**

என்றதும் உணர்வைத் தழுவிச் செல்லாத அறிவு பயனற்றது என்பதற்கு விதிப்புகள் ஆகின்றன.

செவிச்சுவை உணரும் உணர்வு கேள்வி அறிவோடு கூடியது. உண்ணும் வாய் உணவோ மாக்களும் கொள்ளும். இதனைக் காட்டும்,

**"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்**
**அவியினும் வாழினும் என்" (420)**

என்னும் குறளால் 'அறிவு தழுவாத உணர்வு வாழ்விற்குப் பயன்தராதது' என்றார்.

எனவே, மாந்தன் சீரான வாழ்வைச் சிறப்பாகப் பெற உணர்வும் அறிவும் ஒன்றையொன்று தழுவிச் செல்வதே நலமாகும். திருவள்ளுவப் பெருந்தகை இக்கோட்பாட்டின் அடித்தளத்திலேயே மக்கள் வாழ்வின் செம்மையைக் கண்டார்; விண்டார்.

---

1. அடைப்புக் குறிகளுக்குள் குறிக்கப்படுவது திருக்குறட்பா எண்.

**திருவள்ளுவர் காலச்சூழல்**

திருவள்ளுவர் காலம் எவ்வுணர்விலும் எவ்வறிவிலும் எந்த நிலையில் இருந்தது? அவர்களுக்கு முன்னரும், ஒட்டியும், ஓரளவில் பின்னரும் எழுந்த நூல்களும் பாடல்களும் மாந்தர் உணர்வின் வழிப்படுவதையும் அறிவின் வழிப்படுவதையும் ஏறத்தாழத்தான் கொண்டு செலுத்தின. ஒத்த நிலையில் கொண்டு செலுத்தவில்லை.

சங்க இலக்கியங்கள் என வகுக்கப் பெற்றுள்ள பத்துப் பாட்டும், அதனுடன் எட்டுத் தொகையும், தொடர்ந்து எழுந்த பதினெண்கீழ்க் கணக்கும், மேலும் கூட்டினால் இரட்டைக் காப்பியங்களும் உணர்வுகளுக்கு மாந்தரை ஆட்படுத்தியதைவிட அறிவிற்கு ஆட்படுத்தியமை குறைவு எனலாம்.

வடமொழி நான்மறைகளும், அவற்றின் வழி உபநிடதங்களும், மநுநூலும் ஆராயக் கூடாதவை. அவை விதிப்பனவற்றைக் கண்மூடி வணங்கிப் பின்பற்ற வேண்டும்' என்னும் கருத்து சங்க காலந்தொடங்கி மாந்தரிடை உலவவிடப்பட்டது. திருவள்ளுவப் பெருந்தகை அக்கருத்தைக் கெல்லித் தள்ளியவராக,

**''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு'' (423)**

என்றும்,

**''எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு'' (355)**

என்றும் சொல்வோரையும் 'சொல்லப்படுவனவற்றின் தகுதியையும் பார்த்தல் கூடாது; மெய்ப்பொருள் காண்பது தான் முறை. அதனை அறிவுதான் செய்ய வேண்டும்; அது தான் அறிவு' என்று எழுதிய முதல்வர் திருவள்ளுவர்.

# 2. பகுத்தறிவு

உயிரின் படிமுறை வளர்ச்சியைப் படிப்படியாக மலர்த்தி ஐயறிவுயிர் என்றும் ஆறாவது அறிவு பெற்றவன் மாந்தன் என்றும் உயிரியல் பாங்கைத் தமிழர் கண்டனர். இதனை யும் உணர்வாலும் அறிவாலும் தாம் கண்டனர்.

ஆறாவது மன உணர்வு—உணர்வு.

ஆறாவது பகுத்தறிவு—அறிவு என நிறைவாக்கினர். உணர்விற்குக் களம் மனம். அறிவிற்குக் களம் மூளை. அம்மூளை உணர்விற்கும் தூண்டுகோல். இவ்விரண்டையும் கூர்ந்து கண்ட திருவள்ளுவர் உணர்வு கண்டபடி பாயும், அப்பாய்வு தீமையையும் அடையலாம்; நன்மையையும் அடையலாம். அறிவுதான் அந்த உணர்வைச் ''சென்ற இடத்தாற் செலவிடாது தீது ஒரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு'' (422) என்று விதித்து 'அதுதான் அறிவு' என்றார்.

முன்னைச் சான்றோர் நன்மை தீமைகளை அறிவது தான் அறிவு' என்பதை 'அறிவு' என்னும் சொல்லால்தான் குறித்தனர். 'பகுத்தறிவு' என்னும் சொல்லைக் காண வில்லை. மேற்கண்ட குறள்தான் 'நன்மை தீமைகளைப் பகுத்துப் பார்த்து உணர்வை இயக்குவதுதான் அறிவு என்றது. அதனைத்தான் நாம் 'பகுத்தறிவு' என்கிறோம்.

'பகுத்தறிவு' என்னும் சொல் திருக்குறளில் இல்லை என்றாலும், இச்சொல்லை ஆக்குவதற்கு வழி காட்டுவது போன்ற சூழல் உள்ளது.

'அறிவு' என்னும் சொல் பல அடைமொழிகள் பெற்றுத் திருவள்ளுவரால் வழங்கப்பெற்றுள்ளது. 'வாலறிவு (2); பேரறிவு (218); புல்லறிவு (246); உண்மை அறிவு (513); உள்ளறிவு (677); ஆயும் அறிவு (198) என்றெல்லாம் உள்ளன. இவை போன்று 'பகுத்து அறிவு; பகுத்தறிவு' என்னும் சொல் பின்னர் ஆக்கம் பெற்றுள்ளது. இங்கு அறிவிற்கு அடைமொழியாக அமையப்பெற்ற 'பகுத்து' என்பது வேறு சில சொற்களுக்கும் அடைமொழியாக அமைந்துள்ளதையும் காண்கிறோம். 'பகுத்து உண்டு' (322) என்று திருவள்ளுவத்திலும், ''பகுத்து ஊண்''[1] என்று பதிற்றுப்பத்திலும் உள்ளன. இவ்வழியில் 'பகுத்தறிவு' என்னும் சொல்லும் அமைந்தது.

'பகுத்து' என்பது செய்யுள் அமைப்பில் 'பாத்து' என்று அமையும். ''பாத்தூண் மரீஇயவனை'' (227) என்று திருவள்ளுவரும் பாடினார். இப் 'பாத்து' என்னும் சொல் லமைப்புடன் முன்றுறையரையனார் தம் பழமொழியில்

''பாத்தறிவு ஒன்று இன்றி''[2] என்று 'பாத்தறிவு' என்று ஒரு சொல்லாக்கம் செய்தார். இதன் மாற்றுருவாக்கமாகப் பகுத்தறிவு' என்னும் சொல் உருவாகியுள்ளது.

'பகுத்தல்' என்றால் பிரித்தல்—பிரித்துப் பார்த்தல் என்று பொருள். 'நன்மை, தீமையைப் பிரித்து—பகுத்துப் பார்க்கும் அறிவு' என்பதே 'பகுத்தறிவு' என்பதன்

1. காப்பியாற்றுக் காப்பியனார்: பதி: 38-15
2. முன்றுறையரையர்: பழ: 384

பொருள். 'பகுத்தல்' என்னும் சொல்லின் பகுதி 'பகு'. இதன் அடித்தளச் சொல்லை அறிமுகம் செய்வது போன்றும், அதனைப் பலவகையாக வளர்ப்பது போன்றும் உள்ள அமைப்பைத் திருவள்ளுவத்தில் காண்கிறோம்.

**பகவன்**

இந்தப் 'பகு' என்பதற்கு வேர்ச் சொல் 'பள்' என்பார் மொழியறிஞர் பாவாணர். 'பகு' வில் எழுந்த அடுத்த அடித் தளச்சொல் 'பக்' என்பது. நெஞ்சு 'பக், பக்' என அடித்துக் கொள்கிறது' என்று வாய்வழக்கில் கேட்கிறோம். இவ்வாறு விட்டு விட்டுப் பிரிந்து பிரிந்துப் ஒலிப்பதைப் 'பக்' என்பது போன்று, கூடியிருந்தவை பிரிவதைத் திருவள்ளுவர் 'பக்கு' என்னும் சொல் வைத்துப் ''பக்குவிடும்'' (1068) என்றார். இந்தப் 'பக்கு' - பகு, பக என்றாவதையும் ''பகச் சொல்லி'' (187) என்பதில் காண்கின்றோம். இந்தப் 'பக' என்னும் வினைச்சொல் 'பகவு' என்னும் பெயர்ச் சொல்லாகத் திருவள்ளுவரால் ஆளப்பெற்றுள்ளது. மிகச் சிறிய அளவிற்குத் தினை அரிசியைக் கூறுவார். அதனினும் சிறிய அளவைக் குறிக்க எள்ளின் 'பகு'வைக் கூறினார். எள் பகவு - ''எட்பகவு அன்ன சிறுமைத்து'' (889) என்றார்.

இந்தப் 'பகவு' என்பது பிரிவு, பிளவு, பகுப்பு என்று பொருள்படும். இவ்வாறு நன்மை, தீமையைப் பிரித்து பகுத்து அறிவிப்பவன் பகவு + அன் = 'பகவன்' எனப் பட்டான். திருவள்ளுவர் தம் முதற்குறட்பாவில் 'பகவன்' என்னும் பெயரை இறைவனுக்குச் சூட்டினார். பின்னர் 'வகுத்தான்' (377) என்றும் அமைத்தார்.

தகவு + அன் = தகவன் - தகவர், நடுவு + அன் = நடுவன் - நடுவர் என்றெல்லாம் அமைவது போன்று பகவு + அன் =

''பகவன்'' அமைந்தது. இறைவனை மூலமான பகவனாக-ஆதிபகவனாகக் காட்டும் திருவள்ளுவர் பகவனை நன்மை தீமையின் பகவு கண்டே முதல்வன் (ஆதி) என்றார். பகுத்து அறிந்த முதல்வன் - பகுத்துக் காட்டும் முதல்வன் என்று பகுத்தறிவு கொண்டவனாகக் காட்டினார்.

பகவன் தமிழ்ச்சொல். 'பகவான்' என்னும் வடசொல்லின் திரிபு அன்று. ''பக்வான்' என்னும் வடசொல்லின் 'மூலச்சொல்லாக வடமொழியார் 'பஜ்' (Phag) என்று காட்டுவர். இது மூலமே அன்றி வேர்ச்சொல் அன்று என்றும், இதற்கு வேர்ச்சொல் 'பகு' என்னும் தமிழ் வேரே என்றும் மொழியறிஞர் பாவாணர் விளக்கியுள்ளார்.[1] எனவே, 'பகவன்' என்னும் தூய தமிழ்ச்சொல் 'நன்மை தீமையைப் பகுத்து உணர்ந்தவன்; உணர்த்துபவன் - முதல் இறைவன்' என்று பொருள்படும். இவ்வாறு இறைவனையே பகுத்தறியும் குணம் உடையவனாகக் குறிப்பாலும் காட்டியுள்ளார் திருவள்ளுவர். மற்றொன்றையும் இதன் தொடர்பால் காண வேண்டும். திருவள்ளுவர் முதல் அதிகாரத்தில் ஒன்பதாவது குறளாக இறைவனை 'எண்குணத்தான்' என்று தொகுத்துச் சொன்னார்.

முன் எட்டுக் குறட்பாக்களிலும் எட்டுக் குணங்களைக் காட்டினார். இவ்வகையில் முதல் குறளில் மூலமான இறைவன் பகுத்துணரும் குணத்தன் என்று அறிவுத் தொடர்பாகக் காட்டினார். அடுத்த குறள் கல்வித் தொடர்புடன் 'வால் அறிவன்' என்று அறிவுத் தொடர்பிலும் விளக்கப்பட்டுள்ளது. எனவே, திருவள்ளுவர் முதன்மையாக அறிவையே வைத்துள்ளார். அதனினும் பகுத்தறிவையும், தூய அறிவையும் வைத்துள்ளார்.

---

1. தேவநேயப் பாவாணர் ஞா. முதல் தாய்: 293

### இக்காலத்தில் பகுத்தறிவுக் கொள்கைகள்

இக்காலத்தில் 'பகுத்தறிவு' என்பது பெரியார் ஈ.வே.ரா. அவர்களால்தான் மிகுதியாகக் கையாளப் பட்டது. 'பகுத்தறிவு' என்று ஓர் இதழுக்குப் பெயரிட்டார். 'பகுத்தறிவாளர்' என்றால் 'பெரியார் கொள்கைகளைப் பின்பற்றுபவர்' என்றே கொள்ளப்படுகின்றது. பெரியார் கண்ட பகுத்தறிவுக் கொள்கைகள் எவை?

1. கடவுள் மறுப்புக் கொள்கை
2. சாதி ஒழிப்புக் கொள்கை
3. மூட ஒழிப்புக் கொள்கை

என்று மூன்றாக அமையும்.

### பகுத்தறிவுக் கொள்கையும் திருவள்ளுவரும்

இம்மூன்று பகுத்தறிவுக் கொள்கைகள் திருவள்ளுவர்க்கு உடன்பாடா? இவ்வினா மூன்றிற்கும் முழுமையாக ஒரே விடை சொல்ல இயலாது.

ஒன்று, கடவுள் மறுப்புக் கொள்கையில் திருவள்ளுவர்க்கு **உடன்பாடு இல்லை.** (இங்குக் 'கடவுள்' என்ற சொல்லைப் பொதுவாக நாம் வழங்கும் வழக்கை வைத்தே குறித்துள்ளேன்; அதற்குரிய தனிப்பொருளில் அன்று.)

இரண்டு, சாதி ஒழிப்புக் கொள்கையில் திருவள்ளுர்க்கு **உறுதிப்பாடு உண்டு.**

[illegible] மூடமறுப்புக் கொள்கையில் திருவள்ளுவர்க்கு **உண்டு.**

இவற்றை நேர்முகமாகத் திருவள்ளுவர் தம் அதிகார வழியாக, கருத்துக்கள் கொண்டு காட்ட முடியாது. கூர்த்த ஆய்வால்தான் காட்டமுடியும். அவர் அங்கங்கு வாய்ப்புள்ள இடங்களிலும், வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்ட இடங்களிலும் காட்டியுள்ளார் என்றே கூறவேண்டும். அதனையும் பெரும்பாலும் குறிப்பாகவும், ஓரளவில் வெளிப்படையாகவும் வைத்துள்ளார் என்பதே பொருந்தும்.

திருவள்ளுவர் கருத்திற்குள் புகுவதற்கு முன் திருவள்ளுவர் காலத்திலும் அதற்கு முன்னரும் ஓரளவில் அவரை ஒட்டிய நூற்றாண்டுகளிலும் எழுந்த தமிழ் நூல்கள் எத்தகைய கருத்துக்களை வெளியிட்டுள்ளன என்று காணவேண்டும். அக்கருத்துக்களால் மாந்தர் எந்த நிலையில் இருந்தனர் என்பதையும் காணவேண்டியது இன்றியமையாததாகும்.

சுருக்கமாகச் சொன்னால் அக்காலச் சூழலில் கடவுட் கொள்கை இருந்தது. ஆனால், தனியொரு சிறப்பாக இல்லை. சாதிக் கொள்கை புகுத்தப்பட்ட அடையாளத்துடன் இருந்தது. மூடக்கொள்கைகள் அள்ளித் தெளிக்கப் பட்டிருந்தன.

**திருவள்ளுவர் நோக்கு**

திருவள்ளுவர் இந்தச் சூழலைக்கூர்ந்து கண்டுள்ளார். ஆழ்ந்த கவனங் காட்டியுள்ளார். இவற்றால் நேர்ந்திருந்த குறைகளையும், தீமைகளையும் உணர்ந்துள்ளார். இவற்றைக் குறைக்கவும், போக்கவும் முனைந்துள்ளார். இவ்வாறு திருவள்ளுவர் பற்றிக் கருத்தைக் கணிப்பது மேற்போக்கான பார்வையினால் அன்று. ஆய்ந்து கண்ட பார்வையாலாகும். இவ்வுண்மை மேலே செல்லச் செல்ல விளங்கும்.

அவர் தம் சொற்களையும் கருத்துக்களையும் கொண்டு அறிவித்தால் இவ்வாறு சொல்லவேண்டும்; தமிழகத்தில்—அதன் தொடர்பில் உலகத்திலும் நேர்ந்து அமைந்துள்ளவற்றை ஆழ்ந்து கண்டுள்ளார். உலகத்தோடு ஒட்ட ஒழுகலைக் கடைப் பிடித்துள்ளார். அந்த ஒட்ட ஒழுகலோடு உரிய மாற்றுக் கருத்துக்களையும் பதிந்துள்ளார். பல்வகையாகப் பரவி இருந்த கருத்துக்களில் அவர்க்கு ஒத்துவையும் இருந்திருக்கலாம்; வேறுபட்டனவும் மாறுபட்டனவும், முரண்பட்டனவும் காணப்பட்டிருக்கலாம். ஆனால், அவற்றுள் மக்கள் நன்மைக்கு ஒத்துவரும் கருத்தை அறிந்து எடுத்துக் கொள்ளும் உரோட்டமான கருத்துணர்வை மேற்கொண்டுள்ளார். ''ஒத்ததறிவான் உயிர்வாழ்வான்'' (214) என்பது அவர் விதிப்பு அன்றோ? அவ்வாறு அறியாது செத்த கருத்தாளராக அவர் இலர். அத்துடன் ஒவ்வாதனவற்றை ஒதுக்கி வைத்துக்கொண்டு உரிய இடத்தில் அதனை எதிர் மறையாக வைத்து விளக்கும் முறையையும் கைக்கொண்டுள்ளார்.

இவ்வாறு கொள்பவர் என்பதை,

**''உலகம் தழீஇயது ஒட்பம்; மலர்தலும்**
**கூம்பலும் இல்லது அறிவு** (425)

என்னும் அவர்தம் சொல்லாலே உணரலாம். அறிவொளி உலகத்தைத் தழுவியது. உலக வழக்கிலும், பழக்கிலும் காண்பவற்றிற்காகத் தம் அறிவை மலர்த்தாமலும், கூம்பாமலும் ஒரே சீராகப் பயன்படுத்தியுள்ளார்.

**பகுத்தறிவு முனை**

இத்துணையளவு ஒரு வகையான முன்னுரை தருவது இங்கு வேண்டப்படுவதாகும். இம்முன்னுரையான அடித்

தளப் பார்வையுடன் திருவள்ளுவப் பகுத்தறிவை அணுகலாம்.

'திருவள்ளுவத்தில் பகுத்தறிவு முனை' என்பது திருவள்ளுவம் முழுக்கப் பகுத்தறிவு நூல் என்று கொள்வதன்று. அப்படியொரு தவறானமுடிவுடனோ நோக்குடனோ இங்கு அணுகப்படவில்லை. 'இடம் அறிந்து, மிக நுணுக்கமான பார்வையில் திருவள்ளுவர் அங்கங்கு பகுத்தறிவைக் குறிப்பாக வைத்துள்ளார்' என்பதே இங்கு அணுகப்படும் முறை. அதனால்தான் 'திருவள்ளுவத்தில் பகுத்தறிவு' என்று தலைப்பிடாமல் **'பகுத்தறிவு முனை'** என்று கொள்ளப்பட்டுள்ளது. இந்த **முனையும் முனைப்பு** என்ற கருத்தில் அன்று. கூர்த்த முனை போன்று கருத்துக்களின் கூர்மையைக் கருத்தில் தான்.

இனிக் கொள்கைகளுக்குள் புகலாம்.

# 3. இறைவன்—கடவுள்—தெய்வம்

இக்கொள்கையில் புகுமுன் பொதுவாக நாம் வழங்கும் கடவுளைக் குறிக்கும் சொற்களைக் காணவேண்டும். பல பட விரிந்துள்ள அச்சொற்களில் கரணியம் கொண்ட கதை தழுவிய சொற்களை விடுத்துத் தனித்தன்மையுள்ள சிறப்பான சொற்களைக் காணவேண்டும். அவை,

**இறைவன்,**

**கடவுள்,**

**தெய்வம்**—என்னும் மூன்றாகும். இவை மூன்றும் வெவ்வேறு தனித்தனி உட்பொருள் கொண்டவை.

**இறைவன்**

இறைவன் என்னும் சொல்லின் வேர்ச்சொல் 'இல்' என்பது. இருப்பிடம்—இல்லம் என்னும் பொருள் கிளைத்து. 'இல்+த்+ஐ' என்பனவற்றின் கூட்டே இறை. அந்த இறைத்தன்மையுடையவன் இறைவன். அவன் மூல முதலாக, முடிவு இறுதியாக அமைய 'இறுதி—இறு' என்னும் பொருள் இணைப்பையும் உடையவன் இல்—இல்லை என்னும் எதிர்மறைப்பொருள் அதன் இயல்புப்

பொருள் அன்று. பின் காணப்பட்ட பொருள். இவ்வாறு அனைத்திற்கும் மூலமான இருப்பிடத்தை—இல்லை உடையவன் என்பதே இறைவன் என்றதன் பொருள். அவ்வாறெனில் மூலமான முதல்வன்; உருவற்றவன்; வடிவம் கொள்ளக்கூடாதவன் என்பதே இறை—இறைவன் ஆகும். அவ்வாறாயின் 'அன்' என்னும் ஆண்பாலாக ஏன் கூறவேண்டும்(?) என்று வினவலாம். அதுதான் 'உலகம் தழீயது'. உலக வழக்கில் எதையும் உருவகமாகவும் பெண்ணையும் தழுவிய ஆணாகவும் கூறுவது பழமை மரபு.

**கடவுள்**

கடவுள் என்னும் சொல் 'கட+உள்—கடந்து உள்ளே உள்ளது' என்னும் பொருள் கொண்டது. அவ்வாறே பலரும் கொண்டனர். மொழி ஞாயிறு பாவாணர் அவர்கள் "கடவுபவன்—செலுத்துபவன் என்றாகலாம்" என்றார்[1] இவ்வாறு சொற்கள் அமைவதை இயவுள், செய்யுள், அக்குள் எனும் சொற்களும் காட்டுகின்றன. இயங்க வைத்து உள்ளே இருப்பது இயவுள். செய்யக் கருதியதை செய்து வைக்க உள்ளாக இருப்பது, செய்யுள். இரண்டு உறுப்புக்களின் இணைப்பின் உள்ளிடமாக இருப்பது, அக்குள். (அக்கு—இணைப்பு—'அக்கு வேறு ஆணிவேறாக' என்னும் வழக்கை அறிவோம்.)

இவ்வாறமைந்த கடவுள் எதைக்கடந்தது? காணப்படும் உருவத்தைக் கடந்தது. கடந்து உள்ளே—அவ்வுருவத்தின் உள்ளேயோ, காண்பவரின் மனத்துள்ளேயோ இருப்பது என்று விரியும்.

---

1. தேவநேயப் பாவாணர் ஞா: சொல். கட். பக்கம் 33—அடிக்குறிப்பு

பிற்காலச் சிவவாக்கியரும்,

**''நட்ட கல்லும் பேசுமோ**
**நாதன் உள் இருக்கையில்''** [1]

என்று பாடியதையும் இங்குப் பொருத்திப் பார்க்க வேண்டும்.

பழம்பெரும் இலக்கியங்கள் 'கடவுள்' என்பதை உருவம் உள்ளதாகக் காட்டின.

**''வேறுபல் உருவின் கடவுள் பேணி''** [2]

**''காரி (நஞ்சு) உண்டிக் கடவுளது (சிவ உருவம்)**
**இயற்கையும்''** [3]

என்பனவற்றாலும் பிற பல பாடல்களாலும் அறியலாம்.

எனவே, கடவுள் என்பது வடிவம் உடையதாக, அதனைக் கடந்து உள்ளொளியாக இருப்பது என்றும் பொருள் கொண்டதாகும்.

**தெய்வம்**

'தெய்' என்பது தெய்வம் என்னும் சொல்லின் பகுதி. அது 'தேய்' என்னும் வினையிலிருந்து திரிந்தது. 'தேய்' என்பதற்கு 'உரசு' என்றும் 'தேய்தல், தேய்த்தல்' என்பன வற்றிற்கு உராய்தல், உராயச் செய்தல் என்றும் பொருள்.

---

1. சிவவாக்கியர்: சிவ: 494
2. கபிலர்: குறி: 209
3. பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார்: மலை: 83.

ஒன்றோடொன்று உராய்வதால் ஒலியும் உராயும் பொருளில் சிதைவும் நேரும். வானவெளியில் பெருங்கோள்கள் உராய்ந்ததால் சிதறிய ஒன்றே சூரியன். கோளத்தோடு கோளம் உராய்ந்து - தேய்ந்து சிதறிச் சுழலும் சூரியன் 'தெய்வு' எனப்பெறும். பகவு + அன் = பகவன் ஆனமை போன்று தெய்வு + அம் = 'தெய்வம்' என்று பெயர் பெற்றது. இதன்படி முதல் தெய்வமாகச் சூரியன் அமைந்தது.

தேய்தல், உராய்தல் என்பதையும் அஃது உராய்வால் ஏற்பட்ட சூரியனைக் குறிப்பதையும் மொழியறிஞர் கா. சு. பிள்ளையவர்களும் மொழி ஞாயிறு பாவாணர் அவர்களும் ஒருமுகமாகக் கண்டனர்.

இவ்வாறு தெய்வம் இயற்கை நிகழ்ச்சியால் தோன்றிப் பெருவலிமையும், திறனும் கொண்டதாக வானத்திலுள்ள கதிரவனைக் குறித்தது; குறிக்கிறது. இதன் தொடர்பில் மண்ணில் தோன்றிய மாந்தரும் வாழ்வில் அரியன செய்து, நெறியன படைத்து உரிய பெரும்புகழ் பெற்றவர் மண்ணில் வாழ்வாங்கு வாழ்ந்தவராவர். அவர் உயிர் துறந்ததன் பின் உயிர் மட்டும் ஆவியாக வானத்தில் உறையும். ஆவ்வாவி என்னும் 'வாழ்வாங்கு வாழ்ந்தவன், வானத்தில் கதிரவனுடன் எண்ணத் தக்க தெய்வம் ஆவார்' என்பதனைத் திருவள்ளுவர்,

> **''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன், வானுறையும்**
> **தெய்வத்துள் வைக்கப் படும்''** (50)

என்றார். இதனை இல்வாழ்க்கையின் இறுதியான நிறைவு நிலையில் வைத்ததும் எண்ணத்தக்கது. அதிலும் இம்மண்ணுலகில் வாழ்ந்த நிறைவைக் குறித்தார். அதிலும் குறிப்பாக 'வாழ்பவன்' என்றார். வாழ்ந்தவன்' மட்டுமன்று, 'வாழ்கின்றவன்' அன்று 'வாழ்பவன்'—எதிர்காலத்திலும் நிலைத்து 'வாழ்பவன்' என்றார். அவனது செயற்கரிய திறமான வாழ்வால் என்றும் வாழ்பவனாக

அதிலும் இறந்த பின்னரும் ஆவியாக வானத்தில் வாழ்பவனாக ஆகிறான். அவன் வானுறையும் முன்னையப் பல தெய்வங்களுக்கு ஒப்பாக—தெய்வமாகவே வைக்கப்படும் என்றார். 'வாழ்பவன்' என்று உடலும் உயிரும் கூடிய கூட்டான ஆண்மகனாகக் குறித்தார். உடல் பிரிந்த உயிரை ஆண்பாலால் கூறாது அஃதாவது 'வைக்கப் படுவான்' என்று முடிக்காது 'வைக்கப்படும்' என்று பொதுவில் உயிரை மட்டும் கருதிக் குறித்துள்ளமை கூர்ந்து நோக்கத்தக்கது. எனவே, தெய்வம் என்பது சிறக்க வாழ்ந்து இறந்த மாந்தனின் நிறை நிலையையே குறிப்பதாகும்.

* இறைவன் — அருவமாய் முதல் மூலவன்
* கடவுள் — உருவமாய் உலவுபவன்
* தெய்வம் — நிறைவாக வாழ்ந்த நிலமாந்தன்

பொதுவில் கடவுள் என்னும் கருத்தில் சொல்லப்பெற்றாலும் மூன்றும் வெவ்வேறானவை என்பதை நினைவில் நிறுத்தவேண்டும்.

# 4. கடவுளும் திருவள்ளுவரும்

திருவள்ளுவர் தாம் எழுதிய 1330 குறட்பாக்களையும் 133 அதிகாரங்களாக அடைத்துள்ளமை அறிந்த ஒன்று. ஒரு கருத்தின் விளக்கத் தொகுப்பாம் 10 குறட்பாக்களே ஓர் அதிகாரம். எடுத்த ஒரு கருத்திற்கேற்ப ஒவ்வோர் அதிகாரத்திற்கும் அவரே தலைப்பை அமைத்திருக்க வேண்டும். அவ்வாறு அமைக்காது விட்டால் 1330 குறட்பாக்களும் மோத்தையாக, கருத்துப் பகுப்பை அறிய முடியாமல் படிப்போரைக் குழப்பிவிடும். எனவே, அதிகாரப் பெயர்களும் அவரால் அமைக்கப்பட்டனவே.

அவை, அவர் அமைத்தபடியே—அவர் கொடுத்த தலைப்புச் சொற்களிலேயே இன்றும் உள்ளனவா? இல்லை. சில மாற்றங்கள் சிலரால் செய்யப்பட்டுள்ளன.

சான்றாக ஒன்று :

பரிமேலழகரும் மற்ற சிலரும் குழந்தைப் பேற்றை விளக்கும் அதிகாரத்திற்குப் 'புதல்வரைப் பெறுதல்' என்று காட்டினர்.

திருவள்ளுவர் அதிகாரக் கருத்துள்ள குறட்பாவை முடிக்கும்போது அடுத்த அதிகாரத்திற்குத் தோற்றுவாயை

யும் பல இடங்களில் பெய்து வைத்துள்ளார். இதன்படி வாழ்க்கைத் துணைநலத்தின் ஈற்றில்,

**''மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்**
**நன்கலம் நன்மக்கட் பேறு''** (60)

என்னும் குறள் வைத்தார். இக்குறளின் ஈற்றுத் தொடர் 'மக்கட் பேறு' (குழந்தையைப் பெறுதல்). எனவே அடுத்த அதிகாரம் 'மக்கட்பேறு' அதிகாரம். அதன் தலைப்பு **'மக்கட்பேறு'** என்பதேயாகும். ஆனால், 'புதல்வரைப் பெறுதல்' என்றுள்ளமை மாற்றம் பெற்ற தலைப்பேயாகும்.

முன் அதிகாரத்தில் மட்டுமன்றி நூலில் எங்கும் புதல்வர் என்னும் சொல் இல்லை. இல்லாமல் எவ்வாறு புதல்வரைப் பெறுதல் வந்தது? எனவே, 'மக்கட்பேறு' என்பதே திருவள்ளுவர் தொடர்.

**கடவுள் வாழ்த்து**

இது போன்றதே திருக்குறளின் முதல் அதிகாரத்தின் பெயரும் ஆயிற்று, அது ''கடவுள் வாழ்த்து'' என்றிருத்தலை அறிவோம். இத்தொடர் திருவள்ளுவர் அமைத்ததா என்றால் புதல்வரைப் பெறுதலுக்குச் சொன்னவற்றையே கொள்ளவேண்டும். திருக்குறளில் எங்கும் 'கடவுள்' என்னும் சொல் இல்லை; திருவள்ளுவரால் ஆளப்படவில்லை. பின் எவ்வாறு 'கடவுள் வாழ்த்து' வந்தது? முதல் அதிகாரத்தில்

**''இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார்''** (5)

**''இறைவன் அடிசேராதார்''** (10)

என இரண்டு இடங்களில் 'இறைவன்' என்னும் சொல் திருவள்ளுவரால் ஆளப்பட்டது.

எனவே, 'இறைவன்' என்னும் சொல்லுடன் வணக்கத்திற் குரிய சொல் சேர்ந்த தொடராக அதிகாரப் பெயர் திரு வள்ளுவரால் அமைக்கப்பெற்றிருக்கும்.

இம்முதல் அதிகாரத்தில் வணக்கத்திற்குரிய சொற் களாக, 'தொழல்' (2) 'வணங்கல்' (9) என்னும் இரு சொற் கள் உள்ளன. இவற்றில் ஒன்று கொண்டு

'இறைவனைத் தொழல்'

இறைவனை வணங்கல்

அல்லது

இறை வணக்கம் எனும் மூன்றில் ஒரு தொடர் அமைக்கப்பட்டிருக்கலாம்.

'இறைவன்' என்றமைப்பதில் ஒரு கருத்து மாற்றம் கண்ட எவரோ ஓர் உரையாசிரியர் "கடவுள் வாழ்த்து" என்று அமைத்தார். ஏன் "கடவுள் வாழ்த்து" என்னும் தொடரைத் தேர்ந்தார்?

**"கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"[1]**

என்று தொல்காப்பியத்திலும்,

**"மீமிசைக் கடவுள் வாழ்த்தி"[2]**

என்று குறிஞ்சிப்பாட்டிலும் பிறஇலக்கியங்களிலும் 'கடவுள் வாழ்த்து' என்னும் தொடர் உள்ளது.

1. தொல்காப்பியர் : தொல் : பொருள் : 85
2. கபிலர் : குறி : 209

பழைய இலக்கியக் கருத்தைக் கொண்டும் முந்தைச் சான்றோர்தம் சொற்களைக் கொண்டுமே உரையாசிரியச் சான்றோர் எழுதுவர். எனவே 'கடவுள் வாழ்த்து' என்று இலக்கணஇலக்கியத்தில் உள்ளமை கொண்டு அமைத்தனர்.

ஆனால், திருவள்ளுவர் சொல்லாட்சிதனை ஏனோ மறந்தனர்! உரையாசிரியர்களா மறப்பர்? தம் கருத்தைப் புகுத்தும் கரணியமாகவும் மறதியுள் புதைத்திருக்கலாம்.

'கடவுள்' என்னும் சொல் தமிழ்ப் பண்டை நூல்களில் பெரு வழக்கான சொல். தொல்காப்பியத்தில் மூன்று இடங்களில் வருகிறது. பத்துப்பாட்டுப் பாடல்களில் 12இடங்களில் உள்ளது. 'எட்டுத்தொகை நூல்களில் 73 இடங்களிலும் பதினெண்கீழ்க்கணக்குகளில் 2 இடங்களிலும் சிலம்பில் 24 இடங்களிலும் மணிமேகலையில் 12 இடங்களிலும் உள்ளது.

ஆனால், திருக்குறளில் இச்சொல் அறவே ஆளப்பெறவில்லை. கடவுள் என்னும் சொல்லைக் கொள்ளாததால் திருவள்ளுவர் 'கடவுளே இல்லை' என்றுள்ளார் என்ற மலிவான கருத்தைச் சொல்லக்கூடாது.

**அடி : தாள் ?**

**'கடவுள் உருவமுடையது;**
**அதனைக் குறிக்க வேண்டாம்'**

என்று விடுத்திருப்பார். அவ்வாறானால் முதல் அதிகாரக் குறட்பாக்களில் 'அடி' என்றும், 'தாள்' என்றும் அறிவன், ஏசினான், இறைவன் என ஆண்பாலிலும் குறித்தமை உருவகக் குறிப்புதானே எனலாம்.

திருவள்ளுவர் இறையை எட்டுக் குணங்களாகத்தான் குறித்தார். அக்குணங்களின் உருவகமாகவே மேற்கண்டவா றெல்லாம் கூறினார். அவையெல்லாம் குணங்களின் உருவகமேயன்றி மூலத்தில் உருவம் அல்ல.

'அடி' என்றும் 'தாள்' என்றும் உடல் உருவ உறுப்புக் களைக் கூறியுள்ளாரே என்றால், அவையும் குணத்தின்—செயலின் உருவப்பாடுகளே.

குணங்களை மேற்போக்காகவோ, நுனிப்புல் மேய்வ தாகவோ, கொள்ளக்கூடாது. முழுமையாகக் கொள்ள வேண்டும். ஆழமாகக் கொள்ளவேணடும். குணங்களின் அடித்தளம் வரை கண்டு கொள்ளவேண்டும். அடிவரை—தாள் வரை உணர்ந்து கடைப்பிடிக்கவேண்டும். இஃதே திருவள்ளுவர் நோக்கம். என்வே, ஆழமாக, அடிவரை, என்பனவற்றைக் குறிப்பனவே 'அடி, தாள்' என்னும் சொற்கள்: நேரடியான உறுப்புக்களை அல்ல.

திருவள்ளுவர் குறித்த மற்றவற்றையும் காணவேண் டும். உருவம் உள்ள உருவங்கொண்டு உலவிய கடவுளரைக் குறிப்பாகவும், அவரவருக்கு உரிய சொல் கொண்டும் குறித்துள்ளமையையும் பரவலாகக் காண்கிறோம்.

**''பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க**
**நாகரிகம் வேண்டு பவர்''** ***(580)***

என்னும் குறளில் நஞ்சுண்ட சிவபெருமானைக் குறிப்பாகக் கூறியுள்ளார் என்பர். இஃது ஆய்விற்குரியது.

மேலும்,

**''அடியளந்தான்''**
**''தாமரைக் கண்ணான்''**

எனத் திருமாலையும்,

**"தாமரையினாள்"**

**"செய்யாள்"**

எனத் திருமகளையும்,

**"தவ்வை"**

**"மாமுகடி"**

என மூதேவியையும்

**"கூற்றம்"**

என்று காலனையும் வைத்துள்ளார் என்பது உண்மையே.

உருவத்தைக் கடவுள் தொடர்பில் வேண்டாதவர் ஏன் இவ்வாறெல்லாம் அமைத்தார்? இங்குதான் ஓர் அடிப்படை உண்மையை உணரவேண்டும். இதனை அடிப்படை உண்மை என்பதைவிட 'மக்களை அவர் போக்கில் திருத்தும் உத்தி' என்பதே பொருந்தும்.

# 5. திருவள்ளுவரின் அணுகுமுறை

**கருத்து, செய்தி**

எந்த நூலாயினும் அதில் உள்ளவை அனைத்தும் நூலாசிரியரின் உட்கிடக்கையல்ல. அவர் எடுத்து மொழியப் புகுந்தமைக்குச் சான்றுகள் இருக்கும். எடுத்துக்காட்டுக்கள் இருக்கும். பிற செய்திகளும் இருக்கும். வேறுபட்ட கருத்துக்களுக்கும் இடம் கொடுக்கப்பட்டிருக்கும். இவற்றையெல்லாம் ஒருங்கு வைத்து நோட்டமில்லால் நூலாசிரியர் தந்துள்ளவற்றைச் சுருக்கமாக இரண்டில் அடக்கலாம். ஒன்று கருத்து; மற்றொன்று செய்தி. செய்திகள் ஆசிரியர் கொண்ட கருத்தின் சார்புகள் அல்லது துணைகள். கருத்துக்கள் இரண்டு வகைகளாக அமையலாம். ஒன்று, நூல் நோக்கக் கருத்து. மற்றொன்று, நோக்கத்தின் விளக்கத் திண்மைக்கு உரமாகும் கருத்து.

இங்கு முதலில் நூல் நோக்கத் திண்மைக்கு உரமாகும் கருத்தைக் குறித்துக் காட்டவேண்டும்.

**பாவேந்தர் நோக்கு**

பாவேந்தர் பாரதிதாசனார் பாரதியார் பால் நீங்காப் பற்று வைத்தார். ஏழத்தாழப் பாரதியாரைத் தம் வழி காட்டியாகக் கொண்டவர். 'கனகசுப்புரத்தினம்' மாறிப் 'பாரதிதாசன்' என்றானமையே இவற்றிற்குச் சான்று. அவர் பாரதியாரைப் பற்றி ஒரு சூழலில் சில பாடங்களை எழுதினார். முதற்பாடலின் முதற்பகுதி:

> **''ஞானரதம் போலொரு நூல் எழுதுதற்கு**
> **நானிலத்தில் ஆள் இல்லை; கண்ணன் பாட்டு**
> **போல்நவிலக் கற்பனைக்குப் போவதெங்கே?**
> **புதியநெறிப் பாஞ்சாலி சபதம் போலே**
> **தேனினிக்கத் தருபவர் யார்''[1]**

என்பது. பாரதியாரின் உரைநடை நூல் 'ஞானரதம்'. 'ஞானம்' என்னும் தேரில் ஏறிப் பிரமலோகம், சத்திய லோகம், இந்திரலோகம் முதலியவைகட்குச் சென்று வருவதுபோல் எழுதப்பட்ட நூல்.

கண்ணனைப் பல நிலைகளில் வைத்துப் பல தலைப்புக் களில் பாடப்பட்ட பாடல்கள் கண்ணன் பாட்டு.

பாரதக் கதையில் தருமனும் துரியோதனனும் ஆடிய வட்டாட்டமும் அதில் திரௌபதி செய்த சூளுரையும் சபதமும் விளக்கப்படும் சிறு காப்பியம் பாஞ்சாலி சபதம்.

இவை மூன்றும் பாரதியாரின் நோக்கக் கருத்துக்களில் எழுந்தவை. ஆனால், இங்கு பாவேந்தர் பாடலில் கண்டவை பாவேந்தரின் நோக்கக் கருத்துக்களின் பதிவு

1. பாரதிதாசன்: பா. தா. கவி: 2 மகாகவி-5.

அல்ல. நோக்கத் கருத்திற்கு உரமாகும் கருத்துக்களாகும். எவ்வாறெனில், பாவேந்தருக்குப் பிரமலோகம், இந்திர லோகம், சத்தியலோகம் என்பன எல்லாம் வெற்றுப் புழுகுகள். கண்ணன் பாவேந்தரின் ஏளனத்திற்கு உரியவன். பாரதம் பாவேந்தரின் கண்டனத்திற்கு உரியது. இவர் ''துரியனின் (துரியோதனின்) ஏற்றத்தைப் பாடுவேன்'' என்று பாடியவர்

பாவேந்தர் கருதிய புளுகுக்கருத்தை-ஏளனக்கருத்தை-கண்டனக் கருத்தை ஏன் எடுத்துமொழிந்து பாடினார்?

'கல்கி' ஆசிரியர் 'கல்கி' என்னும் கல்யாணி கிருட்டிண மூர்த்தி 'பாரதியார் உலக மாகவி அல்லர்' என்று எழுதினார். அதனை மறுக்கும் நோக்கக் கருத்தில் எழுந்த பாடல்களின் முதற்பாட்டே மேலே காட்டப்பட்டது.

இதனால் புரிவன யாவை?

தம் நோக்கக் கருத்தை உறுதிப்படுத்த,—

தாம் உயர்த்த விரும்பிய சான்றோரின் கருத்துத் தழுவலுடன்,—

தமக்கு விருப்பமில்லாதவற்றையும் எடுத்து மொழிந் தார் என்பனவே உண்மை

இவை மூன்றும் பாவேந்தர் கருத்தோ—கொள்கையோ என்று கொள்ள முடியாது; கொள்ளக்கூடாது. நோக்கக் கருத்திற்கு உரம் ஊட்டுபவை.

இவை போன்றே திருவள்ளுவரும், பல செய்திகளையும் கருத்துக்களையும் எடுத்த கருத்தின் உறுதிப்பாட்டிற்காக

குறட்பாக்களில் வைத்துள்ளார். அவை திருவள்ளுவரின் நோக்கக் கருத்துக்கள் அல்ல.

**கள் எடுத்தாளப்படலாமா?**

கட்குடி ஒரு பெருந்தீமை என்பது திருவள்ளுவர் கருத்து. பழந்தமிழரிடையே "சிறிய கள் பெறினே எமக்கு ஈயுமன்னே"[1] என்று அவ்வையார் பாடும் அளவு கள் (அக் காலம் 'தேறல்' என்னும் புளித்த தேன்) குடிக்கும் பழக்கம் இருந்தது. அதனைத் தீமையாக அதிலும் கடிய தீமை யாகக் கண்டித்த முதற் பெருமகனார் திருவள்ளுவரே. 'கள்ளுண்ணாமை' என்றொரு அதிகாரம் அமைத்து அதில் பத்துக் குறட்பாக்களால் கட்குடியைக் கண்டித்தார்.

"களித்தறியேன்" (928) - கள்ளைக் குடித்துக் களி கொள்வதை அறிந்தேனல்லன் - என்று சொல்லும் அள விலும் கட்குடியை நினைப்பது தீமை என்று பாடினார். இத்தகைய நினைக்கவும் தகாத கள்ளைத் திருவள்ளுவர் பிற இடங்களில் எடுத்தாண்டுள்ளமை நோக்கத்தக்கது.

காதலித்த இருவரது காதல் பற்றி செய்தி வெளிப் படுவது 'அலர்' எனப்படும். அலர், பழி தூற்றுவதாகும். சில முனைகளில் இப்பழி தூற்றுவதும் காதலர்க்கு இனி மையைத் தரும். காதலனோடு தன்னைத் தொடர்பு படுத்திப் பேசுவதைக் கேட்பதில் காதலிக்கு ஓர் இனம் புரியா இனிமை எழும். காதலனுக்கும் அவ்வாறே. இத் தகைய இனிமையைத் திருவள்ளுவர் ஓர் உவமை கொண்டு விளக்கினார்.

> **"களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால், காமம்**
> **வெளிப்படுந் தோறும் இனிது"** (1145)

---

1. அவ்வையார் புறம்: 235-1

காமம் வெளிப்படும்போதெல்லாம் ஓர் இனிய உணர்வு தோன்றுமாம். அந்த இனிமையை எவ்வாறு விளக்குவது? 'கள்ளை உண்டு களிக்கும்போதெல்லாம் அக்கள்ளை மேலும் மேலும் குடிக்கவேண்டும் என்னும் இனிய விருப்பம் தோன்றும். அது போன்ற இனிமை தருவது அலர் என்றார். என்றவர் எவர்? கள்ளை நினைத்தலும் தீமை என்று பாடிய திருவள்ளுவர்.

இஃது ஒன்று மட்டுமா?

தோழி ஒருத்தி காதல் தலைவன் ஒருவனைப் பார்த்து,

> ''அவளைப் பிரிந்து நீ அவளுக்கு துன்பம் செய்தாய். செய்தாலும், காதல் திருடனே, உன் மார்பு அவளுக்கு நினைப்பிலும் களிப்பைத் தருகிறது; கள்ளைக் குடித்துக் களித்தவர்க்கு அந்தக் கள்ளைப் போன்று களிப்பைத் தருவதாகிறது (1288)'' என்றாள்.

மேலும் மாற்று முறையாக,

**''உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்**
**கள்ளுக்கில் காமத்திற் குண்டு''** (1281)

என்றும்,

**'' கள்ளினும் தீராக் களிமகிழ் செய்தலால்**
**கள்ளினும் காமம் இனிது''** (1201)

என்றும் பாடியுள்ளார். இவற்றால் திருவள்ளுவர் கட்குடியை ஒரு சிறப்பாக மதித்தார் என்றா கொள்வது? கூடாது. மற்றொன்றையும் காணவேண்டும்:

**உவமை என்றால்**

'கள்' இங்கெல்லாம் உவமையாகக் கூறப்பட்டுள்ளது. உவமை என்று கூறப்படுவது ஏன்? தெரியாத ஒரு பொருளைக் கூறுவதே உவமை. உவமையாகக் கூறப்படும் பொருள் உயர்ந்த தகுதியுடையதாக இருக்க வேண்டும் என்பது இலக்கணம்.

"உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை'[1] என்று தொல்காப்பியர் விதித்தார். அவ்வாறானால் திருவள்ளுவர் உவமைக்கு எடுத்துக் கொண்ட கட்குடியை — கள்ளை உயர்வாகக் கருதினாரா? இல்லை.

உவமை சிறப்பு, நலம், காதல், வலிமை என்னும் நான்கின் அடித்தளத்தில் வரும் என்ற தொல்காப்பியர்,

"கிழக்கிடுபொருளோ டைந்து மாகும்"[2] என்று தாழ்ந்த — கிழக்கிடு — கீழான பொருளும் உவமையாக வரலாம் என்றார். இதன்படி தாழ்ந்த பொருளாகத்தான் 'கள்' உவமையாயிற்று. மற்றுமோர் அமைதி கூறலாமா?

மேலே காணப்பட்ட கள் உவமையான குறட்பாக்களை 'திருவள்ளுவர் தாம் நேர் கூற்றாக வைத்துக் கூறவில்லை. காதலன், காதலி, தோழி ஆகியோர் வாய்ப்பேச்சாகத்தான் கட்குடியை உவமையாக்கினார். எனவே, குறை திருவள்ளுவரைச் சாராது' என்று அமைதி கொள்ள நினைக்கலாம். இஃதும் பொருந்தாது.

காதலன், காதலி, தோழி எனும் படைப்பு மேம்பட்ட இல்லற உள்ளீட்டின் மணியான படைப்பு. எனவே, அன்னோரும் கள்ளை நினைக்கக் கூடாதவர்களே; உவமையாகவும் நினைக்கக் கூடாதவர்களே.

---

1. தொல்காப்பியர் : தொல். பொருள் : 274
2. தொல்காப்பியர் : தொல். பொருள் : 275

**திருவள்ளுவரின் அணுகுமுறை**

பின்னர், எந்த நோக்கில் அல்லது முறையில் நினைக்கத் தகாததும் தாழ்ந்ததுமான கள்ளைத் திருவள்ளுவர் உவமையாக்கினார்?

அதுதான் திருவள்ளுவரின் அணுகுமுறையாகின்றது. மக்களைச் செம்மைப்படுத்தவே திருக்குறளைக் கருவியாகக் கொண்டார், அஃதே திருவள்ளுவரின் குறிக்கோள். அதற்கு மக்களை உணர்வு வழியிலும், அறிவுப் பாங்கிலும் இட்டுச் செல்வதே அவர்தம் நோக்கம். 'மக்களின் செம்மை' என்னும் தம் கோட்பாட்டைக் குறியாகக் கொண்டு அது மக்களால் புரிந்து கொள்ளப்பட்டுக் கைக் கொள்ளப்பட வேண்டும் என்பதற்கேற்ற அணுகு முறையைத் தேர்ந்து கொண்டார். மக்களுக்கு நன்கு தெரிந்துள்ள ஒன்றைக் காட்டிப் புரியவைக்க வேண்டும்; அதற்குத் தாம் விரும்பாத ஒன்றையும் எடுத்துக்காட்டிப் புரியவைப்பதே திருவள்ளுவர் அணுகுமுறை.

பாவேந்தர் பாரதிதாசனார் தாம் விரும்பாத பாரதம், சுண்ணன். கற்பனை உலகம் முதலியவற்றைப் பாரதியின் திறனைக் காட்டுவதற்குக் கையாண்ட அணுகுமுறை இது போன்றதே. திருவள்ளுவர் வழியில் பாவேந்தர் கையாண் டிருப்பினும் இக்கால நிலையில் பாவேந்தரைக் காட்டித் திருவள்ளுவரைக் காணவைக்க நேர்ந்தது. வேர் மறைவாக மண்ணுக்குள்தானே உள்ளது! காட்சியளிக்கும் மரத்தைக் கொண்டு தானே வேரின் உண்மை புரிகிறது.

இந்த அணுகுமுறை நோக்கோடுதான் திருவள்ளுவரின் பகுத்தறிவுப் பாங்கை உணர, அவர்தம் அணுகுமுறையைக் கொள்ள வேண்டியுள்ளது.

இதன்படி பகுத்தறிவுக் கொள்கைகளாகக் கூறப்பட்ட மூன்றில் 'கடவுட் கொள்கை' பற்றி முதலில் காண்போம்.

# 6. கடவுட் கொள்கை

## இறைவன்

'இறை' என்னும் சொல் பல பொருள்களைக் குறிக்கும். அது 'அன்' விகுதி பெற்று 'இறைவன்' ஆயிற்று. 'இறை' என்பதன் இரண்டு. பொருள்களை அடித்தளமாகக்கொண்டு இறைவன் உருவாயிற்று. ஒன்று, தங்கும் இடம் என்னும் பொருள். இரண்டு, மக்கள் மன்னனுக்குச் செலுத்தும் கடமைப் பொருள்(வரி). தங்கும் இடம் என்னும் பொருளில் 'இறைவன்' என்பது, 'பார்க்கும் இடமெல்லாம் நீக்கமறத் தங்கியுள்ள' கடவுள் எனப்படும் இறைவனைக் குறிக்கும். 'தங்கும் இடம்' என்னும் அதே பொருளில் 'தன் ஆட்சிக்குரிய பரப்பிடமெல்லாம் ஆளுகை உரிமையில் தங்கியுள்ள' மன்னன் எனப்படும் இறைவனையும் குறிக்கும். கடமைப் பொருள் என்னும் பொருளில் அப்பொருளைப் (இறையை) பெறுபவனாகிய மன்னனைக் குறிக்கும்.

## இறை — கடவுள் — மன்னன்

'இறை' என்னும் சொல்லே ஆகுபெயராகக் கடவுள் எனப்படும் இறைவனையும் நாட்டை ஆளும் இறைவனாம் மன்னனையும் குறிக்கும்.

'இறை, இறைவன்' எனும் இரண்டும் கடவுள், மன்னன் எனும் பொருள்களில் முற்கால நூல்களில் ஆளப் பட்டுள்ளன.

தொல்காப்பியம் முதல் பதினெண் கீழ்க்கணக்கு வரை இவ்விரு சொற்களும் ஆளப்பட்டுள்ளவற்றைப் பார்த்தால் ஓர் உண்மை புலப்படும்.

| நூல் | சொல் | கடவுள் பொருளில் | மன்னன் பொருளில் |
|---|---|---|---|
| தொல்காப்பியம் : | இறை | இல்லை | உண்டு |
| ,, | இறைவன் | இல்லை | உண்டு |
| பத்துப்பாட்டு : | இறை | இல்லை | இல்லை |
| ,, | இறைவன் | இல்லை | உண்டு |
| எட்டுத்தொகை : | இறை | உண்டு | உண்டு |
| ,, | இறைவன் | உண்டு | உண்டு |
| 18 கீழ்க்கணக்கு : | இறை | இல்லை | உண்டு |
| (திருக்குறள் அன்றி) | இறைவன் | இல்லை | உண்டு |
| திருக்குறள் : | இறை | உண்டு | உண்டு |
| | இறைவன் | உண்டு | உண்டு |

தொல்காப்பியம் முதல் 18 கீழ்க்கணக்கு வரை (திருக் குறள் அன்றி) அமைந்த 36 நூல்களில் 'பரிபாடல்' ஒன்றில் மட்டும் இரண்டு இடங்களில் 'கடவுள்' பொருளில் 'இறை, இறைவன்' ஆகிய இரு சொற்கள் உள்ளன. மன்னன் பொருளிலோ பரவலாக உள்ளன.

திருக்குறளில் இரு சொற்களும் ஆளப்பட்டுள்ளன. முதல் அதிகாரத்தில் இறைவன் இரண்டு இடங்களிலும்

இறைமாட்சி அதிகாரத்தில் கடவுட் குறிப்பில் இறை ஓரிடத்திலும் ஆளப்பட்டுள்ளன.

அஃதாவது திருவள்ளுவருக்கு முன்னைய நூல்களும், அவர் கால நூல்களும், அவர் காலத்தை ஒட்டிய நூல்களும் 'கடவுள்' என்னும் பொருளில் இறை—இறைவனை ஒன்றிரண்டு இடங்களில் ஆண்டிருக்க திருவள்ளுவர் மட்டும் ஏன் இரு சொற்களையும் கடவுளுக்குக் கையாண்டார். அத்துடன் 36 நூல்களிலும் 'கடவுள்' என்னும் சொல் 90 இடங்களில் (முன் பக்கம் 31இல் காட்டியபடி) கடவுள் பொருளில் கையாளப்பட்டிருக்க மிக அறிமுகமாகி வழக்கிலிருந்த அச்சொல்லை விட்டு அருகிய வழக்கமான இறைவனைத் தேர்ந்தது ஏன்? அதிலும் மன்னன் பொருளில் அதிக வழக்கிலிருந்த சொற்களாம் இறைவன், இறையைத் தேர்ந்தது ஏன்?

**பகுத்தறிவு முறை 1**

இத்தேர்வில்தான் திருவள்ளுவரின் பகுத்தறிவு அணுகுமுறை வெளிப்படுகிறது. உருவமுள்ளதாக வழங்கப்பட்ட 'கடவுள்' என்னும் சொல்லைக் கையாளவோ மாந்தர்க்கு 'நினைவூட்டவோ அவர் விரும்பவில்லை. அதே நேரத்தில் பொதுவான சொல் ஒன்றை—அதிலும் தம் உருவற்ற குறியீடாகக் கொள்ளும் சொல்லை—அஃதாவது (இறை) இறைவன் என்பதைத் தேர்ந்தார்.

**பகுத்தறிவு முறை 2**

பொதுக் குறியீடாக 'இறைவன்' என்னும் சொல்லைக் கையாண்டார். ஆனால், அவ்வாறான மூல முதல்வனுக்கு ஒரு பெயரைப் படைக்க எண்ணியிருக்க வேண்டும். அதற்கு உரிய சொல்லாக்கமாகப் 'பகவன்' என்னும் சொல்லைப் படைத்தார்.

திருக்குறளுக்கு முன்னர் எந்நூலிலும் 'பகவன்' என்னும் சொல் இல்லை. திருக்குறளை ஒட்டிய அல்லது அடுத்துத் தோன்றிய 'இன்னா நாற்பது' என்பதில் அதன் கடவுள் வாழ்த்தில் மட்டும் ஓரிடத்தில் "முக்கட் பகவனைத் தொழாமை இன்னா"[1] என்று பகவன் என்னும் சொல் சிவபெருமானுக்கு ஆளப்பட்டது. பின் வந்த நூல் களிலும் நிகண்டுகளிலும் 'பகவான்' பல கடவுளர்க்கும் பெயர் ஆயிற்று.

இவற்றையெல்லாம் ஒன்று கூட்டி ஆழ்ந்து நோக்கி னால்—சிறப்பாக 'இறைவன்' சொல்ஆட்சியையும் 'பகவன்' சொல்லாக்கத்தையும் நோக்கினால் திருவள்ளுவரின் பகுத்தறிவு நோக்கம் புலனாகும். இவை முதலில் குறிக்கத் தகும் இரு பகுத்தறிவு முனைகள்.

**மன்னனும் இறை**

இறை, என்னும் சொல்லைக் கடவுட் குறிப்பிலும், மன்னன் பொருளிலும் பொருத்திக் கையாண்டுள்ளமை ஆராயத்தக்கது. மன்னனுக்கும் கடவுளுக்கும் இணையாக ஆளப்பட்டுள்ளதா? ஏற்றத்தாழ்வாக ஆளப்பட்டுள்ளதா? இரண்டுமன்றிக் குறிப்பாக மன்னன் பொருளில் சற்றுப் பெருமைப்படுத்தப்பட்டுள்ளதா? இவ்வினாக்களுக்கு உரிய விடைகாண இரு பொருள்களிலும் கையாளப்பட்டுள்ள இடங்களையும், கருத்துக்களையும் காணவேண்டும்.

முதலில் அதிகாரப் பெயரை நோக்க வேண்டும். முதல் அதிகாரத்தின் பெயர் பின் வந்த உரையாசிரியர்களால் மாற்றப்பட்டது என்று கண்டோம். திருவள்ளுவர் 'இறை வணக்கம்' என்று முதல் அதிகாரத்திற்குப் பெயர் கொடுத் திருக்கலாம் என்றும் கண்டோம். (பக்கம் 30). இது

---

1. கபிலர் : இன்னா : 1—1

போன்றே மன்னன் கடமைகளையும், பெருமைகளையும் விளக்கும் அதிகாரத்திற்கு 'இறை மாட்சி' என்று பெயர் கொடுத்துப் பெருமளவில் 'இறை' என்னும் சொல்லை இரு பொருள்களுக்கும் சமப்படுத்தி ஆண்டார். கடவுட் குறிப்பிற் குரிய 'இறை' என்னும் சொல்லை மன்னன் பொருளுக்கும் இறைமாட்சி என்று அதிகாரத்தில் அமைத்தமை ஒரு குறிப்பாகக் கொள்ளவேண்டியதாகும்.

இறைமாட்சி (மன்னன் பற்றிய) அதிகாரக் குறட்பாக் களில் கடவுட் குறிப்புள்ள இறை எவ்வாறு ஆளப் பட்டுள்ளது?

''இறைகாக்கும் வையக மெல்லாம்; அவனை
முறைகாக்கும் முட்டாச்செயின்'' (547)

என்னும் குறளின் முதல் தொடராம் 'இறை காக்கும் வையகமெல்லாம்'' என்பதை மட்டும் தனித்து நோக்கினால் ''கடவுள் உலகத்தை எல்லாம் காப்பாற் றும்'' என்று பொருள் கொள்ளலாம். ஆனால், அடுத்துவரும் 'அவனை முறை காக்கும்'' என்பது அவ்வாறு பொருள் கொள்ள முடியாமல் 'உலகத்தை எல்லாம் மன்னவன் காப்பாற்றுவான்' என்று மன்னவனையே கொள்ள முடிகிறது.

**பகுத்தறிவு முனை**

**3**

இவ்வமைப்பு கடவுளுக்குச் சமமாக மன்னவன் குறிக்கப் படுவதன்றோ?

மேலும்,

**''முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறைஎன்று வைக்கப் படும்''** **(338)**

என்னும் குறட்பாவில் மன்னன் கடவுளாக மதிக்கப்படு கிறான்.

**''குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்**
**அடிதழீஇ நிற்கும் உலகு''** **(544)**

என்று மன்னவன் அடியை உலகு தழுவும் என்றது இறைவன் மாணடி சேர்தலினும், சற்று பெருமையாகவே காட்டப் பட்டதாகிறது.

இவ்வகைக் குறிப்புக்களால்—கடவுளை மன்னனுக்குச் சமமாகக் காட்டும் குறிப்புக்களால் கடவுட் கொள்கையில் திருவள்ளுவர் இறைவனாம் கடவுளைத்தாழ்த்துவதாகவோ கடவுட் கொள்கையை மறுப்பதாகவோ பொருள் கொள்ள வேண்டியதில்லை. இருபொருள்களின் தகுதிகளையும் பகுத்துணர்ந்து, மார்ந்தர்க்கு இரண்டும் இயல்பாக வேண்டப்படுபவை என்று காட்டுவதே திருவள்ளுவரின் கருத்தாகப் புலனாகிறது. அத்துடன் கடவுட் குறிப்புள்ள இறைவன் இன்றியமையாத ஒன்றாகவோ, அனைத்திற்கும் மேலான தனி உரிமை பெற்ற ஒன்றாகவோ, ஒன்றே ஒன்றாக மேம்பட்டதாகவோ குறிக்கப் பெறவில்லை.

இந்நோக்கில் திருவள்ளுவத்தில் காணப்படும் பகுத்தறிவு முனைகளில் மேலும் இது ஒன்றாகிறது.

**கடவுள்**

உருவங்கொண்டு உலவுவதே கடவுள் என்னும் சொல் லுக்குரிய பொருள் என்று காட்டப்பட்டது. திருவள்ளுவர் 'கடவுள்' என்னும் சொல்லை விடுத்தாலும் உருவக்

கடவுளரை உரைத்துள்ளார். அவற்றை ஒவ்வொன்றாகச் சீர்தூக்க வேண்டும்.

**''பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க**
**நாகரிகம் வேண்டு பவர்''** (580)

என்னும் குறளிலுள்ள ''பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர்'' என்பது சிவபெருமானைக் குறிப்பாகக் கூறுவது என்பர். இது கொண்டும் திருவள்ளுவர் சிவ சமயத்தவர் என்று எழுதினர்; பேசினர். ''முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்[1] என்று நற்றிணைப் பாடலிலும் கண்ணோட்டம் கருதிநண்பருக்காக நஞ்சையும் உண்பர் என்றுள்ளது. இரண்டு இடங்களுமே 'கண்ணோட்டம்' பற்றியது, 'சிவபெருமான் நஞ்சை உண்டார்; உயிருடன் அமைந்தார்' என்னும் கதையில் நஞ்சு ஊற்றிக் கொடுக்கப்படவில்லை. 'கடும் பாம்பு கக்கிய கொடிய நஞ்சு தேவர்களை விரட்டிவர அவர் களுக்காகச் சிவபெருமான் அதனைக் கையால் எடுத்து வாயிலிட்டார்' என்பதே கதை.

எனவே, இக்குறள் சிவபெருமான் பெருமை கூறுவது அன்று. சிவனைப் பற்றிய எக்குறிப்பும் திருவள்ளுவத்தில் இல்லை.

**பகடிக்குள் திருமால்**

திருமாலைக் குறிப்பிடும் குறட்பாக்கள் உள்ளன. ஒன்று 'தாமரைக் கண்ணான்' என்பது.

அழகும் அன்பும் தெளிந்த மனைவியைப் பெற்ற மணாளன் ஒருவன் தனக்குத்தானே பூரித்துப் புன்முறுவல்

---

1. ............ : நற் : 355—6.7

பூத்தபடி நடந்தான். அவனை நெற்றியில் வெள்ளையும் செம்மையுமாகத் திருமண் தீட்டிய திருமாலிய அடியார் கண்டார். 'ஏனப்பா! அப்படி என்ன பெரிய இன்பம் கண்டாய்? உனக்கு நீயே பூரிக்கிறாயே' என்றார்.

அவன் வினா ஒன்றைத் திரும்ப ஏவினான். 'பெரிய வரே! தாங்கள் எத்தனைப் பெரிய இன்பம் என்று கருது கிறீர்கள்?' என்றான். அவர் 'எம்பெருமான் தாமரைக் கண்ணான் உலகமாம் வைகுந்தந்தான் பேரின்பம்' என்றார்.

அவன் ஒரு பகடிச் சிரிப்புடன், 'தம்மால் விரும்பப்படும் மனைவியின் மென்தோளில் சாய்ந்து துயில்வதைவிட, 'தாமரைக் கண்ணான் உலகு இன்பமோ? அவ்வாறாயின் இருவரும் சேர்ந்து காண்போமே' என்றான். 'தாமரைக் கண்ணன் உலகு' என்ற அவன் குரலில் ஒரு பகடி—கிண்டல் பொங்கியது:

> **''தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிது கொல்;**
> **தாமரைக் கண்ணான் உலகு''** (1103)

என்று அவனைப் பேச வைத்த திருவள்ளுவர் திருமாலை எப்பெருமையில் அமைத்துள்ளார்? கூர்ந்து நோக்குவார்க்கு அதில் உள்ள பகடி புரியும். 'இது காதல் கொப்பளிப்பில் இருந்த மணாளனின் உளறல்' என்று கூறலாம்.

**அடியளந்தான்**

மற்றொன்றை இவ்வாறு ஒதுக்க முடியாது. ''மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான் தாஅய தெல்லாம் ஒருங்கு'' (610) இக்குறளில் 'அடியளந்தான்' திருமாவின் வாமனத் தோற்றரைவக் (அவதாரத்தைக்) குறிக்கும்.

குட்டையாய்த் தோன்றி நெடிய மாலாய் வளர்ந்து ஓரடியால் மண்ணுலகையும், மறு அடியால் விண்ணுலகையும் அளந்த கதையைக் குறிக்கிறது 'அடியளந்தான்' என்பது. இது மன்னன் மடி (சோர்வு) இன்றிச் செயலாற்றுவதன் சிறப்பைக் குறிக்கும் 'மடியின்மை' என்னும் அதிகாரக் குறள். மன்னனுடன் திருமால் இணைத்துப் பேசப்படும் குறள். எப்படிப் பொருத்திக் காட்டப்பட்டுள்ளார் அடியளந்தவர்? 'திருமால் தாவி அளந்த மண், விண் இரண்டையும் ஒருங்கு சேர்த்து மடியில்லாத மன்னவன் ஆட்சியில் அடைவான்' என்பதன்றோ திருவள்ளுவர் கருத்து.

**பகுத்தறிவு முனை 4**

இதனிலும் அடியளந்த கடவுளின் வல்லமை மடியில்லாத மன்னனின் திறத்தால் காலால் அளக்காமலே ஒருங்கு கொள்ளப்படுகிறது. இதில் திருமால் பெருமை உள்ளதா? மன்னனோடு ஒன்றித்து நோக்கும்போது இக்கடவுளுக்கு ஏதும் தனித்தன்மையா தோன்றுகிறது? சற்று ஒதுக்கி வைத்துப் பேசும் குரல்தான் ஒலிக்கிறது.

இவை பகுத்தறிவின் முழு வெளிப்பாடு அன்று; என்றாலும் **பகுத்தறிவின் முனை உறுத்துகிறது.**

### அடியில் திருமகள்

தாமரைக் கண்ணான் தேவி தாமரையினாள். தாமரைக் கண்ணான் அடியளந்த நிலையில் அரசனுக்கு அடுத்தபடி ஆனார். தாமரையினாள் அடிக்குள்ளேயே அடங்கிப்போனாள். மாமுகடி என்னும் மூத்ததேவி—மூதேவி சோம்பலில் தங்கியிருப்பாள். மூத்ததேவியின்

தங்கை தாமரையினாள் சோம்பல் இல்லாதவன் தாளில் அடங்கிவிடுவாள்.

**''மடியுளாள் மாமுகடி என்ப; மடியிலான்
''தாள்உளாள் தாமரையி னாள்''** **(617)**

என்று திருவள்ளுவர் தாமரையினாளாம் பெண்மைக் கடவுளைச் சோம்பலற்றவன் முயற்சிக்குள் அடக்கினார். தாள் என்பதற்கு ஆள்வினை—முயற்சி என்றும் பொருள்; கால் என்றும் பொருள். நேரடியாக அப்படிச் சொல்லவில்லை என்றாலும் அதன் குறிப்புப் பொருள் 'தாமரையினாளாம் திருமகள் சோம்பலற்றவள் காலுக்குள் அமைவாள் என்பதுமாகும். வணங்கத்தக்க பெண்மைக் கடவுள் மன்னன் அடியில் அமைக்கப்பட்டமை நினைக்கத்தக்கதே.

**பகுத்தறிவு முனை 5**

திருமகளைச் 'செய்யவள்' என்றும் 'திரு' என்றும் குறிப்பார். திருமகள் திருவாகப் பின்வரும் குறட்பாக்களில் எவ்வெவ்வாறு அமைக்கப்பட்டுள்ளாள்?

**''அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சாரும்
திறனறிந்து ஆங்கே திரு''** (179)

**''வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்கும் திரு''** *(519)*

**''இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு''** *(920)*

எனும் குறட்பாக்களில்

''அறிவுடையாரைச் சாரும்''

''நினைப்பானை நீங்கும்''

''தொடர்பு நீங்கப்படும்''

எனச் சார்வதும் நீங்குவதுமான துணையாகிறதே அன்றி தொழத்தகும் தகுதியில் அறிமுகமாகவில்லை. இவ்வாறு **பகுத்துப்பார்த்துக் கூறியுள்ள முனை**களையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

**சாவம் பெறும் நான்முகன்**

**பகுத்தறிவு முனை**

**6**

படைக்கும் கடவுளான நான்முகன் திருவள்ளுவரால் உலகியற்றியான்' என்று குறிக்கப்பட்டுள்ளதாகச் சொல்வர். அவர் எத்தகுதியில் அமைக்கப்பட்டுள்ளார்?

**''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து**
**கெடுக உலகியற்றி யான் (1062)**

என்றதில் ''உலகியற்றியான் பரந்து கெடுக'' என்பது நான்முகக் கடவுளைச் சாவம் பெறும் அளவில் தள்ளி யுள்ளது. இஃதும் பகுத்தறிவு முனையைச் சாரும்.

மற்றொரு சிறு கடவுள், உடலையும் உயிரையும் கூறு போட்டுப் பிரிக்கும் கூற்றுவனாம் எமன். அவன் எவ்வாறு திருவள்ளுவரால் அமைக்கப்பட்டான்?

**''எமன் கண்டால் பொல்லாதவன் விடமாட்டான்;**
**சாம்பசிவ பக்தனென்றால் தொடமாட்டான்''**

என்று சிவனடியார்கள் பாடுவர். மார்க்கண்டேயன் வாழ்வின் எல்லையில் சிவபெருமான் கருவறையில் போய் இலிங்கத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டான். உயிரைப் பறிக்க வந்த கூற்றுவன் கருவறைக்குள் போய்த் தொட்டிழுக்க அஞ்சி ஈர்ப்புக் கயிற்றை வீசினானாம். இதை மனத்தில் கொண்டு பாடப்பட்டது மேல் வரிகள்.

**பகுத்தறிவு முனை 7**

**கூற்றுவன் தோற்றான்**

ஆனால், அக்கதை அறிவை விலக்கி வைத்துக் கட்டப்பட்ட கதை.

"நோன்பு என்னும் தவ வல்லமையில் முனைந்தவரால் கூற்றுவனை வெல்லவும் முடியும்" என்று உலக நடைமுறைக்குப் பொருந்துவதைத் திருவள்ளுவர்,

**"கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்**
**ஆற்றல் தலைப்பட் டவர்க்கு"** **(268)**

என்றார். 'தவத்தின் ஆற்றலால் உயிரையும் நிலைநிறுத்திக் கொள்பவரைக்கண்டால் கூற்றுவன்குதித்து ஓடிப்போவான்' என்னும் குறிப்புப் பொருளும் இக்குறளில் ஒலிக்கிறது. கூற்றுவனை வெற்றிகாண இராமலிங்க அடிகளாரும் 'சாகாக் கல்வி' பயிலச் சொன்னார்.

கூற்றுவன் என்னும் சிறு கடவுளைத் துறவியிடம் தோல்வியுறுபவனாகக் காட்டியமை ஒரு **பகுத்தறிவு முனையாகும்.**

ஓர் அமைதி சொல்லப்படலாம். மன்னன், மடியில்லாள், நோற்பவர் முதலியோரைப் பெருமைப்படுத்தவே

உயர்ந்த பொருளாகிய கடவுகளைக் காட்டிப் பாடியுள் ளார்; இதனால் இது கடவுளரைத் தாழ்த்தியதாகாது. இவ்வாறு சொன்னால் ஓர் அமைதி போலப் பட்டாலும் அமைந்துள்ள அத்துணை இடங்களிலும் சமநிலையும், சற்றுச் சரிவு நிலையும் தென்படுகின்றமை அந்த அமைதி யைக் கலைத்து விடுகிறது.

வேறு பல வகையிலும் மன்னன் முதலியோரின் பெரு மையைக் காட்டும் வல்லமையுள்ள திருவள்ளுவர் பகுத் தறிவு முனையில் பாடுகிறார் என்றால் கடவுளரைக் காட்டாமலே விட்டிருக்கலாமே? ஏன் கடவுளரை அண்டி இழுத்து அமைத்தார்? இவ்வாறு வினவலாம்,

மாந்தர்க்கு அறிவிக்க வேண்டிய கருத்தைத் தெளி வாகப் புரியவைக்க், அவர்கள் நன்கு அறியுமாறும் மனம் பற்றுமாறும் புகுத்தப்பட்டுள்ள கடவுட் கருத்தைக் காட்டி னார். இதனால் திருவள்ளுவர் கடவுளை விளம்பரம் செய் பவர் ஆகார். முன்னர்க் கூறிய பாவேந்தர் பாரதிக்காகத் விரும்பாத கருத்தையும் பாடிய அணுகுமுறைதான் இதற் கும் பொருந்தும்.

### வையத்துப் பேய்

கடவுள் மறுப்புக் கொள்கையரை வன்மையாகச் சாடு வதற்குப் பலர் பயன்படுத்தும் குறள்.

> **''உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து**
> **அலகையா வைக்கப் படும்''** (850)

என்பதாகும். இக்குறள் ''புல்லறிவாண்மை'' என்னும் அதிகாரத்தில் அமைக்கப்பட்டது. 'இறைவனைத் தொழக் கூறும் முதல் அதிகாரத்தில் அன்று' என்பதை முதலில் காண வேண்டும்.

பின் ஏன் இக்குறளில் உள்ள 'உலகத்தார் உண்டு' என்பதற்குக் 'கடவுள் உண்டு' என்னும் கருத்து கொள்ளப் பட்டது?

இதற்குப் பரிமேலழகர் உரைவிளக்கமே கரணியம்,

''கடவுளும் மறுபிறப்பும் இருவினைப் பயனும் முதலாக உள என்பன பலவேனும்' சாதி பற்றி உண்டு என்று கூறினார்'' என்று 'உண்டு' என்பதற்கு 'கடவுள்' என்று எழுதிய விளக்கமாகும்.

பிற உரையாசிரியர்கள்,

> **''உலகத்தில் அறிவுடையார் பலர்**
> **உண்டு என்பதாகிய ஒரு பொருளை**
> **இல்லை என்று சொல்லும் அவன்''**
>
> — மணக்குடவர்

> **''உலகத்து அறிவுடையார் பலரும்**
> **உண்டு என்பதொரு பொருளை''**
>
> — பரிப்பெருமாள்

> **''பெரியோர் உள்ளதென்று சொல்லுவதை''**
>
> —பரிதியார்

> **''திருந்திய கேள்வியின் உயர்ந்தோர்**
> **தெரிந்து உண்டு என்னும் மெய்ப்பொருளை''**
>
> — காலிங்கர்

என எவரும் கடவுளைக் குறிக்காமை கவனத்திற்கு உரியது. 'காலிங்கர்' என்பார் சற்று விரிவாக, 'செப்பமான கேள்வி யறிவால் உயர்ந்தோர்' என்றும் அவர் 'ஆராய்ந்து' (தெரிந்து) என்றும் விளக்கி ''உண்டு' என்னும் மெய்ப் பொருளை'' ஏற்றார்.

இங்கு மெய்ப்பொருள் என்றது கடவுளைக் குறிப்ப தாகக் கொள்ள இயலாது. 'மெய்ப்பொருள்' என்பதற்கு உண்மைக் கருத்து என்றே பொருள். இச்சொல்லைத் தொல்காப்பியர்[1] ஓரிடத்திலும் திருவள்ளுவர் 5 இடங் களிலும் திரிகடுக ஆசிரியர் நல்லாதனார்[2] ஓரிடத்திலும் 'எண்மைக் கருத்து' என்னும் பொருளில் கையாண்டுள்ளனர். கடவுள் என்ற பொருளில் இல்லை. பிற பழம் நூல்களில் இச்சொல் இல்லை.

திருவள்ளுவரும் ஐந்து இடங்களிலும், (249, 355, 356, 423, 857) (உண்மைக் கருத்து என்னும் பொருளிலேயே கையாண்டுள்ளார்.

எனவே, காலிங்கர் கருத்தும் கடவுளைக் குறிப்பது ஆகாது.

ஆனால், இடைக்காலத்திலிருந்து இன்று வரை காலங் காலமாக 'உலகத்தார் உண்டு' என்பது 'கடவுள் உண்டு' என்று கூறப்படுகிறது. ஒரு கருத்தைக் காலங்கால மாகவோ, அடிக்கடியோ, மேலும் மேலும் மேலுமோ கூறுவ தால் அக்கருத்து உறுதிபடைத்ததாகாது.

அவ்வாறு மீண்டும் மீண்டும் கூறுவதே அக்கருத்திற்கு மறுப்பும், கண்டனமும் அவ்வப்போது எழுந்தமையா லாகும். இதனால், இப்போதும் அப்பொய்க் கருத்தைத் தோலுரித்துக் காட்ட வேண்டியுள்ளது.

**கடவுளை மறுத்தோர்**

நம் நினைவிற்கு எட்டும் காலம் முதல் கடவுள் மறுப்புக் கொள்கையர் பரவலாக இருந்தனர். குறிப்பாகப் பலரைச் சொல்லலாம்.

1. தொல்காப்பியர் : தொல். சொல் : 120
2. நல்லாதனார் : திரி ; 4[illegible]-4

கி. மு. மூன்றாம் நூற்றாண்டுக் காலப்புத்தர் 'கடவுள் இல்லை' என்றார். அவரை வடபுலத்தார் நிரீசுவரவாதி (கடவுள் இல்லை என்று வாதிப்பவர்) என்றனர். அவரைப் பின்பற்றிய புலவர் பெருமக்கள் பலர் சங்ககாலத்தில் அக் கொள்கையுடன் வாழ்ந்தனர். புத்தர் முதலாக இவர் களையும் கூட்டிப் பேய்கள் என்பதற்காகத் திருவள்ளுவர் இக்குறளைப் பாடினாரா? அவர்கள் யாவரும் பேய்களா?

முற்காலச் சமணத்தில் 'கடவுள் உண்டு' என்னும் கோட்பாடு இல்லை. பின்னர்தான் முளைத்தது. அவர்க ளெல்லாரும் பேய்களா? திருவள்ளுவர் அவ்வாறு கருதும் அல்லது சாடும் போக்கினரா?

மேலும் எழுதினால்,

சமண மூலத் தலைவர்கள் 'பஞ்சபரமேட்டிகள்' எனப்படுவர். அன்னோர் வானத்தில் உருவின்றித் திரிபவர். தம் அடியார்களுக்கு அருள வந்திறங்கி அருள்வர்.

அதற்கெனச் சமணர் தாமரை வடிவக்கல்லாம் பீடங் கள் ஐந்தை அமைத்து வைத்திருப்பர். உருவமற்ற அப்பர மேட்டிகள் அவற்றில் அமைவதாகக் கருதி வழிபடுவர்.

திருவள்ளுவர் முதல் அதிகாரத்தில் எட்டு குணங்களை உருவகமாக 'அடி, தாள்' என்று காட்டியுள்ளமை கண் டோம். இதனால், திருவள்ளுவர் சமணக் கோட்பாட்டினர் என்பது கருத்தன்று. அவர் கூறிய தனிக்கருத்து நம்மால் ஒத்துப் பார்க்கப்படுகின்றது என்பதே உண்மை.

**சான்றோர் பேய்களா?**

உலகளாவிய அளவில் நோக்கினால் எத்துணையோ பெருமக்கள், சான்றாண்மையர், அறிவுச் செம்மல்கள்,

வாழ்வியல் பேரொளிகள், 'கடவுள் இல்லை' என்னும் கொள்கையுடையோராக வாழ்ந்துள்ளனர்; வாழ்ந்தும் வருகின்றனர்.

'இல்லை' என்று வெளிப்படையாகச் சொல்லாது போனாலும், அதுபற்றி நினையாமலும், மறந்தும் வழிபடாமலும் காலங்காலமாய்ச் சிறந்துள்ளனர் பலர். அவரனை வரும் பேய்களா?

சாக்ரடீசு, சன்யாட்சென், காரல்மார்க்சு, இலெனின், இங்கர்சால் நம் நாட்டு சவகர்லால் நேரு, பெருந்தலைவர் காமராசர், பெரியார் ஈ. வே. இரா., அறிஞர் பெருந்தகை அண்ணா இவர்களெல்லாரும் பேய்களா?

இவர்கள் பேய்கள் என்றால் 'பேய்' என்னும் சொல்லுக்குப் பொருள் வேறாக வேண்டும். 'பேய்' என்பதற்கு 'அலகை' என்று திருவள்ளுவர் கையாண்டுள்ளார் என்றால் அலகை என்பதற்குரிய பல பொருள்களில் 'எண்ணிக்கை அற்றது' என்பதும் ஒரு பொருள். அப்பொருள் உறுதிப் படும்.

எனவே, பேயாக— 'அலகையாக வைக்கப்படும்' என்றதும் கடவுள் மறுப்புக் கொள்கையரைக் குறிக்காது. 'உலகத்தார் உண்டு' என்பதும் 'கடவுள் உண்டு' என்பதைக் குறிக்காது.

'உண்டு' என்பதில் காட்சிப் பொருளும் உண்டு; கருத்துப்பொருளும் உண்டு. காட்சிப்பொருள் கண்ணில் படும். கண்ணில் படுவதை இல்லை என்பவன் பேயாகலாம்— அலகையாகலாம்.

கருத்துப்பொருள் கண்ணிற் படாது; அறிவிற்குப் படும். அதனை 'இல்லை' என்பது மடமை; மாந்தன் தகுதிக்கு உரியதன்று.

குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்,

**''தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே
உலகம் உண்டு''** [1]

என்றான். இந்த 'உண்டு' என்றதை 'இல்லை' என்பவன் மாந்தன் அல்லன்.

**''பண்புடையார்ப் பட்டு உண்டு உலகம்''** (996) என்றார் திருவள்ளுவர். இந்த 'உண்டு' என்றதை 'இல்லை' என்பவன் அலகை ஆகலாம்.

கும்பகோணத்தில் மாமகம் நிகழ்ந்தது. அதில் வீணாக நேர்ந்த ஓர் அமர்வால் நூற்றுவர் அளவில் மக்கள் இறந்தது 'உண்டு'. இதனை 'இல்லை' என்று இனம் கருதிச் சொன்னார் காஞ்சி மடத்துத் தலைவர். இதனைக் குறித்து ''உலகத்தார் உண்டென்பது இல்லென்பான்'' குறளைக் காட்டி, காஞ்சி அண்ணா வழிவந்த டாக்டர் கலைஞர் பேசினார். இஃது இங்கு நினைவு கூரத்தக்கது.

இவைபோன்று உண்மைக் கருத்துக் களை 'இல்லை' என்பவனையே அக்குறள் பகுத்தறிவு குறிக்கும். ஏனெனில் புல்லறிவாண்மை முனை அதிகாரத்தில் உள்ளது இக்குறள்.

**8**

கடவுள் நம்பிக்கையர் முன் கண்ட 'கடவுள் உண்டு' என்னும் கருத்திற்கு இக் குறளைக் காட்டுவது, கடவுள் மறுப்புக் கொள்கையரின் மறுப்புகளிலிருந்து நழுவிக்கொள்ளக் கையாளும்

---

1. குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் ; புறம் : 182—8,9

அடாவடிப் பேச்சேயாகும். அதற்குத் திருவள்ளுவர் இடம் வைக்கவில்லை. இக்குறள் கடவுள் மறுப்பாளர்க்குத் துணையாகும் ஒரு முனையாகும்.

**காணாதவன் காட்டுவானா?**

துணையாகும் மற்றொரு முனையும் உண்டு. இதே புல்லறிவாண்மை அதிகாரத்தில் இதற்கு முன்னுள்ள குறள்,

**''காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்**
**கண்டானாம் தான்கண்ட வாறு''** (849)

என்பது. இஃதும் புல்லறிவாளனைப் பற்றியதே. **'உலகத்தார் உண்டு'** என்பதற்குக் கடவுள் தொடர்பில் பொருள் கொண்டால் இக்குறளுக்கும் கடவுள் தொடர்பில் பொருள் காணவேண்டும். அவ்வாறு கண்டால்,

கடவுளைக் காணாத ஒருவன் கடவுளைக் காணாத மற்றொருவனுக்குக் கடவுளைக் காட்டப் புகுவான். இதனால் முன்னவன் என்ன குழப்பம் பெறுவானோ அதே குழப்பத்தைப் (கடவுளைக் காணாதவன்) பெறுவான்? எனும் பொருள் வரும். இதனால் கடவுளைக் காண்பதாகச் சொல்வது வெறும் அளப்பு என்னும் கருத்தே கிடைக்கும்.

திருவள்ளுவர் கருத்துப் பேழையாம் திருக்குறளில் குறிப்பாகவும் நெறிப்பாடு தழுவியும் இடம் பெற்றுள்ள பகுத்தறிவின் அணுக்கமான கடவுட்கொள்கை காணப்பட்டது. இஃது **இன்னுமொரு பகுத்தறிவு முனை.** அடுத்ததொரு பகுத்தறிவுச் செம்முனை தெய்வம்பற்றியது.

**தெய்வம்**

'நிறைவாக வாழ்ந்த நிலமாந்தன் தெய்வம்' ஆனான் என்று கண்டோம். தமிழ் இலக்கணப் பெருநூலான தொல்காப்பியம் தெய்வத்தை மாந்தருடன் இணைத்தே பேசிற்று.

> **''தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவி**
> **உயர்திணை மருங்கில் பால்பிரிந்து இசைக்கும்''** [1]

> **''மால்வரை தெய்வம்...........**
> **உயர்திணை மேன''**[2]

என தெய்வத்தை மாந்தரில் உயர்திணையாக அமைத்தது. நான்கும் ஒன்றுமாகப் பகுக்கப்பட்ட தமிழ் ஐந்து நிலத்திற்கும் தனித்தனியே கருப்பொருள்கள் உள்ளன. அவை 14. அவற்றைக் கூறும் இலக்கண நூற்பா,

''தெய்வம், உணாவே, மா, மரம், புள், பறை''[3] எனத் தெய்வத்தையும் ஒன்றாக வைத்தது. ஆனால், முதலில் வைத்தது.

எனவே, தமிழ் மரபில் தெய்வம் என்பது மேம்பட்டுப் புகழுடம்பெய்திய மாந்தனே. அப்பட்டியலில் குறிஞ்சித் தெய்வம் முருகன், முல்லைத் தெய்வம் திருமால், மருதத் தெய்வம் இந்திரன், நெய்தல் தலைவன் வருணன், பாலைத் தெய்வம் கொற்றவை எனப்பட்டனர். இன்னோர் மாந்தரில் நிறைந்து வாழ்ந்து புகழுடம்பில் நிலைத்தவர்களாவர்.

---

1 தொல்காப்பியர் : தொல். சொல் : 4—3
2 தொல்காப்பியர் : தொல். சொல் : 58—2
3 தொல்காப்பியர் ; தொல். பொருள், : 20—1

ஆனால், வடவரால் கட்டப்பட்ட புராணங்களில் இத் தெய்வங்களுக்கு அளவிற்கு மீறிய வல்லமைகள் ஏற்றப் பட்டன. அறிவுக் கொவ்வாத அருளிப்பாடுகள் கூறப் பட்டன. அவை கவர்ச்சியூட்டும் கதையளப்புகள் கட்டப் பட்டன.

இச்சூழல் தொடங்கி இடம்பிடிக்கத் தொடங்கிய பல சூழலில் திருவள்ளுவர் தெய்வத்தை எந்த நோக்கில் மக்கள் முன் வைத்தார்? தனியொரு தன்மையிலோ ஒப்புயர்வற்ற தகுதியிலோ வைத்தாரா? 'தெய்வம்' என்பதை மாந்த னுடன் பொருத்தியபோது என்ன நிலை கொடுத்தார்? இவற்றின் விடைகள் திருவள்ளுவத்தில் பகுத்தறிவு முனையை அடையாளங்காட்டுபவை.

திருவள்ளுவர் ஆறு குறட்பாக்களில் தெய்வத்தை எடுத்தாள்கின்றார். ஆறு மாந்தருடன் பொருத்தப்படும் இடங்களே.

நூலில் அமைந்த வரிசைப்படி நோக்காமல் கருத்து வரிசைப்படி எடுக்க நேர்கின்றது. இவ்வாறு எடுப்பது எடுத்த கருத்தை எளிமைப்படுத்தும்.

> 'மாந்தன் முயற்சி, உடல் வருந்தியேனும்
> செய்யப்பட வேண்டும்; தக்க பயன்கிட்டும்.
> தெய்வத்தால் ஆகாததையும் கிட்டச் செய்யும்'
> என்பதனைக் கூறும் குறள்,

**''தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்''** (610)

என்பது. இதில் தெய்வத்தால் ஆகாததை மாந்தன் முடிப்பான் என்றது, மாந்தனுக்கு அடுத்தபடியில் தெய்வத்தை வைக்கிறது.

**''தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்''** (55) என்பதில் தெய்வம் முற்றிலும் தொழத்தக்க ஒன்றன்று என்று ஒரு பகுதியில் தெய்வம் தள்ளி வைக்கப்படுவதைக் காண்கிறோம்.

தான் பிறந்த குடியை உயர்த்த முயல்பவனுக்குத்
**''தெய்வம் மடிதற்றுத் தான் முந்துறும்''** (1023)

**பகுத்தறிவு முனை 9**

என்றதால் தெய்வம் வரிந்துகட்டிக் கொண்டு உதவுகின்ற தோழன் தகுதியை அடைகிறது,

மாந்தரின் வாழ்வியலில் குடும்பக் கடமை ஐந்து.

'தென்புலத்தார் தெய்வம் விருந்து
ஒக்கல் தான் என்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை' (43)
என்பதால் தெய்வத்தை ஐந்தில் ஒன்றாகவே காட்டியுள்ளார். ஐந்திலும் தென் நிலத்துச் சான்றோர்க்கு அடுத்த நிலைதான் தரப்பட்டுள்ளது.

மற்றவனைப் பற்றிய வேண்டாத ஐயம் கொள்ளாது அவன் அக உணர்வைக் குறிப்பால் உணர்பவனைத்,

**''தெய்வத்தோ டொப்பக் கொளல்''** (702)

என்றார். இங்குத் தெய்வம் மாந்தனுக்குச் சமமாகின்றது. இறைவனை மன்னனுக்குச் சமமாக்கி,

''மக்கட்கு 'இறை' என்று வைக்கப்படும்'' என்றமை போன்றது இது.

**மாந்தனே தெய்வம்**

நிறைவாக,

**"வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்"** (50)

என்றமை, தெய்வத்தை மாந்தன் பட்டியலில் சேர்ப்பதாகிறது.

இவ்வாறாக

மாந்தனுக்கு அடுத்தபடியாக,

தொழப்படாத தள்ளுபடியாக,

வரிந்துகட்டும் தோழனாக,

இல்லறத்தாள் காப்பாற்றும் இரண்டவதாக,

மாந்தனுக்குச் சமமாக

மாத்தனாக

காட்டியுள்ளமை கொண்டு திருவள்ளுவர் தெய்வத்தை எத்தகைய துலாக்கோலில் மாந்தனுடன் வைத்துச் சீர்தூக்கிக் காட்டியுள்ளார் என்பதனை உணரவேண்டும். இவ்வமைப்பு முறையும் **ஒரு பகுத்தறிவு முனையாகும்.**

**செம்பொருள் என்றால்**

இறைவன், கடவுள், தெய்வம் என்னும் மூன்றினையும் திருவள்ளுவர் மேற்கொண்டு கூறியுள்ள இடங்கள் இவையன்றி வேறு இல்லை. முதல் அதிகாரத்தில் தொழத்தக்கதாகக் காட்டியமை ஓர் ஏற்றமே. மற்ற வகையிலும் சமமும் இறக்கமுமேயாகும். மற்றுமொன்றையும் இங்கு கண்டு, இப்பகுதியை நிறைவு செய்யவேண்டும். அது 'செம்பொருள்' என்றது.

'செம்பொருள்' என்றால் கடவுள் என்று சிலர் பேசுவதுண்டு; எழுதினர். திருவள்ளுவர் இரண்டு குறட்பாக்களில் இச்சொல்லை ஆண்டுள்ளார்.

**''பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு''** (358)

'நான் அப்படிப் பிறப்பேன், இவ்வாறு பிறப்பேன்? என்று நம்புவது அறியாமை (பேதைமை); இது நீங்க வேண்டும். நீக்கி எவ்வளவு அறிவு கொள்ளவேண்டும்' சான்றோர் ஆய்ந்து கூறியுள்ள செவ்விய உண்மைப் பொருளைக் கொள்வதே அறிவாகும்.

இதில் கடவுளுக்கு இடம் இல்லை.

மற்றுமோர் குறளாகிய

**''இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்''** (91)

என்பதிலும் சொல்லிய உண்மைப் பொருளே கூறப் பட்டுள்ளது. எனவே, 'செம்பொருள்' என்பது கடவுளாகாது.

**இறைக் கோட்பாடு - வாழ்வியல் கோட்பாடு**

திருவள்ளுவரைக் கடவுட் கொள்கை நோக்கில் அணுகினால் பின்வரும் முடிவுகள் நிறைவு பெறுகின்றன.

திருவள்ளுவப் பெருந்தகை இறை நம்பிக்கை உள்ளவர். அவர் காட்டும் இறை, பகுத்தறிவுப் 'பகவன்'. அது குணங்களில் உருவகம். உருவ அமைப்பன்று. எனவே, 'கடவுள்' என்னும் உருவ உட்பொருள் கொண்டதை அவர் அறி

வுறுத்தவில்லை. அவர் குறிக்கும் இறைப்பயன் வாழ்வின் பயன்களாகும்.

வாழ்வின் பயன்கள் எவை?

திருவள்ளுவர் கருத்தின்படி

'தூய அறிவைப் பெறல்; நிலமிசை நீடு வாழ்தல்; என்றும் எங்கும் துன்பம் இன்மை; இருவினை சேராமை (நீடு வாழ்தல்); மனக்கவலை மாற்றல்; அறம் அல்லாத வற்றைக் கடத்தல்; பொறிகளை அவற்றின் குணத்தில் நிறுத்தல்; பிறவி ஒரு கடல் என்றால் மேற்காணப்பட்ட பயன்களால் நீந்தி நிறைவு பெறுதல்.

எனவே, திருவள்ளுவரின் இறைக்கோட்பாடு வாழ்வியற் கோட்பாடாகும்.

# 7. சாதி ஒழிப்புக் கொள்கை

திருவள்ளுவரின் இறைக்கொள்கை காணப்பட்ட முன் பகுதியின் தலைப்பு 'கடவுட் கொள்கை' என்று குறிக்கப் பட்டது. அத்தொடரில் 'கடவுள்' என்னும் சொல் அதற் குள்ள உள்ளீட்டுப் பொருளில் அமைக்கப்படவில்லை. பொதுவில் மாந்தர்பால் வழங்கப்படும் பொதுக் குறியீட்டுச் சொல்லாகவே அமைக்கப்பட்டது. அதுபோன்றே இப் பகுதித் தலைப்பிலும் 'சாதி' என்னும் சொல் அமைக்கப் பட்டுள்ளது.

### சாதி

'ஜாதி' என்னும் வடசொல்லின் தமிழ் எழுத்து உருவம் 'சாதி' என்னும் சொல். அது வடமொழியில் நன்மை, சிறப்பு, தொகுப்பு என்னும் பொருள்களைத் தரும். அப் பொருளுடன் தான் தமிழில் அச்சொல் புகுத்தப்பட்டது. தொல்காப்பியரும்,

''நீர்வாழ் சாதியும்''[1] என்று இரு இடங்களில் கையாண் டார். 'உயிரினத் தொகுப்பு' என்பதே இங்கு 'சாதி' என்ற தன் பொருள். கடியலூர் உருத்திரங்கண்ணனாரும்,[2]

---

1 தொல்காப்பியர்: தொல். பொருள்: 583,608

2 கடியலூர் உருத்திரங்கண்ணனார்: பெரும்பாண்: 229

"கடுப்புடைப் பறவைச் (கொட்டும் குளவி) சாதி" என்று பறவை இனத்தைப் பாடினார்.

மாந்தருள் பிறப்பால் பிரிவினைப் படுத்தியவர் வடமொழி ஆரியரேயாவர். வடமொழிப் பேராசான் இராகுல சாங்கிருத்தியாயனும்

**"இந்த வசிட்டரும் விசுவாமித்திரரும்**
**வந்துதான் சாதி வேற்றுமையைத்**
**தொடங்கி வைத்தார்கள்"[1]**

என்று ஆராய்ந்து கண்டு எழுதினார். அவ்வேற்றுமையைத் தமிழ் மண்ணிலும் புகுத்தினர். அதற்கு முன் தமிழர் பிறப்பால் உயர்வு தாழ்வின்றியே வாழ்ந்தனர். இப்பிறப்புப் பிரிவை வடமொழியில் வருணம் (நால்வருணம்) என்றனர். இச்சொல்லும் 'சாதி' என்னும் சொல்லும் இப்பொருளில் சங்க இலக்கியங்களில் இல்லை.

உயிரினப் பிரிவு என்று பொதுப்பொருட் சொல்லாகிய 'சாதி' என்பதையே 'வருணம்' என்னும் கருத்தில் கையாண்டனர்.

**நால்வகை வேறுபாடு**

வடவர் பிறப்பால் நால்வகை வேறுபாட்டைத் தமிழ் மண்ணில் புகுத்தி நிலைக்கவும் செய்தனர். அது, தாம் உயர்ந்தவர் என்றமைத்துக் கொள்ளச் செய்ததாகும். அது தமிழ் மண்ணில் பதிந்துவிட்டது.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கல்விச் சிறப்பைப் பாடினான். அப்பாட்டு,

---

1 இராகுல சாங்கிருத்தியாயன்: வால். கங்கா: பக்கம் 227 தமிழ் மண்ணில் பதிந்துவிட்டது.

**"வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்**
**கீழ்பால் ஒருவன் கற்பின்**
**மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே"[1]**

என்பது. இதில் பிறப்பால் வேறுபாட்டைக் குறிக்க 'பால்' என்னும் ஒரு பொதுச் சொல்லைக் கையாண்டார். 'பால்' என்பதற்குச் 'சாதி' என்னும் பொருள் இல்லை. மன்னன்" வேற்றுமை தெரிந்த" என்று உடல் நிறத்தால் (வருணத்தால்) மொழியால், உடையால், பழக்க வழக்கங்களால்வேற்றுமை தெரியக்கூடியவன் என்றார். அவருக்குள் கீழான பிரிவினர் (சாதியினர்) மேலான பிரிவினர் (சாதியினர்) என்ற உயர்வு தாழ்வையும் குறித்தார். எனவே, அவர் காலத்தில் பிறப்பால் உயர்வு தாழ்வு மண்ணில் பதிந்திருந்ததை அறிகிறோம். இச்சூழலில்தான் திருவள்ளுவர் இக்கருத்தை அணுகினார்.

அவரும் கல்விச் சிறப்பை அப்பாண்டிய மன்னன் பாங்கிலேயே குறித்தார்.

**"மேற்பிறந்தா ராயினும் கல்லாதார்; கீழ்ப்பிறந்தும்**
**கற்றார் அனைத்திலர் பாடு" (409)**

என்றும், பெருமை சிறுமை நிலையில்,

**"மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்; கீழிருந்தும்**
**கீழல்லார் கீழல் லவர்" (973)**

என்றும் பாடினார்.

இவ்வாறு "மேற்பிறந்தார், கீழ்ப்பிறந்தார், மேலிருந்தும், கீழிருந்தும்" என்று நாட்டிலிருந்த பிறப்பின் பிரிவைச்

---

1 ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்: புறம் 183-8-10.

சுட்டினார். ஆனால், 'சாதி' என்னும் பொருள் தரும் 'பால், இனம்', என்னும் சொற்களைக் கையாளவில்லை.

பாண்டிய மன்னனின் இக்கருத்தை ஒட்டி எழுதியவர் - அப்பாடலின் முன் மூன்று அடிக்கருத்துக்களை அப்படியே ஒட்டி எழுதினார்.

அடுத்துப் பாண்டியன் பாடிய

**''பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்**
**சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும்''**

என்னும் அடிகளைக் கூர்ந்து பார்த்துள்ளார். அச் சொல் அமைப்புக்களையே கொண்டு, ஆனால், மாற்றுக் கருத்தாக,

**''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்''** (972)

என்றொரு குறளைப் படைத்தார். இப்படைப்பு மூன்னுள்ள பாண்டியன் கருத்து ஓரளவில் ஒத்து, பேரளவில் புது மாற்றுப்பொருள் தருவதாகும்.

**பகுத்தறிவு முனை 10**

பாண்டியன் உடன்பிறப்புகளுக்குள் தாய் காட்டும் மனத்திரிபைத்தான் குறித்தான். திருவள்ளுவரோ, தமிழ் மண்ணில் பதியப்பட்டிருந்த நாற்பால் - நாற்சாதி - வேறு பாட்டைச் சாடும் கருத்தில்,

**''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்''**

என்று 'வேற்றுமை தெரிந்த நாற்பால்' என்பதை மறுத்து 'எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒத்ததே' என்று சாதிக் கோட்பாட்டைச் சாடி ஒரு **சமுதாயப் பகுத்தறிவு** முனையைக் காட்டினார்.

மேலும்,

அவனவன் அவனவனுக்கு உரிய அல்லது உகந்த தொழிலைச் செய்வான். அவ்வாறு செய்யும் தொழில் காரணமாகச் சிறப்பு சொல்வது ஒவ்வாதது என்று உயர்வு தாழ்வுக் கருத்தைச் சாடினார்.

இக்குறள் பாண்டியன் பாடலுக்கு மட்டும் மாற்றுக் கருத்தன்று. கடுவன் இளவெயினனார் பாடிய பின்வரும் பாடலுக்கு நேர்முக மறுப்பும் ஆகும்.

**''சிறப்பினில் உயர்வாகலும்**
**பிறப்பினில் இழிபாகலும்''[1]**

'முன் செய்த நல்வினையின் சிறப்பால் உயர்ந்த குலத்தவர் ஆதல்; தீவினையினால் தாழ்ந்த பிறவியர் ஆதல் உண்டு' என்கின்றன இவ்வடிகள். முருகன் தன்னையன்றிப் பிறரை இவ்வாறு அமைத்தானாம். தமிழ்க் கடவுளாம் முருகனே குலத்தில் உயர்வையும், இழிவையும் தரும் வல்லமையுள்ளவன் என்றார்.

இக்கருத்தைத் தகர்த்துப் பொடியாக்குவது போன்று திருவள்ளுவர்,

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்றார். மேலும் நொறுக்கித் தூளாக்குவது போன்று,

**'சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமையான்''**

என்றார்.

---

1 கடுவன் இளவெயினனார்: பரி: 5-19,20

இவ்வொரு குறள் தமிழ் மண்ணில் தொன்மைத் தமிழ் மக்கள் தகவை முத்திரையாக்கும் குறளாகும். அத்துடன் அவர் பதித்த சாதி பற்றிய பகுத்தறிவு முத்திரையுமாகும்.

ஆனால், சாதிக்குரிய எச்சொல்லையும் கையாளாத திருவள்ளுவர் ஆரிய இனத்தவருக்குரிய 'பார்ப்பான்' என்னும் சாதிப் பெயரைக் கையாண்டு ''பார்ப்பான் பிறப் பொழுக்கம் குன்றக் கெடும்'' என்று ஏன் எழுதினார்? இவ்வினா ஒரு பெருங்கருத்தை வெளிப்படுத்த உதவும் வினா.

**மனுவின் விதிப்பு**

திருவள்ளுவர் காலச் சூழலில், வடவர் தமிழ் மண்ணில் பதித்த கருத்துக்கள் பல. அவற்றில் ஒன்று என்று மட்டும் குறிக்க முடியாமல்—வாய்ப்பு கிடைக்கும் இடமெல்லாம் தம் இனத்தை உயர்த்த ஆழமாகப்பதித்த கருத்து நோக்கத் தக்கது. அச்சூழலில் மனு கருத்துக்கள் மிகப் பரவலாகவும், ஆழமாகவும் தமிழரிடையே மதிப்பைப்பெறும் அளவிலும் பரப்பப்பட்டிருந்தன. அவற்றுள் ஒன்று,

> **''தம் குல ஒழுக்கமற்ற பிராமணன் கூட**
> **மன்னனுக்குள்ள இடத்திலிருந்து நீதி**
> **(அறம்) உரைக்கலாம்''**

என்பது. (இதனைத் தொடர்ந்து எழுதப்பட்டுள்ள கருத்தைப் பின் காண வேண்டும்.)

மனுசுமிருதிக் கருத்துக்கள் தமிழரிடையே நம்பத் தகுந்த அளவு பதிய வைக்கப்பட்டிருந்தன. இதனை உணர்ந்த திருவள்ளுவர் இது ஒழுக்கத்திற்கு மாறுபட்ட கருத்து எனக் கொண்டார். **''ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்''** (131) என்ற கருத்துடையவர் திருவள்ளுவர்.

அதனால் பார்ப்பனர் ஒழுக்கக்கேட்டை ஏற்கும் மனுவின் கருத்து தமிழினத்திற்கு மட்டுமன்று, மக்களினத்திற்கே கேடு பயப்பது. அதனால் திருவள்ளுவர் 'ஒழுக்கமுடைமை' அதிகாரத்தில் 'பிராமணனின்...... பார்ப்பானெனின் ஒழுக்கக்கேடும் கெடுதி தருவதே' என்பதை அறிவுறுத்தவே மேற் காணப்பட்ட குறளை எழுதினார். குறிப்பாகப் 'பார்ப்பான்' எனும் சொல்லையும் பயன்படுத்தினார் என லாம். இக்குறளில்,

> **'பார்ப்பான் (பிராமணன்) தன் குல**
> **ஒழுக்கம் குன்றினால் அவன் தகுதி**
> **கெடும்'—**

என்றார் ஒழுக்கங்கெட்டதால் தகுதியற்றவன் அறம் உரைக்கத் தகுதி உடையவன் 'அல்லன்' என்பதையும் குறிப் பாகக் கொள்ளவைத்தார். இக்கருத்து மனுசுமிருதி விதித்ததை விலக்குவது. இவ்வாறிருந்தும் திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் என்ன எழுதினார்?

**மனு வழி வள்ளுவமா?**

பரிமேலழகர் திருக்குறள் உரைத் துவக்கத்தில் உரைப்பாயிரம் என்று அறத்தை விளக்கி எழுதினார். அதில் ''அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம். அஃது **ஒழுக்கம்,** வழக்கு, தண்டம் என மூவகைப்படும்'' என்றார். மனுசுமிருதி 'பார்ப்பனன் ஒழுக்கம் கெட்டாலும் அறம் சொல்லலாம்' என்கின்றது. திருவள்ளுவரோ அதற்கு மாறாக 'ஒழுக்கங்கெட்டவன் பார்ப்பனனே ஆனாலும் அறத்தகுதி உடையவன் அல்லன்' என்றார். திருவள்ளுவர் கூறிய இது மனு முதலிய நூல்களில் விதித்தன சொல்லுதலா? விலக்குதலா?

தொடர்ந்து பரிமேலழகர் எழுதினார் :

> ''அவற்றுள் ஒழுக்கமானது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரியம் முதலிய நிலைகளினின்று அவ்வவற்றிற் கோதிய அறங்களின் வழுவாது ஒழுகுதல்''

—என்றதில் ஒழுக்கம் பார்ப்பனருக்கும் வலியுறுத்தப் பட்டுள்ளது. ஆனால், மனுநூலோ மற்றோரிடத்தில் முன்கண்டபடி பார்ப்பனன்கூட குல ஒழுக்கங்கெட்டாலும் அறம் சொல்லலாம் என்கின்றது. இது முன்னுக்குப் பின் முரண். இந்த முரண் வேண்டுமென்றே அமைக்கப்பட்டது என்பதை முன்கண்ட தொடரைத் தொடர்ந்து வரும் கருத்தை இங்குக் காண்பதால் அறியலாம்.

''பார்ப்பனன்கூட'' என்று 'கூட' போட்டு அடுத்து,

> ''ஆனால், தான்காம் வருணச் சூத்திரன் மட்டும் நீதி வழங்கக் கூடாது. இதைமீறிச் சூத்திரன் நீதி செய்தால் நடுச்சேற்றில் அகப்பட்ட பசுவைப் போல நம் கண் முன்னே துன்பம் அடையும்'. என்கிறது மனுநூல். ஆம். சூத்திரனைத் தாழ்த்துவதற்காகவே, அறம் செய்யத் தகுதி யற்றவன்—எந்த நிலையிலும் தகுதியற்றவன்...... ஒழுக்கம் கெடாதவனாக இருந்தாலும் தகுதி யற்றவன் என்பதற்காகவே பார்ப்பனன் ஒழுக்கத் திலிருந்து தவறலாம் என்றும் முரணாகக் கூறியது மனுநூல்.

**பகுத்தறிவு முனை 11**

சாதி வேற்றுமைக்குள்ளும் ஒழுக்க வேற்றுமை காட்டும் கருத்து உலவவிடப் பட்டுள்ள சூழலை அறிந்துதான் பொது வாக அனைத்து மக்கட்கும் ஒழுக்கத்தை வலியுறுத்தும் திருவள்ளுவர் குறிப்பாக, தவறக்கூடாது; தவறினால் தகுதி கெட்ட வன்; தகுதியற்றவன் என்றார்.

இக்குறளால் மற்றொரு வகையிலும் பார்ப்பனர்க்கு ஒழுக்கத்தை வலியுறுத்தினார். ஒத்து' என்றால் வட மொழி நான்மறை......வேதம். நான்மறையை ஓதுவது பார்ப்பனரின் குலக்கடமை. ஓதுவது மட்டுமன்று ஓதியதை மறக்காமலிருப்பதும் கடமை என்று வேதம் விதிக்கிறது. மறந்தவர்களும் தமிழ் மண்ணில் உலவியிருக்கவேண்டும். அன்னாரை நினைவுகூர்ந்த திருவள்ளுவர்,

''மறப்பினும் ஒத்துக் கொளலாகும்'' என்றார். மறந் தாலும் மீண்டும் கற்று ஓதலாம். ஆனால், மறக்கவும் கூடாத கடமை 'ஒழுக்கம் தவறாமை' என்று வலி யுறுத்தினார்.

எனவே,

**''மறப்பினும் ஓத்துக் கொளலாகும்; பார்ப்பான்**
**பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்''** (972)

என்னும் குறள் மனுவை மறுத்து எழுதப்பட்டதாகும். 'ஒழுக்கம் உடைமை குடிமை' என்று ஒழுக்கத்தால் மக்கள் அனைவரையும் பொதுமைப்படுத்தும் கருத்துடைய குறள் இது. ஒழுக்கத்தின் மூலம் சாதி உயர்வு வாழ்வை ஒதுக்கித் தள்ளும் குறள். இதனால் இக்குறள் **பகுத்தறிவு முனையாக** வும் அமைகின்றது.

**அந்தணர் சாதிப்பெயரா?**

அந்தணர் என்னும் சொல் அழகுச்சொல்; குளுமைச் சொல்; அழகைக் குளுமை தழுவிய சொல். அம்—அழகு; தண்மை—குளுமை. இவ்விரண்டும் இணைந்து அடைமொழியாகி

''அந்தண் பாதிரி''[1]

''அந்தண் பொய்கை''[2] எனப் பாதிரி மலரையும், பொய்கையாம் குளத்தையும் மட்டுமன்றி,

''அந்தண் புலவர்''[3] என்று மாந்தரில் புலவரையும் சிறப்பித்தனர். இச்சொல்லே 'அர்' என்று பலரைக் குறிக்கும் இறுதிநிலை பெற்று 'அந்தணர்' ஆகியது. பரிமேலழகர் உரைப்பாயிரமாக எழுதிய தொடர்கள் முன்னே காட்டப்பட்டன. அதனை மீள் பார்வையிட்டால் அதில் ''அந்தணர் முதலிய வருணத்தார்'' என்றிருப்பதைக் காணலாம். 'இங்கு அந்தணர்' என்னும் சொல் பார்ப்பனர்—பிராமணர் என்னும் பொருளில் எழுதப்பட்டுள்ளது. இவ்வாறு பரிமேலழகர் மட்டும் எழுதவில்லை. அவருக்கு முன்னர்த் தோன்றிய சங்ககால நூல்களிலும் இச்சொல்லைக் காணலாம். இப்பொருளன்றி பொதுப் பொருளிலும் காணப்படும்.

எனவே, சங்ககால அளவிலேயே 'பார்ப்பனர் அந்தணர் என்று குறிக்கப்பட்டனர் மற்றொன்று தலையிலடிப்பது;

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பாலை பாடிய பெருங் கடுங்கோ | : | அகம் : | 99-6 |
| 2. | கயத்தூர் கிழார் | : | குறு : | 354-4 |
| 3 | விளம்பிநாகனார் | : | நான் : | 91-1 |

போன்று தொல்காப்பியத்தில் உள்ளது. அஃது அப்பட்டமாக அந்தணரைப் பார்ப்பனராக அடையாளங் கூறுகிறது.

**''நூலே, கரகம், முக்கோல், மணையே**
**ஆயுங் காலை அந்தணர்க் குரிய''[1]**

என்னும் நூற்பா பூணூல், மந்திர வழிபாட்டின்போது வழிபடும் நீர்கொண்ட கெண்டி, மும்முனைத் தடி, அமரும் பலகை என நான்கும் அந்தணர்க்குரிய அடையாளங்கள் என்கின்றது. பொதுவாக இவை நான்கில் பின் மூன்று துறவிகளுக்கு உரியனவாயினும் 'ஆயுங்காலை' என்றதனால் இவை மூலத்தில் பார்ப்பனருக்குரிய அடையாளம் என்றாகின்றது. மற்றும் இந்த நூற்பாவை அடுத்துத் தொடர்ந்து வரும் 15 நூற்பாக்களில் முறையே அரசர் சின்னங்கள், கடமைகள், வணிகர் கடமைகள், வேளாளர் கடமைகள் குறிக்கப்பட்டுள்ளன. எனவே நால்வரின் சாதி பற்றிய குறிப்புகளே இவையாகின்றன. எனவே பூணூல் முதலாகக் கொள்ளும் பார்ப்பனரை அந்தணர் என்றே தொல்காப்பியம் காட்டுகிறதா?

### தொல்காப்பிய இடைச்செருகல்

இந்நூற்பாக்கள் கொண்டு பார்ப்பனரை அந்தணர் என்றும், அந்தணர் சாதிப்பெயர் என்றும் கொள்ள முடியாது. ஏனெனில், இப்பதினைந்து நூற்பாக்களும் வேண்டுமென்றே பார்ப்பனப் புலவரால் ஆக்கப்பெற்று இடைச்செருகலாகச் சேர்க்கப்பட்டவை.

நம் கருத்துக்கு ஒத்து வராத காரணத்தால் இடைச்செருகல் என்று தள்ளிவிடுவதா? இவ்வாறு வினவுதல்

1. தொல்காப்பியர் ; தொல்—பொருள் : 615.

பொருந்தும். இடைச்செருகல் என்பதற்கு அடையாள மிருந்தால் தள்ளலாம் அன்றோ?

நால்வகைச் சாதி அடையாளங்களைக் கூறும் நூற்பாக்கள் தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் நூற்பா 612 முதல் 629 முடிய உள்ளவை. 612-க்கு முன்னரும் 629-க்குப் பின்னரும் எவ்வகைக் கருத்துக்கள் உள்ளன என்று பார்வையிட்டால் ஓர் உண்மை புலப்படும்.

611 வரை உள்ளவை பலவகை மரபுச் சொற்களைப் பொருளுடன் குறிக்கின்றன. 630ஆம் நூற்பாவில் மீண்டும்

**"புறக்கா ழனவே புல்லெனமொழிய"**

என்று மரபுச்சொல் தொடர்கின்றது.

இதனைத் தொடர்ந்து மரபுச் சொற்கள் உள்ளன? இடையில் நால்வகைச் சாதிச் சின்னங்களும் கடமைகளும் வந்தன? ஏன் வர வேண்டும்? தொடர்ச்சியை வெட்டிவிட்டு இடையே பொருத்தமற்றுப் புகுந்துள்ளன. இடைவெட்டு பளிச்சிட்டுத் தெரிகின்றது.

எனவே,

சாதிப் பிரிவையும், அவற்றிடையே வேறுபாட்டையும், அவற்றிலும் பார்ப்பனருக்குச் சீரையும், முதலிடத்தையும் தரும் உள்நோக்கில் புகுத்திப் பதியவைக்கும் செயலே நேர்ந்துள்ளது. இடைச்செருகல் என்பது தெளிவாகின்றது.

**வைசிகன் புகுந்தான்**

இத்தெளிவிற்கு உறுதி ஊட்டுவதாக இப்பதினெட்டு நூற்பாக்களில் ஒரு நூற்பா உள்ளது.

அது:

**"வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை"**[1]

என்பது. அஃதாவது மூன்றாம் சாதியானாகிய வாணிகன் **'வைசிகன்'** என்று வடசொல்லால் குறிக்கப்படுகிறான். இவ்வடசொல் அக்காலத்தில் புகுத்தப்படாதது. சங்க நூல்களிலும் இல்லை; அவற்றிற்குப் பிற்பட்ட சிலப்பதி காரத்திலும் இல்லை. சிலப்பதிகாரம் எவர் குடும்ப வரலாற்றைக் கூறுவது? வாணிக இனத்துக் கண்ணகி கோவலன் வரலாற்றைக் கூறுவது அன்றோ? வாணிகக் குடும்ப வரலாற்றை வடித்த சிலப்பதிகாரத்தில் இல்லாத வடசொல் அக்காப்பியத்திற்கு 1500 ஆண்டுகள் முற்பட்ட தொல்காப்பியத்தில் எவ்வாறு வந்தது? (சிலம்பில் வேறு பல வட சொற்கள் உள்ளன.)

விடை:

தமிழ் இலக்கணப் பெருநூலில் சாதி வேற்றுமையைப் பதிந்துவிட வேண்டும்; அதை வைத்துத் தமிழர்களை நம்ப வைக்கலாம் என்ற முனைப்புடையோர் எழுதிச் சேர்த் தனர். இச்சேர்ப்பில் 'பார்ப்பனர் உயர்ந்தவர்' என்பதை யும், 'அவர்தாம் அந்தணர்' என்பதையும் கள்ள வழியில் பதிவாக்கினர். இது இடைவெட்டுச் செயலாகும். எனவே, இப்பதினெட்டு நூற்பாக்களும் இடைச் செருகல்களே என் பதில் ஐயமில்லை.

இவை கொண்டு பார்ப்பனர் என்போர் அந்தணர் என்று கொள்ள முடியாது.

---

1. தொல்காப்பியர் தொ. பொருள் : 622

**சிலம்பில் சான்று**

இவ்வகை நோக்கத்தாரின் இடைச்செருகல் மேலும் ஆழமாகத் தொடர்ந்தது. இதற்கு ஒரு சான்றாகச் சிலப்பதிகாரம் நம்முன் நிற்கிறது.

**''விரிகுடை தண்டே குண்புகை காட்டம்**
**பிரியாத் தருப்பை பிடித்த கையினன்**
**நாவினும் மார்பினும் நவின்ற நூலினன்''[1]**

இவ்வடிகள் சிலம்பில் உள்ளவை. இதில் பார்ப்பனராம் முதல் சாதியாருக்குரிய அடையாளப் பொருள்களாக குடை, முக்கோல், நீர்க்கெண்டி, காட்டம் என்னும் சமித்து (அஃதாவது வேள்விக்குழியில் நெய்யிட்டு தீ வளர்க்கப் பயன்படுத்தும் அரசு, மா மரத்துக் குச்சிகள்) **கையை விட்டு நீங்காத தருப்பை**, நாவில் நான்மறை நூல், மார்பில் பூணூல்களாகக் காட்டப்பட்டுள்ளன.

தொல்காப்பிய இடைச் செருகலில் காட்டியவற்றின் மேலும் இதில் குடை கூறப்பட்டது. காய்ந்த குச்சிகள், குறிப்பாகத் தருப்பை, நான்மறை காட்டப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது. 'நூல்' என்று பொதுவாகச் சொன்னால் பூணூலா (?) நான்மறை நூலா(?) என்னும் ஐயம் வரா திருக்க இரண்டும் தனித்தனியே காட்டப்பட்டுள்ளன. முன்னினும் விரிவான பதிவுகள் இவை. 'கையை விட்டு அகலாத தருப்பைப் புல்' ஒரு முத்திரைப் பதிவு அன்றோ?

இவ்வடிகள் அழற்படு காதையில் உள்ளவை என்று கண்டோம். அக்காதையில் எங்கு உள்ளன? எக்கருத்தில் உள்ளன?

---

1. இளங்கோவடிகள் : சிலம்பு : அழற்படுகாதை— 31—33.

மதுரை தீப்பிடித்ததும் பலவகையினரும் நகரைவிட்டு நீங்கினர். சிறு தெய்வங்களாம் பூதங்களும் நீங்கின. அவற்றவற்றின் தலைமைப் பூதங்களும் நீங்கின. பூதங்களுள்ளும் நான்கு சாதிகள் கூறப்பட்டன. இதனை இளங்கோவடிகள் ஏற்றவராக எழுதியுள்ளார். ஆனால், இளங்கோவடிகள் பொதுவாகவும் ஓரளவு குறிப்பாகவும் ஒவ்வொரு பூதத் தெய்வத்தை வர்ணித்துள்ளார். பார்ப்பனப்பூதக் கடவுளை வர்ணிக்கும் பகுதி உள்ளது. அவற்றிடையே அமைந்ததுதான் மேலே கண்ட மூன்று அடிகள்.

சிலப்பதிகாரக் காப்பியப் பதிப்பை எடுத்து நோக்குவீர்களானால் அழற்படுகாதையில் மட்டும் ஆங்காங்கே பல அடிகள் [.........] குறியிட்டுக் காட்டப்பட்டிருக்கும். இதற்கு அடிக்குறிப்பு எழுதிய பதிப்பரசர் உ.வே சா. அவர்கள்,

''[.........] இந்த அடையாளத்துக்கு உட்பட்ட பகுதிகள் சில பிரதிகளில் இல்லை'' என்று காட்டியுள்ளார்.

மேலே கண்ட மூன்று அடிகளும் இக்குறிகளுக்குள் உள்ளவை. அஃதாவது சில (பிரதிகளில்) ஓலைச்சுவடிப் படிகளில் இல்லாதவை; இதற்கு என்ன பொருள்? இவை இல்லாத ஓலைச்சுவடிகள் தொன்மையானவை. குறிகளுக்குள் உள்ளவை இடையே பின்னர் செருகப்பட்டவை என்பதுதானே?

இவ்விடைச் செருகல் தொல்காப்பியத்தின் இடைச் செருகலை வழிமொழிவதுடன் பார்ப்பன அழுத்தத்தையும் காட்டுவதாகும். இதனைக் காட்டவே சிலம்புச் செய்தி குறிக்கப்பட்டது.

எனவே, தொல்காப்பியத்து இடைச்செருகலை நீக்கித் தான் நோக்கவேண்டும். இந்நோக்கில் அந்தணர் பார்ப்பனராகார்.

ஆனால், தொடர்ந்து உருப்பெற்ற இலக்கியங்களில் 'அந்தணர்' பற்றி நோக்கவேண்டியுள்ளது.

"அந்தணர் வேள்வி ஓர்க்கும்" [1]

"அந்தணர் வேதம் பாட" [2]

"அருமறை நாவின் அந்தணர்" [3]

"ஒத்துடை அந்தணர்" [4]

"அழல் புறந்தரூஉம் அந்தணர்" [5]

"அந்தணர்க்கு ஒத்துடைமை ஆற்றமிக இனிது" [6]

இவை போன்று மேலும் உள்ளவை பார்ப்பனரை அந்தணர் என்னும் சொல்லால் குறிக்கப்பட்டது என்பதை மறுத்தற்கில்லை.

மற்றொரு நோக்கில்,

**துறவு அந்தணர்**

**"எரித்தரு கதிர்தாங்கி ஏந்திய குடைநீழல்**
**உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்**
**நெறிப்பட அவலசை இவேறுஓரா நெஞ்சத்துக்**
**குறிப்பேவல் செயல்மாலை கொளைநடை**
**அந்தணீர்"** [7]

---

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | நக்கீரர் | : | முருகு | : | 96 |
| 2. | மாங்குடி மருதனார் | : | மது.கா | : | 656 |
| 3. | நல்லூர் நத்தத்தனார் | : | சிறுபாண் | : | 204 |
| 4. | மருதன் இளநாகனார் | : | கலி | : | 69-5 |
| 5. | கபிலர் | : | புறம் | : | 122-3 |
| 6. | பூதஞ்சேந்தனார் | : | இனிய | : | 7-1 |
| 7. | பாலை பாடிய பெருங்கடுங்கோ | : | கலி | : | 9-2-4 |

என்றும் கலித்தொகை அடிகள் வெப்பமிக்க பாலை நிலத்தில் வருவோரைக் குறிப்பன. எனவே, வெய்யிலுக்குக் குடை, உரியில் வைத்துத் தோளில் தொங்கவிடப்பட்ட குடிநீர்ச் செம்பு, துறவிக்குரிய முக்கோல் கூறப்பட்டன. இவ்வர்ணனை பார்ப்பனரை குறிப்பதன்று. பூணூல், தருப்பை, நான்மறை குறிக்கப்படாமையும் இதனை அறிவிக்கிறது. எனவே துறவிகளையே குறிக்கும்.

இவ்வாறு பார்ப்பனத் துறவிகளும் குறிக்கப்பட்டனர். பார்ப்பனர் அல்லாத — நான்மறைக்கு எதிர்ப்பான — நான்மறையைப் புறக்கணித்த துறவியரும் 'அந்தணர்' என்று குறிக்கப்பட்டனர்.

**''குன்று குயின்றன்ன அந்தணர் பள்ளி''** [1]

என்று மாங்குடி மருதனார் பாடினார். இதில் 'பள்ளி' என்னும் சொல் உள்ளது. இச்சொல் 'இடம், படுக்கை' என்னும் பொருள்களைக் கொண்டது. 'இடம்' என்ற பொருளில் துறவியருள் பௌத்தரும், சமணரும் தங்கும் இடங்கள் பௌத்தப் பள்ளி, சமணப்பள்ளி எனப்படும்.

**''புறங்காக்கும் கடவுட் பள்ளி''** [2]

என்பதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் ''பௌத்தப் பள்ளி'' என்று எழுதினார். ஆனால், அவரே மேலே கண்ட ''அந்தணர் பள்ளி'' என்பதற்குப் 'பிரமவித்துக்கள் இருப்பிடம்' என்று பள்ளியை (சமணர், பௌத்தர் பள்ளியை) விடுத்து பார்ப்பனத் துறவியரை எழுதினார்.

---

1. மாங்குடி மருதனார் : மது.கா: 457
2. மாங்குடி மருதனார் : மது.கா: 467

இவ்வாறு 'பள்ளி' என்றிருந்தும் சமண, பௌத்த இருப்பிடம் என்று எழுதாமல் பார்ப்பனர் குறிப்பில் எழுதியமை நச்சினார்க்கினியரைப் பற்றி நினைக்க வைக்கின்றது.

**நச்சினார்க்கினியரின் நச்சு**

அவர் பாரத்துவாச கோத்திரத்துப் பார்ப்பனர். அவர் 'அந்தணர்' என்பதைப் 'பார்ப்பனர்' என்று காட்டும் முனைப்புடையவர். அதனை வலிந்து பையப்பையக் கருத்தைக் கூட்டியும் காட்டியவர் என்பதை அறிய முடிகிறது.

'அந்தணர்' என்னும் சொல் அம்+தண்+அர் என்பதன் கூட்டு என்று கண்டோம். பொருளும் கண்டோம். ஆனால், நச்சினார்க்கினியர்,

''அந்தத்தை அணவுவார் அந்தணர்'' என்று புதுப் பொருளைப் படைத்து மொழிந்தார். இப்பொருளைப் படைக்க 'நச்சர்' அச்சொல்லை 'அந்தம்+அணவுவர்' என இரண்டு சொற்களாகப் பிரித்தார். இவ்விரு சொற்களும் தமிழ் இலக்கணப்படி கூடினால் அந்தமணவுவர் என்றாகும். மேலும் ஒரு புணர்ச்சி இலக்கணத்தால் ('ம்' போய்) 'அந்தவணவுவர்' என்றாகும் இது மேலும் தொகுத்தல் விகாரம் என்னும் இலக்கணத்தால் ('ம்' போய்) 'அந்தணவுவர்' என்றாகலாம். அதற்கு மேலும் வலிந்து கொள்ளும் ஒரெழுத்து கெடுவதால் 'அந்தணவர்' என்றாகி மேலும் தொகுத்தல் விகாரத்தால் 'அந்தணர்' என்று ஆகவேண்டும். இரண்டு சொற்கள் குறுகி கூனி, நெளிந்து, வளைந்து, கெட்டு அந்தணர் என்று உருப்பெற்றதாகக் கொள்வது வலிந்து கொள்வது மட்டுமன்று; வேண்டுமென்றே ஓர் உள்நோக்கத்துடன் செய்யப்படுவதுமாகும். அம்+தண்+அர் என்பன 'அந்தணர்' ஆவது இயல்பு;

வெற்று முயற்சியற்றது. இதனை விடுத்து 'நச்சர்' புதுப் படைப்பு செய்துள்ளமை அவரையே ஐயத்திற்குள்ளாக்கு கிறது.

நச்சினார்க்கினியர் பெரும்புலமையர்; ஆழ்ந்த நுண்ணறிவினர். அவர் உரையால் பல இலக்கியங்கள் பொலிவுற்றன "உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க் கினியர்" என்று போற்றப்படுவது பொருந்தும். உண்மை யாகவே அவர்தம் உரைப்பணி பாராட்டிற்கும், வணக்கத் திற்கும் உரியது அவர்மேல் குறை எழுத கையின் எழுதுகோலும் கூசுகிறது. ஆனால், அவர் பொருள் கொண்டதற்கு உரிய நோக்கம் எழுதுகோலின் கூச்சத்தை விரட்டி கை எழுதுகோலுக்கே தினவேற்றுகிறது

இதனை உணர இவ்விரு சொற்களின் (அந்தம் அணவுதல்) பொருள்களைக் காணவேண்டும்.

'அந்தம்' என்றால் முடிவு — இறுதிநிலை. பொதுவாக இங்கு அனைவரின் வாழ்வுக் குறிக்கோளின் இறுதி நிலையை, சிறப்பாக ஆன்மீகரின் அல்லது துறவியரின் இறுதிக் குறிக்கோளைக் குறிக்கும்.

'அணவுதல்' என்றால் கிட்டுதல், பொருந்துதல், சேர்தல் எனப் பொருள்படும்.

அணவுதல்' என்பதற்கு மறுபொருள்கள் தலைதூக்கல், அண்ணாத்தல், மேலமைதல், மேல்நோக்கல், மேலே கவிதல் என்பன. இப்பொருள்களையும் இலக்கிய ஆட்சி யில் காண்கின்றோம். நச்சினார்க்கினியர் இம்மறுபொருள் களில் கருத்தூன்றிப் பொருளைப் படைத்தார். இக் கருத்தூன்றல்தான் அவரின் உள்ளுணர்வை அடையாளங் காட்டுகிறது. அவர் எழுதியுள்ள பொருள் மூன்று இடங் களில் வருகின்றது. அவற்றைக் கூர்ந்து நோக்கினால் அவர்

நம்மை எப்படி அங்கு அழைத்துச் செல்கிறார் என்பது புலனாகும்.

1. **''அந்தத்தை அணவுவார் அந்தணர், என்றது வேதாந்தத்தையே நோக்குவார்''**

—திருமுருகு—96 உரை

இதில் பொதுவாக உள்ள அந்தத்தை, **வேதத்தின்** அந்தமாகக் கற்பித்துக் கொண்டார் என்பது நோக்கத் தக்கது. அதனையே சற்று விரிவாக,

2. **''அந்தணர் வேதாந்தத்தை எக்காலமும் பார்ப்பார்''**

—மது. 474 உரை.

இதில் முன்னே நோக்குவார் என்றதை பார்ப்பார் என்றமையும் கூர்ந்து நோக்க வைக்கிறது. இதற்கு மேலும், சற்று விரிவாக,

3. **''அந்தத்தை அணவுவார்; அந்தணர்; என்றது வேதாந்தத்தையே பொருளென்று மேற்கொண்டு பார்ப்பார்''**

—கலி. கடவுள்வாழ்த்து—3 உரை

இதில் வேதாந்தத்தை**யே** என்றார். 'பார்ப்பார்' என்பதை மேலும் அழுத்தமாக்கினார். **'மேற்கொண்டு'** என்னும் சொல்லையும் சேர்த்துக் கொண்டார். இச்சேர்ப்பு ஏன்(?) என்று நோக்கினால் அணவுதல் மேல்நோக்குதல் என்பதன் பொருட்குறிப்பைக் காட்டித் தன்நோக்கத்திற்கு வலிமை சேர்ப்பதாகிறது.

அம்+தண்+அர் என்னும்இயல்பை அந்தம்+அணவு+அர் என்று வலிந்து ஆக்கினார். அந்தத்தை வேதாந்தம்

என்றார். வேதாந்தமே என்று பிற தமிழ்நூல்களை நீக்கினார். 'அணவுவார்' என்பதை நோக்குவார் என்றார். 'நோக்குவார்' என்றதைத் தாமே 'பார்ப்பார்' ஆக்கினார். மீண்டும் 'பார்ப்பார்' என்று வலியுறுத்தினார். அணவுதல் மேல்நோக்கல் என்பதைக் காட்ட **''மேற்கொண்டு''** என்றார்.

இவற்றால்

'அந்தணர் என்பார் பார்ப்பனரே' என்று பதிந்தார்.

இவ்வாறு பையப்பையச் சேர்த்தும், புகுத்தியும் செய்த நச்சரின் உள்நோக்கத்தை உறுதிசெய்ய அவர் 'பாரத்துவாச கோத்திரத்துப் பார்ப்பனர்' என்று நம்மை நினைக்கத் தூண்டுகிறது. நச்சர் 'நச்ச'ராகிறார்.

**கடவுளர் பார்ப்பனரா?**

இடைக்காலத்தில் இவ்வாறு இவர் செய்யினும் சங்க கால வட்டத்து நூல்கள் கடவுளரை அந்தணர் என்றன.

**''இமயவில் வாங்கிய ஈர்ஞ்சடைஅந்தணன்''**[1]

என்று கலித்தொகை சிவனை 'அந்தணன்' என்றது.

**பூணூ லணிந்த**
**''நுண்ஞாண் மார்பின்.........**
**யாழ்கெழு மணிமிடற்று அந்தணன்''**[2]

என்று அகநானூறு சிவனைப்போற்றியது; பூணூல் காட்டிப் போற்றியது.

---

1. கபிலர் : கலி : 38—1
2. பாரதம் பாடிய பெருந்தேவனார் : அகம் : 1—15

**''வேள்விப்பாகம் உண்ட பைங்கட் பார்ப்பான்''[1]**

என்று சிவபெருமானைப் பார்ப்பன இனத்தவனாகப் பரிபாடல் விளக்கியது

சிவனை மட்டுமன்று நான்முகனையும்,
**''ஆதி அந்தணன்''[2]**

என்றது.

தமிழ்நாட்டுக் கடவுள் சிவனும் பார்ப்பனர் ஆக்கப்பட்டார்.

**பார்ப்பனர் உயர்வும் இழிவும்**

அந்தணர் என்னும்பெயரில் அவ்வினத்தார் உயர்த்தியே பேசப்பட்டனர்.

பார்ப்பனர் என்னும் பெயரிலும்,
அரசனைப் பார்த்துப்

**''பார்ப்பார்க்கு அல்லது பணிபு அறியலையே''[3]**

என்று பெருமைப் டுத்தினார்.

**''ஏற்ற பார்ப்பான் ஈர்ங்கை நிறையப்**
**பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து''[4]**

என்று போற்றியதாகப் பாடினார்.

---

1. கடுவன் இளவெயினனார் : பரி : 5—26, 27
2. கடுவன் இளவெயினனார் : பரி : 5—23
3. கபிலர் : பரி : 63—1
4. அவ்வையார் : புறம் : 367—5

**''பார்ப்பார் நோவன செய்யலர்''[1]**

என்றும்,

**''பார்ப்பார்த் தப்பிய கொடுமையோர்க்கும்''[2]**

(புறம், 34—3) என்றும் தாங்கித் தாங்கித் காத்தனர்.

ஆனாலும் ஏளனமாகவும், தாழ்வாகவும் பார்ப்பனனைப் பாடியவற்றையும் காண்கின்றோம்.

'வேள்வி செய்யாத பார்ப்பான் அக்காலத்தில் இழிந்தோர் செய்யும் தொழிலாகக்கருதப்பட்ட சங்கு அறுக்கும் தொழில் செய்தான்'[3] (அகம் 24—12) என்றும்,

**'உப்பு வணிகர்பால் தூதனாக ஓலைகொண்டு ஓடினான்'[4]**

என்றும்,

**''உயவல் ஊர்திப் பயலைப் பார்ப்பான்''[5]**

என்றும்,

**''நம்மூர்ப் பார்ப்பனக் குறுமகன்''[6]**

**'பரத்தையர் தெருவிற் புகுந்து சாமக்குறும்பு செய்த முதிய முடப்பார்ப்பான்'[7]**

---

1. தாமப்பல் கண்ணனார் : புறம் : 3—74
2. ஆலந்தூர் கிழார் : புறம : 34—3
3. ஆவூர் மூலங்கிழார் அகம் : 24—1
4. பாலைபாடியபெருங்கடுங்கோ: அகம் : 337—7
5. மதுரை வேளாசான் : புறம் : 302—2
6. கபிலர் : ஐங் : 202—
7. ,, : கலி : 65—8

**"பழகினும் பார்ப்பாரைத் தீப்போல ஒழுக"**[1] வேண்டும் எனவும் உள்ள அடிகள் தமிழரிடையே அவர் காணப்பட்ட பங்கையும் காட்டுகின்றன. இவைபோன்று மேலும் பல உள்ளன.

இவற்றையெல்லாம் ஒன்றுகூட்டி ஒரு மீள் பார்வை யிட்டால்,

**'அந்தணர் பார்ப்பனர்;**
**கடவுளரும் அந்தணர்—பார்ப்பனர்'**

என்னும் ஒரு வகைக்கருத்தும்,

**'அந்தணர் துறவியர்**
**அந்தணர் எந்தக்குல இனத்துள்ளும்**
**அடங்காதோர்'**

என்னும் மறுவகைக் கருத்தும்,

**'பார்ப்பனர் போற்றத் தக்கவர்;**
**பார்ப்பனருள் இழிந்தவரும் புகடிக்கு**
**உரியவரும் இருந்தனர்'**

என்னும் இருவகைக் கருத்தும் ஒரே கால வட்டத்தில் தமிழ் மண்ணில் நிலவின என்றுதான் அறிய முடிகின்றது.

இவற்றை நோக்கும் எவரும் **'அந்தணர்'** பற்றி ஒரு குழப்பமான கருத்தையே காணவேண்டி நேரும். ஆம்; குழப்பமான கருத்துச் சூழ்நிலைதான் திருவள்ளுவர் காலத்தில் நிலவியது.

**அந்தணர் பார்ப்பனர் அல்லர்**

திருவள்ளுவர் இக்குழப்பத்தை—'அந்தணர் யார்' என்னும் குழப்பத்தை நீக்கி ஒரு தெளிவான கருத்தைப்

1. நல்லாதனார் : திரி : 42—2

பதியவைக்கக் கருதியிருக்கவேண்டும். அதன் வெளிப்பாடாகத்தான்,

**''அந்தணர் என்போர் அறவோர்; மற்றெவ்வுயிர்க்கும்**
**செந்தண்மை பூண்டொழுக லான்''** (30)

என்றொரு குறளைப் படைத்தார்.

**பகுத்தறிவு முனை 12**

'நீத்தார் பெருமை' (அவாக்களைத் துறந்தோர் பெருமை) அதிகாரத்தின் இறுதிக் குறளாகப் பதிந்தார்; முடிந்த முடிவான முத்திரைக் குறளாகப் பதித்தார்.

**'அந்தணர் என்போர் பார்ப்பனர் அல்லர்'.**

**''அந்தணர் என்போர் அறவோர்''** என்றார்.
எதனால் அறவோர்?

''எவ்வுயிர்க்கும் **செந்தண்மை** பூண்டு ஒழுகலான்''

அறவோர் என்று விளக்கம் தந்தார். செந்தண்மை (செம்மை + தண்மை) என்றால் செவ்விய-அழகிய குளிர்ந்த உள்ளத்தின் அருள் ஆகும் என்றார். இதனால், அம் + தண் + அர் என்னும் சொல் அமைப்பையும் அறிவித்தவர் ஆனார்.

இதனை உணர்ந்த உரையாசிரியர் பலரும்

**''செவ்விய தட்பம் செய்தலை''** (மணக்குடவர்)

**''செவ்விய தண்ணளியை''** (பரிமேலழகர்)

**''எல்லா உயிர்க்கும் அன்புடையர்''** (பரிதியார்)

**''எவ்வகைப்பட்ட உயிர்க்கும் ஒத்திருக்கும்**
**தண்ணளியை''** (காலிங்கர்)

**''அந்தணர் என்பதில் அம்—அழகு; தண்—குளிர்ச்சி. அர்—பலர்பால் விகுதி''** (இராமானுச கவிராயர்—பிற்காலத்தவர்)

ஒருமுகமாக அம்+தண்+அர் என்னும் சொல்லமைப்பாகக் கொண்டே பொருள் கண்டனர்.

ஆனால், மணக்குடவருக்கும், பரிமேலழகருக்கும் பின் வந்த நச்சினார்க்கினியர் தாம் படைத்த மொழியாக அந்தம்—அணவுவார் என்றமை கருதத்தக்கதாயிற்று. முன் கண்ட அவர்தம் உள்நோக்கம் இங்கும் உறுதி பெறுகிறது.

### அந்தணர் வேறு, பார்ப்பனர் வேறு

திருவள்ளுவருக்குப் பின்னரும் அவர் காலத்தும் இதனை உணர்ந்தோர் திருவள்ளுவரை அடியொற்றி அந்தணரை வேறாகவும் பார்ப்பனரை வேறாகவும் கண்டு பாடினர்.

**''அந்தணர் இல் இருந்து ஊண் இன்னா''**[1]

என்று இனியவை நாற்பது(2) 'அந்தணர் என்போர் வீட்டில் இருந்து உணவு உண்ணாத துறவியர்' என்றது. அதே நூல்

**''பார்ப்பார் இல் கோழியும் நாயும் புகல் இன்னா''**[2]

என்று 'பார்ப்பார் இல்லில் இருந்து வாழ்பவர்' என்று வேறுபடுத்திப் பாடியது.

**''அந்தணர் என்போர் அறவோர்''**

என்றதில் அறவோர் என்பது அற உணர்வை உடையவர்; அறச்செயலை மேற்கொள்பவர் என்று பொருள்பட்டு

1. பூதஞ்சேந்தனார் : இனி : 2
2. கபிலர் : இன்னா : 2—1

'மனத்துக்கண் மாசிலன்' ஆகிய அறம் கொண்டவர் எனக் காட்டுகிறது.

மாந்தர்க்குச் சொன்ன இதனையே திருவள்ளுவர் தாம் குறித்த இறைவனுக்கும் ஏற்றி

**''அறம்ஆழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**பிறஆழி நீந்தல் அரிது''[8]**

என்றார். இறைவனை அறக்கடல் (கடல் போன்று பரந்தும் விரிந்தும் ஆழ்ந்தும் செயற்படும் அறம்) என்று அறத்துக்குள்ளே வைத்து 'அந்தணன்' என்றார். எட்டுக் குணங்களை இறைவனாக உருவாக்கியவர் 'அறம்' என்னும் செந்தண்மை என்னும் அருள் குணத்தையும் இவ்வாறு ''அறம் ஆழி அந்தணன்'' என்றார்.

**''அறம் ஆழி அந்தணன்''**

என்று திருவள்ளுவர் அமைத்தது,

**''நுண்ஞாண் பூணூல் மார்பின்**
**யாழ்கெழு மணிமிடற்று அந்தணன்'' [1]**

என்று பூணூல் அணிந்த பார்ப்பன இனத்தவனாகச் சிவனைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியதற்கு மாற்றுக் கருத்தாகும்; மறுப்புக் கருத்து என்றும் கொள்ள வைக்கிறது.

**அந்தணர் நூல் எது?**

திருவள்ளுவர் தம் நூலில் 'அந்தணர்' என்னும் சொல்லை மூன்று இடங்களில் ஆண்டுள்ளார், மேலே கண்ட இரண்டு நிற்க, மேலும்,

---

1. பாரதம் பாடிய : அகம். க. வாழ்த்து 3, 15.
பெருந்தேவனார்.

**''அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்**
**நின்றது மன்னவன் கோல்''** (543)

என்று மன்னவன் செங்கோலாட்சியில் அமைத்தார். இங்கு 'அந்தணர் நூல்' என்றது முன்னர் பதித்த 'அந்தணர் என்னும் அறவோர்'—தமிழ்ச்சான்றோர் படைத்திட்ட நூல்களேயாகும். ஆனால், உரையாசிரியர் அனைவரும்,

**'அந்தணர்க்கு உரித்தாகிய வேதத்திற்கும்**
**அதனால் சொல்லப்பட்ட அறத்திற்கும்'**

என்று பொருள் எழுதினர். இங்கும் அந்தணனைப் பார்ப்பனர் என்று கொண்டு நூலை 'வேதம்' — நான்மறை என்றனர். ஒட்டுமொத்தமாக இக்கருத்து பொருந்தாத தாகும். எவ்வாறு?

திருவள்ளுவர் பார்ப்பனர் வேதத்தை நான்மறையைக் கூறக் கருதியிருந்தால் முன்னர்

**''மறப்பினும் ஒத்துக் கொளலாகும்''** (134)

என்று நான்மறையை 'ஒத்து' என்னும் சொல்லால் குறித்தது போன்று,

**'அந்தணர் ஒத்தோ டறத்திற்கும் ஆதியாய்'**

என்று பாடியிருப்பார். அவ்வாறன்றிப் பொதுவாக நூல் என்றமையின், 'செந்தண்மை பூண்ட அறவோர்' நூல்களையே குறிக்கும்.

மேலும் அடுத்த அதிகாரமாம் கொடுங்கோன்மையில்,

**''ஆபயன் குன்றும்; அறுதொழிலோர் நூல்மறப்பர்**
**காவலன் காவான் எனின்''** (560)

என்றார். இங்கு அறுதொழிலோர் எனப்பட்டவர் நான் மறை என்னும் ஒத்தை 'ஓதல், ஓதுவித்தல், வேள்வி செய்தல், செய்வித்தல், ஈதல், ஏற்றது' என்னும் ஆறுதொழிலைச் செய்யும் பார்ப்பனரைக் குறிக்கும். (மன்னன் கொடுங் கோலன் ஆனால், மக்கள் நலிவர், பார்ப்பனரும் சோற்றுக்கு அலைவர். சோற்றுக்கு அலையும் போது நான்மறை மறதிக்குள் மறையும்; மறப்பர்).

இவ்வாறு அறுதொழிலோர் என்று பொருள் விளங்க— பார்ப்பனர் நான்மறையைக் குறிக்க எழுதியமை போன்று முன்னரும்,

**''அந்தணர் நூற்கும்''**

என்பதை

**''அறுதொழிலோர் நூற்கும்''**

என்று அமைத்திருப்பார். அவ்வாறு அமைக்காததே இது வேறு; அது வேறு என்று காட்டுகின்றது. இவ்விரண்டும் அடுத்தடுத்து வரும் அதிகாரங்களில் உள்ளவை. ஆகையால் இவ்வேறுபாடு காட்டப்பட்டது.

இவ்வமைப்புகள் அன்றித் திருவள்ளுவர், நூல்களாகப் பல்வகை நூல்களைக் குறித்தார்.

**''நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை''** (322)

என்று அறநூலைக் குறித்தார்.

**''நூ லாருள் நூ ல்வல்லன் ஆகுதல்''** (683)

என்று ஆட்சியியலார் நூலைக் குறித்தார்.

**''நூ லோர் வளிமுதலா எண்ணிய மூன்று''** (941)

—என்று மருத்துவ நூலைக் குறித்தார்.

**''எப்பால் நூலோர்க்கும்''** (533)

என்று உலகளாவிய பல துறை நூல்களையும் குறித்தார். இவ்வகையில் 'அந்தணர் நூல்' என்பது ஒருவகை.

செந்தண்மைகொண்ட அந்தணராம் தமிழ்ச்சான்றோர் படைத்த 'அறநெறி நூல்' என்றே பொருள். மக்கட் பிறப்பில் உயர்வு தாழ்வைக் காட்டும் நான்மறை ஒத்தைக் குறிக்காத,

இவ்வாறிருக்க உரையாசிரியர் அனைவரும்

**''அந்தணர்க்குரித்தாகிய வேதத்திற்கும்''**

என்று நான்மறையாகவே பொருள்எழுதினர். செந்தண்மை என்றதற்கு அம்+தண் அமைப்பில் செவ்விய தண்ணருள் என்றெழுதிய இன்னோர் இங்கு ஒருங்கிணைந்தவராக வேதம் என்றமை, 'திருவள்ளுவருக்குப் பின் தமிழ் அறிஞரிடையே 'வேதம்' எந்த அளவு ஆட்சி செய்தது; இன்னோரை ஆட்கொண்டிருந்தது' என்பனவற்றின் அடையாளமாகும்.

நான்மறை — வேதம் அளாதி என்பர். அஃதாவது தனக்கு மூலம்—ஆதி இல்லாதது; தானே தனக்கு ஆதியானது என்பது வடநூலார் கோட்பாடு. வேறு ஆதி இல்லாத வேதம் எவ்வாறு மன்னவன் செங்கோலை ஆதியாகக் கொள்ளும்? இதனை வேதத்தார் ஏற்பாரா?

எனவே 'அந்தணர் நூல்' என்றது தமிழ்ச் சான்றோரின் அற நூல்களேயாகும். இதனாலும் திருவள்ளுவர் நான்மறையைப் புறக்கணித்து 'ஒத்து' என்று சொல்லாமல் பகுத்தறிவிற்கு ஒத்துவரும் மன்னவன் செங்கோலை 'ஆதி' என்றார். இஃது உண்மையுமாகும். தமிழ் மன்னர் பலரும் தமிழ்ப் பெருநூல்கள் தோன்றக் காரணமாக இருந்தவர்.

உருவான நூல்களை பேணிப் போற்றிக் காத்தவர். எனவே, 'அவர்கோல் ஆதி' என்பது உண்மையாகும்.

உலகிற்குப் 'பகவன்' ஆதி (ஆதிபகவன்) என்று பதிந்தமை போன்று. இங்கும் 'நூற்கும் அறத்திற்கும் செங்கோல் ஆதியாய் நின்றது' என்று அழுத்தமாகப் பதிந்தார். மன்னரை இறைவன் என்றும், இறை என்றும் பதிந்த திருவள்ளுவர் இங்கும் அதனையே வழிமொழிந்தார். எனவே இஃதும், வள்ளுவத்தின் **பகுத்தறிவு முனைக்குச்** சான்றாகும்.

**'நாலாஞ்சாதி'**

இருவருக்குள் பூசல் எழுந்தது. வாய்ச்சண்டையாக வளர்ந்தது. பகடிச்சொல், சுடுசொல், கடுஞ்சொல், கொடுஞ்சொல் என்று வளர்ந்தது. அலுத்துப்போன ஒருவர்,

**''போடா நாலாஞ்சாதி பயலே''**

என்றார். மற்றவர்,

**'நீதாண்டா நாலாஞ்சாதியிலும்**
**கீழாஞ்சாதி'**

—என்றார்.

அது என்ன நாலாஞ்சாதி? மக்களுள் உயர்வு தாழ்வாக நான்கு சாதிகளை வகுத்தனர். வகுத்தவர் வடமொழியாளர், அவற்றை 'வருணங்கள்' என்றனர். நான்காம் வருணம் அவர்கள் சொற்படி சூத்திரர், தமிழில் குடியானவர்—வேளாண்மை செய்பவர்—உழவர் எனப்படுவர். பிற தொழில் செய்பவரும் அடங்குவர். இந்த 'நான்காம் சாதி என்பதுதான், நாலாஞ்சாதி' என்று இழிவான பொருளில், சற்றுக் கொச்சையாகவும் வழங்கப்பட்டது.

மேலே கண்ட உரையாடலில் முதலில் 'நாலாஞ்சாதி' என்று கொச்சையாகச் சாடியவரும் அந்த நான்காம் சாதியாராகிய உழவர்தான். மற்றவரும், அவரேதான். பொதுவில் தமிழர் தம்மைப் பிரித்துத் தாழ்வாக்கி நான்காம் இடத்தில் வைத்ததை இவர்களே மேலும் தமக்குத்தாமே தாழ்வாக்கிக்கொண்டு 'நாலாஞ்சாதி' என்றனர்; என்கின்றனர். இஃதோர் அவலம்.

இந்த நான்காம் சாதிக்கு இழிவு எவ்வாறு வந்தது? கற்பித்தவர் எவர்? தமிழ் மண்ணில் புகுந்த வடமொழியாளர் தமிழ் மண்ணின் மைந்தரை இவ்வாறு தாழ்வாகக் குறித்தனர். வடவர் வகுத்த நான்மறைகளில் சில பகுதிகளும், மனுநூலும் பலமுனைகளில் இவ்வாறு தாழ்வைப் பதிந்துள்ளன.

'சூத்திரன்' பிராமணனுக்குப் பணிபுரியவே பிறந்தவன். பணியைப் பெறும் பிராமணன் கூலி தரலாம்: தராமலும் விடலாம்'' இது மனுநூலின் விதிப்பு.

இதற்கு மேலும்,

''பிராமணன் மறுத்தாலும் சூத்திரன் அவனுக்குப்பணி செய்வதால்தான் மறுமைப் பயன்கிட்டும்'' என்றும் விதித்தது. விதித்த இவற்றைத் தமிழ் மண்ணிலும் ஊன்றியது.

**உழவு தாழ்வாம்**

இதற்கு மேலும். உலகுக்கும் தமக்கும் உணவைத் தரும் உழுதொழிலை இழிதொழிலாக விதித்துள்ள மனுநூல்.

''வேதமறிந்த விற்பன்னர் உழவுத்தொழிலை ஏன் **இழிவாகச் சொன்னார்கள்** என்றால், அது இரும்பால் பூமாதேவியைக் கிண்டுகிறதல்லவா''[1] — என்று விளக்கம்

---

1. மனு : மனுசுமிருதி: 10-84

தந்துள்ளது; இது சோறு வழங்கி உயிர்வாழச் செய்யும் உழவைத் தாழ்த்தும் நன்றிகெட்ட கருத்து.

இது மனு நூலாரின் — அதனை ஏற்றவரின் நன்றியில்லா உணர்வை வெளிப்படுத்துகிறது. அத்துடன் தம்மை உயர்த்திக்கொள்ளும் சாதித் தினவையும் குறிப்பாகக் காட்டுகிறது. உழவு இழிதொழில் என்றோர் அதனைப் பார்ப்பனர் செய்தால் அவரும் இழிந்தவர்போல் தள்ளிவைக்கப்பட்டனர்.

> ''தாமே **உழுதொழில் செய்து உண்ணும் இழிதொழிலைச்** செய்யும் பிராமணர்களைத் தென்புலத்தார்க்குச் செய்யும் கடன்களுக்கு அழைக்காமல் ஒதுக்க வேண்டும்'' என்கிறது மனுநூல்.

இத்தகைய வேண்டாத கருத்துக்கள் — பகுத்தறிவிற்கு ஒவ்வாத கருத்துக்கள் திருவள்ளுவர் காலத்தில் தமிழ் மக்களிடையே பரப்பப்பட்டிருந்தன. இவற்றைத் தமிழர் ஏற்று நம்பித் தம்மைத் தாமே தாழ்த்திக்கொண்டு வாழ்ந்தனர்.

நான்காம் சாதி — நாலாஞ்சாதியாய் அதாவது 'சூத்திரன்' என்ற இழிமகன் பொருளுடையதாகித் தமிழர்களே கூறிக்கொள்ளும் அவலநிலை நேர்ந்தது.

இந்நிலை எளிய மக்களிடைமட்டுமன்று அறிவார்ந்த சான்றோரிடத்தும் குடிகொண்டது. புலன் அழுக்கற்ற அந்தணாளன் எனப் போற்றப்பட்ட சான்றோர் கபிலரே,

> **''பார்ப்பார்க் கல்லது**
> **பணிபு அறியலை''**

என்று செல்வக்கடுங்கோ வாழியாதன் என்னும் சேர மன்னனைப் பாடினார். உழுதொழில் செய்யும் நான்காம்

சாதியான் மட்டுமல்லன் இரண்டாம் சாதி அரசனும் அந்த மனுவின் கட்டுப்பாட்டாளன் ஆனான் என்பதை இவ்வடி சொல்கிறது.

**உழவே தலை**

தாம் வாழும் மண்ணின் உயிர் காக்கும் தொழிலாகிய உழவைச் செய்வோர் தாழ்த்தப்படுவதைக் கருதாமல் திருவள்ளுவர் பாராமுகமாக இருப்பாரா? 'உழவு' என்று ஒரு தனி அதிகாரம் அமைத்துப் பத்துக் குறட்பாக்களை அமைத்துள்ளமையே திருவள்ளுவப் பெருந்தகையின் மண்ணின் மைந்தரைப் போற்றும் உள்ளுணர்வை வெளிப் படுத்துவதாகும்.

தமிழறிந்த பார்ப்பனப் புலமையோரும், அவர் வழியே தம் வழி என்று தொடர்ந்த தமிழரும் போற்றிய மனுவின் கோட்பாட்டை எதிர்த்துக் குறள் வாயிலாகக் குரல் கொடுத்தார் திருவள்ளுவர்.

மனு நூல்,
**''உழவு இழிதொழில்''**

என்றது.

திருவள்ளுவர்,
**''உழவே தலை''** (1031)

என்றார்.

மனு,
**''உழுதொழிலை எவன் செய்தாலும்
அவன் தாழ்ந்தவன்''**

என்றார்.

திருவள்ளுவர்,

**''உழுவார் உலகத்தார்க்கு ஆணி''** (1032)

என்று ஆணி அடித்தார்.

மேலும் ஆணி அடிப்புக்குமேல் சம்மட்டி அடியாக,

**''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்''** (1033)

என்றார்.

உழவன் தன் இழிதொழிலால் பணிபுரிந்து பார்ப்பனனுக்கு அடிபணிந்து தொழுதுவாழவேண்டியவன்'' என்று மனு விதித்ததை மறுத்து,

**''மற்றெல்லாம் தொழுது உண்டு பின்செல்பவர்''** என்று பார்ப்பனரையும் சேர்த்துத் தொழவைத்தார்: இழிந்த தொழில் செய்பவன் என்றவன் பின்னே செல்லவைத்தார். மனு விதித்ததை விலக்கினார்.

**பகுத்தறிவு முனை**

**13**

நிலை இவ்வாறிருக்க திருவள்ளுவர்தம் வாய்மொழிக்கு உரை வகுக்கப் புகுந்த பரிமேலழகர் திருக்குறளின் முதற் பகுதியாம் அறத்துப்பாலுக்கு முன்னுரையில்,

**''மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும்
விலக்கியன ஒழிதலுமாம்''**

என்றமை நகைப்பிற்கு உரியதாகின்றது.

திருவள்ளுவர் மனு விதித்ததை கொண்டாரா? உழவை இழிதொழில் என்றாரா? மனு விலக்கியவற்றை ஒழித்தாரா? விதித்தவற்றையே விலக்கினார்.

உழவால் விளைந்த நெற்கதிராகிய குடைநிழலின் அமர்ந்த மன்னன்

**''பலகுடை நீழலும் தம் குடைக்கீழ் காண்பர்''** (1034)

என்று மன்னனையும் உழவின் நீழலில் அமரவைத்தார்.

உழவர் உழுதொழில் செய்யாது கைகளைக் கட்டிக் கொண்டால்,

**''விழைவு அதூஉம் விட்டேன் என்பார்க்கும்''** (1035)

அவர் துறவு நிலை பயனில்லை என்றார்.

எனவே 'உழவு' என்னும் ஓர் அதிகார அமைப்பே வடவர் புகுத்திய மனு முதலிய வடபுல நூல்களின்—சாத்திரங்களின் மறுப்புப் பதிவாகும். தமிழ்ப் **பகுத்தறிவு முனை**யாகும்.

**சாதியின் வேர் சாத்திரம்**

மனு, உபநிடதம் முதலியவற்றை வடமொழியில் '**சாத்திரம்**' என்பர். வடமொழியிலுள்ள சாத்திரம் ஒவ்வொன்றும் சாதிப்பிரிவையும், அவற்றுள் உயர்வு தாழ்வையும், அவற்றுள்ளும் பார்ப்பனரே **உயர்ந்தவர்** என்பதையும் சொல்லாமல் செல்லாது.

இதனைப் படித்து **அறிந்து உணர்ந்த நம்** காலத்துக் கவிமாமன்னர் பாரதி,

**''சாத்திரங் கண்டீர் சாதியின் உயிர்த்தலம்''**

என்றார்.

**''சாத்திரம் இன்றேல் சாதியும் இன்றாம்''** [1]

என்று பாடினார். சாதி என்ன செய்யும்? பாரதியின் விடை :

1. சுப்பிரமணிய பாரதி சி : பார. பா : 2465-55,56'

**"ஞானம் பொய்க்க நசிக்குமாம் சாதி"**

என்பது.

**தமிழ்ச் சாதி—பாரதி**

சாத்திரங்களால் தாழ்த்தப்பட்டு நலிந்த தமிழ் மண்ணின் மக்களை ஒருங்கிணைத்துப் பார்த்த பாரதி அவர்களை 'தமிழ்ச்சாதி' என்றார். இத்தலைப்பில் நீண்ட அகவல் ஒன்றை எழுதினார். அதில் தமிழ்ச் சாதி மக்கள் நாளுக்கு நாள் எவ்வெவ்வாறு நலிந்தனர் என்பதை,

**"நாட்பட நாட்பட நாற்றமும் சேரும்**
**பாசியும் புதைந்து பயன்நீர் இலதாய்**
**நோய்க்களம் ஆகி அழிக எனும் நோக்கமோ?**
**விதியே விதியே! தமிழச் சாதியை**
**என்செய் நினைத்தாய்? எனக்குரை யாயோ?"[1]**

என ஓலமிட்டார். விதிக்கப்பட்டதாகக் கொண்டு "விதியே விதியே" என்று ஓலமிட்டார்.

**"வளமான பொய்கைபோல வாழ்ந்த தமிழ்ச்சாதி மக்கள்**
**நோய்க்களமாம் சாக்கடையாவாரோ"**

என்று கவன்று, கலங்கி ஓலமிட்டார்.

இங்கே நமக்கு நாமே ஒரு வினாவை எழுப்பிக்கொள்ள நேர்கின்றது. வினா இது :

மனு முதலியன விதித்துப் பதிந்தவற்றை ஆணிப் பாய்வாக மறுத்த திருவள்ளுவர் கருத்துக்கள் என்ன வாயின?

**விடை உள்ள வினா**

திருவள்ளுவருக்குப் பின்னும் வடமொழியாளர் தம் கருத்துக்களை நம்ப வைத்தனர். இடைக்காலத்தில் எழுந்த

1. சுப்பிரமணிய பாரதி : சி. பார. பா : 2465—2—6.

நூல்கள் தமிழ்க் கொள்கைக்கும், மக்களைச் செம்மைப் படுத்துவதற்கும் முனையாமல் கடவுளையும், சமயத்தையும் போற்றி நிமிர்த்தும் கருத்தில் சிற்றிலக்கியங்களாகப் பெருகின. மறுபுறம் மன்னர்களையும், செல்வர்களையும் மலிவான மகிழ்ச்சியூட்டும் சிற்றிலக்கியங்கள் பெருகின. இவ்விரு வகைச் சிற்றிலக்கியங்களும், காப்பியங்களும், புராணங்களும் திருவள்ளுவர் தம் திருக்குறளை எடுத்தாண்டன. ஆனால், தம் கருத்திற்குப் போலியான முறையில் மேற்கோள் காட்டின. திருவள்ளுவரைப் போற்றின. ஆனால், பொது மக்களின் தாழ்வையும், நலிவையும் தீர்க்கும் புதுமைக் கருத்துள்ள குறட்பாக்களின் கருத்தை விரிவாக்கவில்லை. மேலே கண்ட கடல் பரப்பான நூல்களுக்கிடையே திருக்குறளின் பெயர் மிதந்ததே தவிர குறள் ஊட்டம் செலுத்தப்படவில்லை.

15-ஆம் நூற்றாண்டளவில் தோன்றிய சித்தர் பலர் மக்களைச் சமப்படுத்தும் பாடல்களை இயற்றினர் ஆனால், ஆன்மீகக் கருத்துக்களைப் புதிர் புதிராகக் கொண்ட அவர்தம் பாடல்களுக்கிடையே பகுத்தறிவுக் கருத்துக்கள் அள்ளித் தெரித்த கடுகுகள் ஆயின.

என்னதான் மறைக்கினும், எவ்வளவுதான் புகுத்தினும் திருவள்ளுவர்தம் பகுத்தறிவுக் கருத்துக்கள் வைரங்களாய்ப் பளிச்சிட்டு விளங்குகின்றன. ஆம், மேலே கண்ட ஒவ்வொரு பகுத்தறிவு முனையும் வைரக் கூர்முனைகளேயாகும்.

மூன்றாவதான மூடக் கொள்கைகளை அடையாளங் காட்டும் திருவள்ளுவரைக் காண வேண்டும்.

# 8. மூட ஒழிப்புக் கொள்கை

**மூடம்—என்றால்**

மூடம் என்றால் அறியாமையின் மேல் எல்லை. எதற்கும் காரணத்தை அறியாமை; அறிவிற்குப் பொருந்துமா என்பதை அறிய முயலாமை; அறிந்தும் அறியாமலும் கண்ணை மூடிக்கொண்டு கடைப்பிடிப்பது — இவற்றின் ஒட்டு மொத்தம் மூடமாகும். மூடத்தைத் தொடர்வதற்கு அச்சமும் சிறிய அவாக்களும் தூண்டுகோல்கள். சுருக்கமாகக் 'கண்மூடிப் பழக்கம்' என்பர்.

இக்கண்மூடிப் பழக்கம் பகுத்தறிவை நெருங்காதது. இக்காலத்தில் இவ்வகை மூடங்கள் பலவாக உள்ளன.

சகுனம் (எதிர்ப்படல்); சடங்கு (கரணம்);
விரதம் (நோன்பு); சாத்திரம் (கலைநூல்)
சோதிடம் (கோள்பயன்); அருச்சனை (மலர்ப்போற்றி)
ஆராதனை (வழிபாடு); விதி (தலையெழுத்து);
மோட்சம் (வீடுபேறு); நரகம் (நிரயம்-அளறு).

இவையனைத்தும் காரணங்காணாப் பழக்கங்களாகத் தமிழ் மண்ணில் கொள்ளப்பட்டு வருகின்றன. அடைப்புக் குறிக்குள் உள்ளவை முன்னுள்ள வடசொற்களுக்கு உரிய தமிழ்ச் சொற்கள். இத்தமிழ்ச் சொல் ஒவ்வொன்றும்

வேறு வேறு கருத்திற்காக உள்ளது. வடசொல்லுக்கு ஏற்றிக் கூறப்பட்டது; அல்லது இரு சொற்கள் கொண்ட தொடராக அமைக்கப்பெற்றது. மூலத்தில் வடசொற்களே உரியவை. இவ்வாறு வடசொற்களாக உள்ளமை கொண்டே இவை தமிழர்க்கு உரியனவல்ல என்று கொள்ளலாம். இவை இக்காலத்து நடைமுறைகள்.

**சங்க இலக்கிய கரும்புள்ளிகள்**

என்றாலும்,

இவற்றை ஒட்டிய பழக்கங்கள் முற்காலத்திலும் இருந்தன.

பறவை குறுக்கிட்டால் நன்மையாகவும் தீமையாகவும் கருதும்—**'புள் ஓர்தல்'**[1]

அல்லது 'புள்நிமித்தம்' நாள், நேரம் பார்க்கும்—**'நாள் ஓர்தல்'**[2]

வீட்டு நிகழ்ச்சிகளில் செய்யப்படும் **''கரணம்'**,[3]

நெல்லைக் கொண்டு சொல்லப்படும் குறி என்னும் **''கட்டு''**[4]

தெய்வம் ஏறியதாக ஆடும் **''சாலினி''** ஆட்டம்[5] (மது—610)

---

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | கபிலர் | : | புறம் | : | 124-1 |
| 2. | குளம்பனார் | : | நற் | : | 288-6.7 |
| 3. | தொல்காப்பியர் | : | தொல் பொருள் | : | 143 |
| 4. | மாங்குடிமருதனார் | : | மது. கா | : | 610 |
| 5. | நெட்டிமையார் | : | புறம் | : | 15-21,22 |

காதல் நோயை அறியாமல் முருகனுக்குச் செய்யும் **''வெறியாட்டு''**[1]

தூண் நட்டு நெருப்புக் குழியில் செய்யும் நான்மறை **''வேள்வி''**[2]

தேவர் வாழும் **''மேலோர் உலகம்''**[3]

**புத்தேள் உலகம்**

கீழ் உலகம் என்னும் **''நிரயம்''**[4]

—என்னும் இவற்றை முக்கால இலக்கண இலக்கியங்களில் காண்கின்றோம். இவ்வாறு தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் காணப்படுவன என்பதால் இவை தொன்மைத் தமிழர்களின் அடிப்பட்ட பழக்கம் ஆக மாட்டா. இவை கரும்புள்ளிகளே.

இவற்றில் பல திருவள்ளுவர் திருக்குறளில் இல்லை. இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம் என வாழ்வியலை விளக்கிய திருவள்ளுவர் வாழ்வியல் விழாவாகக் 'கரணம்' (சடங்கு) எதையும் சொல்லவில்லை.

'கட்டு' என்று குறிகேட்பது, நாள் பார்ப்பது, புள் ஓர்வது என்பவை திருக்குறளில் இல்லை'' இவை பற்றிய எவ்வகைக் குறிப்பும் இல்லை.

**''உறுப்பு நலன் அழிதல்''**

---

1. தொல்காப்பியர் : தொல். பொருள் : 63-2
2. கூடலூர் கிழார் : புறம் : 229-22
3. மாங்குடி மருதனார் : மது.கா : 698
4. நரிவெரூஉத் தலையார்: புறம் : 5-6

என்று தலைவி காதலால் உடல் நலங் குன்றும் நிலையைப் பத்துக் குறட்பாக்களால் பாடிய திருவள்ளுவர், இதற்காக நாட்டில் சங்க இலக்கியங்களில் சொல்லப்பட்ட 'வெறியாட்டு' பற்றிப் பாடவில்லை.

**அச்சமும் அவாவும்**

மக்களை அச்சுறுத்தவும், அவா மூட்டவும் புகுத்தப் பட்டவை இவை. நான்மறை, மனு முதலியவற்றின் ஏற் பாடுகளைக் காட்டிப் புகுத்தப்பட்டவை இவை. இக் கருத்தை ஒரு தொல்காப்பிய நூற்பா கொண்டும் உணர லாம். 'கரணம்' என்னும் சடங்கு தோன்றியது எவ்வாறு? தொல்காப்பியர் கூறுகிறார்:

> **''பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
> **ஐயர் (பெரியோர்) யாத்தனர் கரணம் என்ப''**[1]

மக்களிடம் வாழ்வியல் பொய் தோன்றியது. ஒருவர்க் கொருவர் வழுவினர். கண்ட பெரியோர் அச்சுறுத்தித் திருத்தவும், அவா மூட்டி மாற்றவும் கரணங்களைப் படைத்தனர். எனவே, 'கரணம்' இடையில் படைத்துப் புகுத்தப்பட்டது.

அப்படைப்பு வடவர் வழி மந்திரம் ஓத எழுந்ததாகும். அது போன்றே பிற அறிவிற்கொவ்வாத பழக்கங்களும் புகுத்தப்பட்டன.

இவ்வாறு புகுத்துவதற்கு மக்களது குறைபாடுகள் இட மளித்தன. குறை, குற்றம், வழு இவற்றைக் காட்டி இவற்றால் 'நீ நரகம் அடைவாய்' என்று அச்சுறுத்தினர்.

---

1. தொல்காப்பியர் : தொல். பொருள்: 143

'இன்ன நன்மைகள் செய்தால் வீடு பேறு—மேல் உலகம் அடைவாய்' என்று அவா மூட்டினர். இவற்றிற்குச் சான்றோரும் நன்மக்களும் ஆட்படமாட்டார். கீழ்மக்களாம் கயவர்களே ஆட்படுவர்.

திருவள்ளுவர் இவ்வுண்மையை ஒரு குறள் மூலம் தோலுரித்துக் காட்டினார்.

> ''அச்சமே கீழ்களது ஆசாரம்: எச்சம்
> அவாஉண்டேல் உண்டாம் சிறிது'' (1075)

என்னும் குறளே 'அச்சத்தாலோ அவாவாலோ நல்லொழுங்கை மேற்கொள்பவர் 'கயவர்' என்றுகூறி காரணங்களை அறிய முயலாதபடி செய்யப்பட்டதை வெளிப்படுத்தினார்.

திருவள்ளுவர் காலச் சூழலில் மேலே முற்கால நூல்களில் காணப்பட்ட பகுத்தறிவை அணுகாத பழக்கங்கள் சூழ்ந்திருந்தன.

திருவள்ளுவர் இவற்றை எவ்வாறு நோட்டமிட்டார்?

மக்களுக்கு எவ்வாறு அவற்றின் விளைவுகளை அறிமுகம் செய்தார்?

அப்படியே அவற்றை ஏற்றுக் கொண்டாரா?

எடுத்து மொழிந்தாரா?

அவற்றை எவ்வகை அணுகுமுறையில் எடுத்து மொழிந்தார்?

இவ்வினாக்களுக்குக் கிடைக்கும் விடைகள் திருவள்ளுவத்தின் மூடம் பற்றிய பகுத்தறிவு முனைகளைச் சுட்டிக் காட்டும்.

திருவள்ளுவர் தம் நூலில் அமைத்துள்ள சில கருத்துக் கள் நாம் கருதும் பகுத்தறிவுக்கு ஈடு கொடுக்காமலும் உள்ளன. அவற்றிற்கு அவர் அமைத்துள்ள சொற்களே அறிகுறிகளாக உள்ளன.

**''இருவினை''** [5]; **''ஊழ்''** [380]
**''எழுபிறப்பு''** [62]; **''மறுமையும், இம்மையும்** [98]
**''மேலுலகம்''** [226]; **''புத்தேளுலகம்''** [58]
**''இன்னா உலகம்''** [243] **''வேட்டல் வேள்வி செய்தல்** [259]

இச்சொற்கள் கொண்ட பொருள்கள் பகுத்தறிவிற்கு அப்பாற்பட்டவையாக இருக்கலாம். ஆனால், அவை குறிக்கப்பட்டுள்ள இடம், குறிக்கும் முறை, குறிப்பாகச் சுட்டும் கருத்து முதலியவை திருவள்ளுவரின் உள்ளார்ந்த நோக்கங்களை அடையாளங் காட்டுகின்றன.

மேலுள்ளவற்றில் ''எழுபிறப்பு, மறுமை இம்மை'' என்னும் இரண்டும் திருவள்ளுவர் ஏற்றுக்கொண்டவை யாக உள்ளன. எவ்வாறெனில் இவை இரண்டல்லாமல் இருவினை முதலியவற்றை அவர் குறித்துள்ள முறை களாலும், கருத்துக்களாலும் தமக்குரிய விலிமையை இழக் கின்றன: வலிமையை இழப்பன மட்டுமல்ல அவை வலியுறுத்தப்படாமல் ஏறத்தாழ தொய்வு ஏற்படவும் செய்கின்றன. ஒவ்வொன்றாகக் காணலாம்.

## இருவினை

ஆன்மிகத்தார் நல்வினை, தீவினை என இரண்டை வகுத்துள்ளனர். நல்வினை செய்தால் இம்மையிலும் நன்மை கிட்டும்; மறுமையிலும் நன்மை கிட்டும்; தீவினை செய்தால் முறையே இரண்டிலும் தீமை நேரும்.

திருவள்ளுவர் 'வினை' என்னும் சொல்லைச் 'செயல்' என்னும் பொருளிலேயே கையாண்டுள்ளார். **'தீவினை அச்சம்'** என்பது ஒரு அதிகாரத் தலைப்பு. 'தீமையைத் தரும் செயலைச் செய்ய அஞ்சவேண்டும்' என்னும் கருத்தே இவ்வதிகாரத்தில் உள்ளது. இதுபோன்று ''ஆள்**வினை** உடைமை, தெரிந்து **வினை**யாடல், **வினை** செயல்வகை, **வினை**த்திட்டம், **வினை**த்தூய்மை'' எனும் அதிகாரத் தலைப்புகளும் பொருளும் அமைந்துள்ளன. ஆன்மீகத்தார் கருதும் 'புண்ணியம், பாவம்' என்னும் பொருள்களில் இல்லை.

திருவள்ளுவர் தீவினை, நல்வினை என்னும் தொடர்களைக் கையாண்டுள்ளார். அவை எப்பொருளில் குறிக்கப்பட்டுள்ளன?

> **''தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றும்**
> **துன்னற்க தீவினைப் பால்''** [209]

இக்குறளின் பொருள் என்ன?

> 'எவனும் தன்மேல் தானே அன்புகொள்ள வேண்டும். அவ்வாறு கொள்ள, பிறர் எவருக்கும் தீய செயல் சிறிதளவும் செய்யக்கூடாது.'

தீவினையால் நேரும் பயனை ஆன்மீகத்தார் மறுபிறவியிலும் தீமை தருவதாகச் சொல்வர். திருவள்ளுவர் அதற்கு மாறாக தீமையைக் கருதாதவன் தன் வாழ்வில் தன்மேல் அன்பு கொண்டவன் ஆகான் என்று பயன் கூறியுள்ளார். 'தீவினைப் பால்' என்றது, தீய செயலின் பகுதி எனப் பொருள்படும்.

> **''நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை**
> **மேற்சென்று செய்யப் படும்''** [335]

பேச முடியாமல், விக்குள் வருகின்ற இறுதிநாள் வரும் முன்னர் நல்லபயனைத் தரும் செயலை மேலும் மேலும் செய்யவேண்டும். வாழ்நாளில் தொடர்ந்து நல்ல செயலைச் செய்யவேண்டும்' என்றார். ஆனால், பரிமேலழகரோ வீட்டின்பம் பெற நல்வினை செய்ய வேண்டும் என்று அவாவை மூட்டி மக்களைக் கயவராக்கினார்.

இவையிரண்டு குறட்பாக்களிலும் தீவினை, நல்வினை எனும் சொற்களை அமைத்தார். ஆனால் ஆன்மிகத்தார் கொள்ளும் புண்ணியம், பாவம் என்னும் பொருள் கொடுக்காமல் தீயசெயல் நல்ல செயல் என்னும் பொதுப் பொருளையே குறித்தார். இது வேண்டுமென்றே இரு சொற்களையும் கையாண்டு அவைகொண்டே ஆன்மீகத்துப் பொருள்களை மறுப்பதாகிறது.

**எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்**
**வேறாகும் மாந்தர் பலர்.'** [514]

என்னும் குறளில் நாம் காணும் கருத்து என்ன? இது 'தெரிந்து **வினையாடல்'** அதிகாரத்தில் உள்ளது. 'ஒருவனை எல்லா வகையிலும் ஆராய்ந்து பார்த்துப் பணியில் இறக்கினாலும் அவன் செய்யும் **செயலின் — வேலையின்** தன்மையால் வேறுபடுவான்; அவ்வாறு பலரும் வேறுபடுவர்' என்று பொதுவான செயல் பற்றியே, குறித்தார். இதிலும் ஆன்மீகத்தார் வினை இல்லை.

'முன்செய்த நல்வினையால் இப்பிறவியில் உயர்ந்து பயன்பெறுவான். தீவினையால் தாழ்ந்து போவான்' என்பது ஆன்மீகத்தார் சொல்லும் வினைப்பயன். திருவள்ளுவரோ இதனை மறுத்து,

பல்லக்கைத் தூக்குபவனைக் காட்டி 'இவன் முன்னே அறம் செய்யாததால் இவ்வாறு தாழ்ந்தான்' என்று சொல்லாதே. மேலே அமர்ந்தவன் 'முன்னே அறம் செய்ததால் உயர்ந்தான்' என்று சொல்லாதே என்று அடித்துச் சொல்லிய குறள்,

**''அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை**
**பொறுத்தானோ டூர்ந்தா னிடை''** [37]

என்பது.

பரிமேலழகரோ உள்ள சொற்களைக் கொண்டு பொருள் கொள்ளாமல், வாயால் சொல்ல வேண்டியதில்லை. 'காட்சியளவால் உணரப்படும்'' என்று குறளில் இல்லாத சொற்களுக்குப் பொருள்விரித்தார், இது வலிந்து கொள்ளப் பட்ட பொருள். இவ்வாறு கொள்வது குறிப்பெச்சம் என்னும் இலக்கணத்துள் அமையுமாயினும் வலிந்து கொள்ளப்படுவது. நேர்வழி இருக்க வீண் வழியில் அலை வானேன்?

**'நேர்மையாக வாழ்பவர் கெடுவதும் உண்டு;**
**பொறாமை கொண்டவர் வளர்வதும் உண்டு;**

இவற்றைக் குறிக்கத் தொடங்கி அதற்குக் காரணம் சொல்லவிரும்பினார் திருவள்ளுவர். இந்த முரணபாடான பயனுக்குக் காரணம் விளங்காத நிலைபெற்றது போன்று இதனை 'அவனவன் செயல்பற்றி ஆராய்ந்துதான் பார்க்க வேண்டும்' என்பதை ''நினைக்கப்படும்'' என்னும் சொல் வைத்து,

**''அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும், செவ்வியான்**
**கேடும் நினைக்கப் படும்''** [169]

என்றார்.

திருவள்ளுவர்க்கு ஆன்மீகத்தார் கொள்ளும் 'நல்வினைப்பயன், தீவினைப் பயன்' என்னும் கருத்து இருக்குமாயின் ''நினைக்கப்படும்'' என்று எழுதியிருக்க மாட்டார்.

**'அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்**
**கேடும் வினைப்பாற் படும்'**

என்று எழுதியிருப்பார். இவ்வாறு 'வினைப்பால்' என்னும் சொல்லமைப்பு திருவள்ளுவரால் கையாளப்படுவதாகும்.

**''கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன**
**வினைபடு பாலாற் கொளல்''** [279]

என்னும் குறளில் இதனைக் காண்கின்றோம்.

**இருள் வினை**

எனவே, திருவள்ளுவர் 'வினை' என்று குறிக்கும் இடங்களில் எல்லாம் 'செயல், தொழில்' என்னும் நடைமுறைப் பொருளிலேயே எழுதியுள்ளார். வளமும் நலமும் பெருமையும் நல்வினையால் வரும் துன்பமும் தீமையும் சிறுமையும் தீவினையால் வரும் என்பர் ஆன்மீகத்தார்—இவற்றை மறுப்பது போன்று,

**''பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**
**கருமமே கட்டளைக் கல்''** (505)

**பகுத்தறிவு முறை**

**14**

நன்மை தீமைகளுக்கு அவனவன் செயலே அளவுக்கல் என்றார். இங்குக் கருமம் என்பது அவனவன் செய்யும்செயலேயாகும். இது 'நல்வினை தீவினை'யைக் குறிக்காது. இக்குறள் 'தெரிந்து தெளிதல்' என்னும் அதிகாரத்தில் உள்ளது. உரையாசிரியர்களும் செயல், தொழில் என்றே எழுதினர்.

இக்குறளும் இருவினைப் பயன்களைக் குறிப்பாக ஒதுக்கும் **பகுத்தறிவு** முனையாகும்.

ஆனால் முதல் அதிகாரத்தில்

**''இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு''** (5)

என்னும் குறளில் ''**இருவினை**'' என்றுள்ளது. இது ஆன்மீகத்தார் கருதும் நல்வினை, தீவினை எனும் பொருள்களைக் குறிப்பதேயாகும். குறித்தாலும் இவற்றைத் திருவள்ளுவர் ஏற்றுக்கொண்டார் என்று கொள்ள வழியில்லை. ''இருவினை'' என்பதற்கு அடைமொழியாக அவர் வைத்த ''இருள்சேர்'' என்பது கொள்ளும் வழியை அடைத்து விடுகின்றது. திருவள்ளுவர் கருத்துப்படி நல்வினையும் இருள் சேர்ப்பது—துன்பம் தருவது. தீவினையும் இருள் சேர்ப்பது—துன்பம் தருவது. இரண்டாலும் பயன் இல்லை என்பதே.

தொடக்க அதிகாரத்தில் உள்ள குறளிலேயே இருவினையை இருட்டாக்கிய **திருவள்ளுவர்தம் எழுதுகோல் பகுத்தறிவு முனை கொண்டதாகும்.**

## ஊழ்

**தலை எழுத்து**

'ஊழ்' என்பது இப்போது 'விதி' எனப்படுகிறது. 'விதிப்படிதான் நடக்கும்' என்னும் நம்பிக்கை மிகப்பெரும் பாலோரிடம் நிறைந்துள்ளது. இதில் பகுத்தறிவைப் பயன் படுத்தும் முனைப்பே இல்லை எனலாம்.

**'ஊழ்'** என்னும் சொல் முறை, மலர்ச்சி, பழமை, குணம், பகை, முதிர்ச்சி எனப் பல பொருள்களைத் தரும்.

ஆனால், சங்க இலக்கியம் தவிர பிற நூல்கள் அனைத்தும் 'விதி' என்ற பொருளையே மிகுதியாகக் காட்டுகின்றன.

திருவள்ளுவர் அறத்துப்பாலின் இறுதியில் 'ஊழ்' என்று ஓர் அதிகாரம் அமைத்துள்ளார். இப்போது கொள்ளும் 'விதி' என்னும் கருத்தில்தான் அவ்வதிகாரம் கருத்தை விரிக்கிறது. ஊழை, ஆக்கும் ஊழ் ''ஆகூழ்'' என்றும், போக்கும் ஊழ் ''போகூழ்'' என்றும், இழப்பை ஏற்படுத்தும் ஊழ் ''இழவூழ்''என்றும் ஊழின் செயற்பாட்டைக் காட்டுகிறார். செயற்பாட்டைக் காட்டுவது மட்டுமன்றி ஊழின் வல்லமையை அடுக்கி அடுக்கிக் காட்டியுள்ளார்.

**ஊழின் பெரு வலிமை**

''ஆகூழ்'' அயர்ச்சியில்லாத முயற்சியைத் தரும்'' (371)

''போகூழ்'' சோம்பலை உண்டாக்கும்' (371)

''இழவூழ்'' அறிவுள்ளவனையும் பேதையாக்கும்(372)

இழவூழ் ஆக்கிய பேதைமையை ஆகூழ் வந்தால் அகற்றும்(372)

நுண்ணிய நூல்களைக் கற்றாலும் ஊழல் அமைந்த அறிவே மேம்படும் (373)

செல்வ வளமும் அறிவு நலமும் ஊழால் வேறு வேறாய் அமையும் (374)

ஊழில் நல்லவை தீமையாகும்; தீயவை நன்மையாகும் (375)

ஊழால்தான் செல்வம் நிலைக்கும்; நிலைக்காமல் போகவும் போகும் (376)

கோடி கோடியாய்ச் சேர்த்தாலும் நல் ஊழ் இருந்தால் தான் பயன்கொள்ள முடியும் (377)

நல்லூழ் இல்லையெனில் வறுமையடைந்து துறவி யாவர் (378)

இவ்வாறு ஊழின் வல்லமை அவ்வதிகாரத்தில் வலியுறுத்தப் பட்டுள்ளது. இவற்றிற்கெல்லாம்—ஊழின் வல்லமைக் கெல்லாம் மணிமுடி சூட்டியது போன்று இறுதியாக,

''ஊழிற் பெருவலி யாவுள''? (380)

என்று வினாவி 'ஊழைவிட வலிமையுடையவையும் இல்லை' என்று முடிவும் கூறப்பட்டுள்ளது. அதற்கு மேலும் ஈடில்லாத பெரும் வல்லமை உடைய ஊழை ஏதேனும் ஒன்று எதிர்த்துச் சூழ்ந்தாலும் ஊழ்தான் முன்னேறும் என்பதை,

''மற்றொன்று சூழினும்தான் (ஊழ்) முந்துறும்''

என்னும் அடியால் இறுதி முடிவாக்கினார். இந்த முடிவு ஊழின் வல்லமைக்குக் குத்தப்பட்ட முத்திரை. இத்துணை அழுத்தமாக வேறு ஒன்றும் திருவள்ளுவரால் வலியுறுத்தப் பெறவில்லை எனலாம்.

இதற்குப் பின்னரும் 'ஊழ் பற்றிய திருவள்ளுவர் கருத்தில் பகுத்தறிவு முனை இருக்கிறதா'(?) என்றே வினவத்தோன்றும். தோன்றுவதில் தவறில்லை.

ஊழைப்பற்றி அடுக்கிஅடுக்கிச் செல்லப்பட்ட வல்லமைகள் அனைத்தும் உண்மைகளாகவே கருதப்பட்டிருக்கலாம். ஆனால், எதற்காக இத்துணை அடுக்கினார்? ஏன் அழுத்தமாக அடுக்கினார்?

**கம்பரின் அம்பு**

சற்று கம்பரைப் பார்க்க வேண்டும்,

கம்பராமாயணத்தில் இராவணன் பெரும் வல்லமை கொண்ட அரசமறவன். அவன் வலிமையைக் கம்பர் ஆங்காங்கு விரிவாகவே பாடியுள்ளார். நிறைவாக, இராவணன்,

> **''மூன்றுகோடி வாழ்நாள் உடையவன்''**
> **'முயன்று பெற்ற பெரும் தவம் உடையவன்'**
>
> **'எவ்வுலகின் எந்தக் கோடியிலும் எவராலும் வெற்றி கொள்ள முடியாதவன்: அத்தகைய வரம்பெற்றவன்'**
>
> **'உலகின் திக்கெல்லாம் போய்ப் போர்செய்து வென்ற தோள்வலிமை உடையவன்''**

என்றெல்லாம் அடுக்கி அடுக்கிப் புகழ்ந்து பாடினார். முன்னரும் இங்கும் இராவணன் வல்லமை அழுத்தமாகவே அடுக்கப்பட்டுள்ளது. ஏன்?

இராவணனைப் பெருமைப்படுத்த வேண்டும் என்னும் கருத்து கம்பருக்கு இருந்ததா? அவன் வல்லமையைப் பாடும் ஆர்வம் உந்தியதா? இல்லை. பின் ஏன் வல்லமை அடுக்கப் பட்டது? இங்குதான் கம்பருக்கிருந்த உள்ளார்ந்த நோக்கும் தலை நீட்டுகிறது.

### திருவள்ளுவரின் உள் நோக்கம்

அந்த உள்ளார்ந்த நோக்கம் என்ன?

தான் போற்றப் புகுந்த இராமனை மாவீரனாகக் காட்டவேண்டும் என்பதே. 'ஈடில்லாத வல்லமை பெற்ற 'இராவணனை வீழ்த்தியவன் இராமன்' என்றால் அது இராமனை மிகச் சிறந்த மாவீரனாகக் காட்டியதாகும் அன்றோ? இராவணனின் வல்லமைகளை அடுக்க அடுக்க அத்தகையவனை வீழ்த்திய இராமனின் வல்லமைப் பெருமை முடுக்கி முடுக்கி உயர்த்தப்பட்டதாகும் அன்றோ?

இந்த உள்நோக்கத்தால்தான் இராவணன் வல்லமையை உயர்த்திப் பாடினார் கம்பர்.

இராவணனை வீழ்த்த இராமன் தன் முழுவல்லமையையும் மேற்கொள்ளவில்லையாம். அவன்தன் ஓர் அம்பு வீழ்த்தியது என்றார். அதனைச் செய்தது.

**''இராகவன்றன் புனித வாளி (அம்பு)''**

என்றார் கம்பர்.

இராவணன் மேல் அடுக்கி அடுக்கிப் பாடப்பட்ட வல்லமைகள் எல்லாம் இராமனின் ஓர்அம்பின் வலிமையால் தடுக்கித் தடுக்கி வீழ்ந்தன ஆயின.

கம்பர் இவ்வாறு இராமனைப் போற்றும்தம் உள்ளார்ந்த நோக்கத்தை வெளிப்படுத்தினார்.

> 'போற்றக் கருதிய ஒன்றன் பெருமையை நிலை நாட்ட அதன் பகையை உயர்த்திக் கூறுவது' ஓர் உத்தி.

இந்த உத்திதான் இங்கு உள்நோக்கம் எனப்பட்டது.

ஊழிற்குத் திருவள்ளுவர் அடுக்கிய வல்லமைகளும் இந்த உத்தியில், அடங்குவனவே. இந்த உத்தியாம் உள் நோக்கத்தை நாம் கருத்திற் கொண்டு திருவள்ளுவர் நோக்கத்தை அறியவேண்டும். அவர்தம் உள்நோக்கத்தை வெளிப்படுத்தக் கருதிய கருத்து.

**'அடுக்கடுக்காக வல்லமை கொண்ட ஊழை**
**ஒருவர் புறங்காண்பார்'**

என்பது.

இக்கருத்துடைய திருவள்ளுவர் வாய்மொழி

**''ஊழையும் உப்பக்கம் காண்பர்''** (620)

என்பது. 'உப்பக்கம்' காணும் வல்லமை கொண்ட இவர் யார்? அவர் ஆள்வினை உடையவர். ஆம், முயற்சி ஒன்று மட்டும் கொண்டவர். அம்முயற்சி எத்தகையதாக இருக்க வேண்டும் என்பதையும் விவரித்துள்ளார்.

'வருந்தி உழைக்கும் முயற்சி—

காலத்தாழ்ச்சியோ நெஞ்சுரத்தாழ்வோ இல்லாத முயற்சி—

மன அயர்ச்சியோ உடல் அயர்ச்சியோ இல்லாத முயற்சி' இத்தகைய ஆள்வினை உடையவரைத் திருவள்ளுவர்

**''உலைவின்றித்**
**தாழாது உஞற்று பவர்''**

என்றார். இவ்வாறு 'உஞற்றுபவர்' என்ன காண்பார்?

**''ஊழையும் உப்பக்கம் காண்பர்''**

என்று முத்தாப்பு வைத்தார். இந்த ஆப்பு முத்து ஆப்பு மட்டும் அன்று: வைர ஆப்பும் ஆகும். அத்துணை உறுதி கொண்ட கருத்தாகும்.

கருத்து வலிமைக்காகவும், இலக்கிய நயத்திற்காகவும் முன்னே கண்டவாறு கம்பரை மறுபடியும் இழுத்துப் பொருத்திப் பார்க்கலாம்.

**''இராகவன்றன் புனித வாளி''**

எவ்வெவ்வாறு இராவணனை வீழ்த்தியதாகக் கம்பர் பாடினார்?

அந்த அம்பு,

'போரால் உலகை வென்ற இராவணனின் தோள் வலிமையைத் **தின்றது.'**

'மார்பில் **புக்கு ஓடியது;** எத்தகைய மார்பு? இராவணனை எட்டுத்திக்கு யானைகளும் எதிர்த்துத் தம் கோடுகளால் — தந்தங்களால் — குத்தின. குத்தியவற்றை மீட்க முடியாமல் முறிந்தன. முறிந்தகோடுகள் இராவணன் மார்பில் பதிந்து கிடந்தன. அத்தகைய மார்பில் **புக்கு ஓடியது;**

ஓடி முதுகு வழியாகப்

**புறம்போயிற்று;**

புறம்போகும்போதே இராவணன் உயிரைக் **குடித்து விட்டுப்** புறம்போயிற்றாம்.

தின்றால் நீர்பருகவேண்டுமன்றோ?

புயவலியைத் தின்று, உயிரைப் பருகிற்றாம்' முழுப் பாடலும் காணத்தக்கதே :

**"மும்கோடி வாழ் நாளும்**
**முயன்றுடைய பெருந்தவமும், முதல்வன் முன்னாள்,**
**எக்கோடி யாராலும்**
**வெலப்படாய் எனக்கொடுத்த வரமும், ஏனைத்**
**திக்கோடி உலகனைத்தும்**
**செருக்கடந்த புயவலியும் தின்று, மார்பில்**
**புக்கோடி உயிர்பருகிப்**
**புறம்போயிற் றிராகவன்றன் புனித வாளி"[1]**

1. கம்பர் : க.இரா இரா.வ. படலம்—198

இங்கு எடுத்துக் கொண்ட கருத்தின் வலிமைக்காக இந்த அம்பை ஆள்வினையுடன் பொருத்திப் பார்க்கலாம் :

அம்பு,

'புயவலியைத் **தின்றது**';

'மார்பில் **புக்கு ஓடியது**';

'உயிரைப் **பருகியது**';

'புறம் போயிற்று';

திருவள்ளுவர் காட்டும் ஆள்வினையோடு இவை பொருத்திப்பார்க்கக் கூடியவை. திருவள்ளுவர் குறிக்கும் ஆள்வினையாளர்,

**உலைவின்றி**
**தாழாது**
**உஞற்றுபவர்;**
**'உப்பக்கம்' காண்பர்.**

இராவணனின் அடுக்கடுக்கான வல்லமையை இராமனின் ஓர் அம்பு நான்கு செயல்களால் வென்றது. அடுக்கடுக்கான வல்லமை கொண்ட ஊழை ஆள்வினையாளர் நான்கு செயல்களால் உப்பக்கமாம் புறங்கண்டு வெல்வார்.

**கம்பர் பெற்ற இரவல்**

இங்குக் கம்பராமாயணத்தைக் காட்டுவது திருக்குறளுக்கு மேற்கோள் அன்று. திருவள்ளுவர் கடைப்பிடித்த உத்தியைக் கம்பர் இரவல் பெற்றுக் கடைப்பிடித்துள்ளார் என்பது கருதியேயாகும். கம்பர் திருவள்ளுவர்தம் திருக்குறள் கருத்துக்களைப் பரவலாக காட்டும் பாங்குணர்

யவர். ஒரு விருத்தத்திலேயே இரண்டு மூன்று குறட் கருத்துக்களை அடக்கிப் பாடியவர். எனவே, திருவள்ளுவர் வழி கொண்ட கம்பர் என்பதே இங்கு காணத்தக்க தாயிற்று.

('பார்த்தீரா!; பார்த்தீரா! பகுத்தறிவு முனையைக் காட்டத் தொடங்கிக் கம்பராமாயணத்தைக் காட்ட நேர்ந்துவிட்டது' என்று கருதவேண்டியதில்லை; பாரதியாரைப் போற்றப் பாவேந்தர் கையாண்ட முறையின் சார்புப்படி இது. மற்றும் மக்கள் அறிந்தவற்றைக் கூறி அறியாததை அறிவுறுத்தும் திருவள்ளுவர் பாங்கையும் கொண்டதாகும்.)

**உப்பக்கம்**

''ஊழையும் உப்பக்கம் காண்பர்'' என்னும் தொடர் கருத்தாழம் கொண்டது; ஊழின் வல்லமைகள் அனைத்தையும் வீழ்த்திக் காட்டும் கருத்தாழம் கொண்டது. 'ஊழைத் தொய்வாக்கிக் காட்டவேண்டும் என்பதில் திருவள்ளுவர் மனம் பற்றி இதனை எழுதினார்' என்று கொள்ளவேண்டியுள்ளது. இதிலுள்ள மூன்று சொற்களும் திருவள்ளுவரின் உள் உணர்வைக் காட்டுகின்றன.

'ஊழை உப்பக்கம் காண்பர்' என்றில்லை. 'ஊழையும்' என்றொரு 'உம்மை' வைத்தார். இதை இலக்கணம் 'உயர்வு சிறப்பு உம்மை' என்னும் ஊழ் அதிகாரத்தில் கூறப்பட்ட அத்துணைச் சிறப்புக்களையும் நினைவுபடுத்துகிறது, இந்த உம்மை. அங்குக் கண்ட ''ஊழைவிடப் பெரும் வலிமையுடையது வேறு ஒன்றும் இல்லை, — ''ஊழிற்பெருவலி யாவுள'' — என்பதையும் இங்கு கொணர்ந்து நிறுத்துகிறது. ''மற்று ஒன்று சூழினும் தான் முந்துறும்'' என்ற ஊழின் முன்னேறும் வல்லமையையும் நம் முன் வைக்கிறது இந்த உம்மை.

அத்தகைய "ஊழையும் உப்பக்கம் காண்பர்"

அது என்ன உப்பக்கம்?

அ, இ, உ என்னும் மூன்றும் சுட்டெழுத்துக்கள்

அ — தொலைவில் — சேய்மையில் உள்ளதைச் சுட்டும்;

இ — அண்மையில் — அண்டையில் உள்ளதைச்சுட்டும்;

உ — இரண்டிற்கும் இடைப்பட்ட மையத்தைச்சுட்டும்;

இங்கு அப்பக்கமோ இப்பக்கமோ சுட்டப்படவில்லை. **'உப்பக்கம்'** என்று சுட்டியமை சிறப்பாக ஆராயத் தக்கதாகும்.

உரையாசிரியர் அனைவரும் 'உப்பக்கம்' என்பதற்குப் "புறங்காண்பர், — முதுகு புறங்காண்பர், புறத்து இடுவர், விதி தன்மையும் புறத்திடுவர்" எனப் பொருள் எழுதினர். மேற்போக்காகக் காணும்போது இப்பொருள் பொருந்தும். ஆழ்ந்து நோக்கினால் ஆழமான கருத்து பொதிந்திருப்பதைக் காணலாம்.

இதனை ஒத்த, 'உப்பால்' என்னும் சொல் பரிபாடலிலும், சிலப்பதிகாரத்திலும் உள்ளது. ஆனால் 'உப்பக்கம்' என்பது திருவள்ளுவரின் ஆக்கச் சொல். அடுத்துத் தோன்றிய திருவள்ளுவமாலையில் "உப்பக்கம் நோக்கி உபகேசி தோள்மணந்தான்" [1] என்று இச்சொல் எடுத்தாளப்பட்டது.

"ஊழை ஒரு மாந்தனாகவோ ஒரு பொருளாகவோ உருவகமாகக் கொண்டால் அதன் உயிரோட்டமான மையத்தை 'உப்பக்கம்' குறிக்கிறது. உப்பக்கத்தின் ஆழ்ந்தபொருளைக் கம்பர் காட்டிய அம்புகொண்டு காண்பது ஒரு வாய்ப்பாகும். அந்த அம்பும் (பரிமேலழகர் முதலிய உரையாசிரியர்கள் எழுதிய 'புறங்காணல்'

என்னும் பொருளுக்கொப்ப) 'புறம் போயிற்று' என்று கண்டோம். புறம்போகும் செயலை எத்துணை வல்லமைச் செயல்களுக்குப் பின்னர் அந்த அம்பு செய்தது? மார்பின் உள்ளே புகுந்தது; புகுந்து தங்கிவிடவில்லை; ஓடியது; தோள் வலிமையை உள்ளேயே தின்றது. தின்று உயிரைப் பருகியது. இத்துணையும் செய்துவிட்டுத்தான் புறம் போயிற்று. இராவணன் உடலுக்குள்ளே இத்துணையும் செய்ததாகக் கம்பர் எழுதிய விளக்கச் சொற்களையெல்லாம் அடக்கியது போன்று ஒரே சொல்லாக 'உப்பக்கம்' என்றார் சுருங்கச்சொல்லும் குறளாசிரியர்.

அம்பின் இத்துணை வல்லமைகளையும் இங்கு ஆள்வினை செய்தது எனக் கொள்ளுமாறு 'உப்பக்கம்' என்னும் சொல் அமைந்துள்ளது.

ஆள்வினை ஊழை எதிர்க்கும்;

முந்துறும் ஊழை எதிர்க்கும்;

எதிர்த்து அதன் மைய இடமாம் உள்ளேபுகும்; புகுந்து உள் வல்லமையைப் பிளக்கும்; அதன் உயிரோட்ட மைய மான தெய்வத்திறனைப் பருகும்; பருகி வீழ்த்திப் புறங் காணும்; புறங்கண்டு வெற்றிகண்ட வீறுடன் வீழ்ந்து கிடக்கும் ஊழைக் கண்டவாறு தலைதூக்கி நிற்கும். இதனைக் (உப்பக்கம்) "காண்பர்" என்னும் சொல் சொல்கின்றது.

திருவள்ளுவர் ஆழ்ந்த நினைவுடன் 'உப்பக்கம்' என்னும் சொல்லைப் பெய்து ஊழைச் சாடியுள்ளார்; ஆள்வினையைப் பாடியுள்ளார்.

---

1. நல்கூர் வேள்வியார் : திரு. மாலை.

''உப்பக்கம் காண்பர்'' என்றதால் 'ஊழ்' என்னும் ஆன்மிக விதி உயிரற்று, உடல் குலைந்து சிதறித் தகர்ந்து போயிற்று. அதற்குத் தாம் எழுதிய வல்லமைகளை எல்லாம் 'உப்பக்கம் காண்பர்' என்றதால் தகர்த்து விட்டார். இவ்வாறு ஆள்வினையின் வல்லமையையும் சிறப்பையும் உயர்த்துவதற்குத்தான் ஊழை அடுக்கடுக் காகச் சிறப்பித்தார் என்பதைக் காண்கின்றோம்.

ஆள்வினை அதிகாரத்தின் முடிந்த முடிவுக் கருத்தாக இக்குறளைத் திருவள்ளுவர் அமைத்தார். இந்த அமைப் புடன் ஊழ் அதிகார இறுதியாம் முடிந்த முடிவை அமைக்கும்போதும் — மற்றொன்று சூழினும் தான் முந்துறும்'' என்று அமைக்கும்போதும் அவர் கொண்ட உள்ளுணர்வின் அடையாளத்தைத் காண முடிகிறது. அது ஊழின் வல்லமை முத்திரை என்று முன் காட்டப்பட்டது. அந்த முத்திரையில் ஒரு பொடி வைத்தார் திருவள்ளுவர். அந்தப் பொடியை '**முந்துறும்**' என்னும் சொல் காட்டு கின்றது. இச்சொல்லிற்கு ''முற்பட்டு நிற்கும் — முன்னே வந்து நிற்கும் — முந்துற்று நிற்கும்'' என்றே உரை யாசிரியர்கள் பொருள் எழுதினர்.

எனவே ''மற்று ஒன்று'' சூழ்ந்து எதிர்த்தாலும் ஊழ் மீண்டும் எதிர்த்து முன்னே நிற்கும் — முந்தி வந்து நிற்கும், நிற்கும் என்றாரேயன்றி வெற்றிகொள்ளும் — வென்று விடும் என்று எழுதவில்லை. 'ஊழ் வென்று விடும்' என்னும் கருத்து திருவள்ளுவர்க்குத் தோன்றியிருந்தால்,

**பகுத்தறிவு முனை**

**15**

''தான்முந்துறும்'' என்று எழுதாமல் ''தான்வென் றிடும்'' என்று எழுதி யிருப்பார். இதனால் குறள் இலக்கணமும் கெடாது. அத்துடன் 'வென்றுவிடல்' [158] ''வென்றிடினும்'' [931] என்னும் சொல் லாட்சிகள் அவர் எழுத்தில் காணப் படுகின்றன.

எனவே, இவ்வகையிலும் ஒரு பொடியாக — ஒரு குறிப்பாக முன்னரே ஊழிற்கு தொய்வைத் திருவள்ளுவர் முன்னறிவிப்பாகக் குறித்துள்ளமை அறியவேண்டியதாகும்.

அனைத்து நூல்களும், ஊழின் வல்லமைகளையே பேசின. ''ஊழ்வினை உறுத்துவந்து ஊட்டும்'' என்பதே சிலப்பதிகாரத்தில் ஒரு குறிக்கோளாகச் சொல்லப்பட்டது. திருவள்ளுவப் பெருந்தகைதான் ''உப்பக்கம் காண்பர்'' என்னும் **ஆள்வினையின் கூர்முனையால் பகுத்தறி முனையை வடித்துள்ளார்.**

**மேல் உலகம் — கீழ் உலகம்**

நாம் வாழும் இந்நிலம் மண்ணுலகம். இதற்கு மேல் வானத்தில் விண்ணுலகம் உள்ளது என்றும், கீழே கீழ் உலகம் உள்ளது என்றும் ஒரு கற்பனை எழுந்தது. அதற்கேற்பக் கதைகளும், நிகழ்ச்சிகளும் படைக்கப்பட்டன. விண்ணுலகம் சென்றால் வீடுபேற்றை — மோட்சத்தை அடையலாம். கீழுலகம் சென்றால் நிரயத்தை—நரகத்தை அடையலாம் இவ்வாறு நான்மறை, மனு முதலிய வடநூல்கள் விரித்து விரித்து எழுதியுள்ளன. இக்கருத்துக்கள் தமிழ் மண்ணிலும் பையப் பையப் பரவலாக ஊன்றப்பட்டன. காலப்போக்கில் உறுதியாகவும் பதியப்பட்டன.

திருவள்ளுவர் காலச் சூழலில் இக்கருத்துக்கள் நிலவின அவற்றைத் திருவள்ளுவரும் தம் நூலில் வைத்தா ''மேலுலகம்'' [222]; ''புத்தேள் உலகம்'' [58, 113, 234 290] ''அவ்வுலகம்'' [247]; ''வானோர்க்கு உயர்ந்த உலகம்'' [346] எனவும், ''இருள் சேர்ந்த இன்னா உலகம்'' [243] என்றும் திருக்குறளில் உள்ளன.

**ஒப்புரவும் தேவர் உலகமும்**

இவற்றைக் கூறித் திருவள்ளுவர் சில கருத்துக்களை வலியுறுத்தியுள்ளார். அவற்றள் சில இடங்களில் புத்தேள் உலகம் சற்றுத் தொய்வுபடுத்தியும் கூறப்பட்டுள்ளது.

'ஒப்புரவு' என்பது மிக உயர்ந்த பண்பாடு. அதைப் போன்ற நல்லபண்பைக் காணமுடியாது என்று கூறப்புகுந்த திருவள்ளுவர்,

> ''புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறலரிதே
> ஒப்புரவின் நல்ல பிற'' (213)

என்றார். இங்கு 'ஒப்புரவு' என்னும் நல்ல பண்பைப் புத்தேள் உலகத்தில் காணமுடியாது என்றமை புத்தேள் உலகம் ஒரு நல்ல பண்பைப் பெறாதது என்று தொய்வு படுத்தப்படுகிறது. இது குறிக்கத்தக்க ஒன்று.

**மேலுலகம் வேண்டாம்**

தமிழர்தம் பண்புகளில் தலைசிறந்தவை காதல், வீரம் ஈகை புகழ். இவற்றுள்ளும் ஈகையும் அதன் வழிப்புகழும்.

> ''ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
> ஊதியம் இல்லை உயிர்க்கு'' (231)

என்று உயிர்க்கு ஊதியம் எனப்பட்டன. இணையற்ற ஊதியம் என்றார். ஈகை செய்வது அரிய செயல் அன்று; எளிய செயலே என்பதை

> ''வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை'' (221)

என்பதால் கூறினார். ஏழைக்கு அவருக்கு வேண்டிய ஒரு வாய்ச்சோறு கொடுப்பதும் ஈகையாகும். தமிழன் ஈவான்;

ஏற்க மனம் கூசுவான். நம் காலத்துக் கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் அவர்கள் ''தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கோர் குணமுண்டு'' என்று பாடத் தொடங்கி அக்குணங்களை அடுக்கினார். அவற்றுள் ஒன்று,

**''தானம் வாங்கிடக் கூசிடுவான்:**
**தருவது மேல் எனப் பேசிடுவான்''**

என்பது.

அவ்வையார் '**ஐயம் இட்டு உண்''**; ஆனால் நீ ''ஏற்பது இகழ்ச்சி''[1] என்றார். கழைதின்யானையார் என்ற பெயர் பெற்ற சங்கப்புலவர்.

**''கொள்ளனக் கொடுத்தல் உயர்ந்தன்று (உயர்ந்தது)**
**கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று''[2]**

என்றார். திருவள்ளுவர் தமிழ் மண்ணில் வறுமையில் சிக்கியவர் மிகுதியாக இருப்பதையும் அவர் இரந்து வாழ்தல் அன்றி வேறு வழியற்றவராக இருப்பதையும் பார்த்து இரத்தலை ஏற்று எழுதினார். ஆனால், அது வேண்டாதது என்தற்கு 'இரவச்சம்' என்றொரு அதிகாரம் அமைத்தார். இரத்தலின் கொடுமையைப் பாடினார். அவர்நலம் கருதியும் ஈகையை வலியுறுத்தினார். அவ்வலியுறுத்தலில் முத்திரை போன்ற ஒன்று,

**''நல்லாறு எனினும் கொளல்தீது; மேல் உலகம்**
**இல் எனினும் ஈதலே நன்று''** **(222)**

1. அவ்வையார் : ஆத்தி : 7, 8
2. கழைதின்யானையார் : புறம் : 204-3, 4

என்பது. நல் வழியில் வருகிறது என்பதற்காகவும் இரந்து ஏற்கக் கூடாது; அதனைவிட ஈதல்தான் நல்லது. அவ்வாறு ஈவதால் மேல்உலகமே கிடைக்காது என்றாலும் 'மேல் உலகை வேண்டாம்' என்று தள்ளிவிடலாம்; தள்ளிவிட்டு ஈயலாம்.

இக்குறளின் கருத்து ஊன்றிக் காணத்தக்கது. 'மேல் உலகம் பேரின்பமானது; கிடைத்தற்கு அரியது' என்பர். அதனை அடைய நல்லறங்கள் பல செய்யவேண்டும். துறவு நிலை கொண்டு உடலை வருத்தித் தவம் செய்யவேண்டும். அதுதான் 'இன்பத்தின் முடிந்த முடிவு' என்பர்.

**பகுத்தறிவு முனை 16**

இவ்வாறு வலியுறுத்தப்படும் மேல் உலகம் 'கிடைக்காமல் போனால் கவலை இல்லை' என்று திருவள்ளுவர் எழுதியமை மேல் உலகை ஒதுக்குவதன்றோ; மேல் உலகை ஒதுக்குவதாகச் சொல்லவே கூசுவர்; அஞ்சுவர். ஆனால், திருவள்ளுவர் எக் கூச்சத்தையோ, ஐயத்தையோ, அச்சத்தையோ கொள்ளாது "மேல் உலகம் இல் எனினும்;' என்று அறிவார்ந்த வல்லமையுடன் எழுதினார். 'மேலுலகம் இல்' என்பதற்கு 'மேலுலகம் கிடைக்காது' என்றும் பொருள். 'மேல் உலகம் என்று ஒன்றே இல்லை' என்றும் குறிப்புப் பொருள்.

இது அறிவார்ந்த கருத்து. முன்னர் மேல் உலகத்தைக் காட்டி அறிவுறுத்தினார். அவை அனைத்தும் உலகத்தோடு ஒட்டிய கருத்தை எடுத்து மொழிந்ததாகும். இக்குறள் அறிவோடு பொருத்தி அறிவுக்கூர்மையுடன் கண்ட பண்பாட்டுப் **பகுத்தறிவு முனை**யாகின்றது.

## வேள்வி

'வேள்வி' என்பது 'யாகம், யக்ஞம்' என்னும் வடசொற்களுக்குக் கொள்ளப்பட்ட தமிழ்ச் சொல். யாகம் என்பது

யூபம் என்னும் வேள்வித்தூண் நட்டு, தீக்குழியிட்டு, வடமொழி மந்திரம் ஓதிச் செய்யப்படுவது. இது ஆரியர்க்கு மரபுவழி உரியது; வடவரின் வழக்காறு; பார்ப்பனரின் பயன் வயல். அவர்தம் நான்மறைகளில் இரண்டாவதாகிய 'யசூர் மறை, வேள்விக்காகவே செய்யப்பட்டது.

**வடவர்க்கே உரியது**

வேள்வியில் வடமொழியே ஓதப்படும். பிறமொழிக் காற்றும் நுழையாது. நூற்றுக்கு நூறு பார்ப்பனரே அமைவர். மற்றவர் பங்கு கொள்ள வழியில்லை. அரச குலத்தினரும் வணிகரும் செய்விப்பர். பங்குகொள்ள முடியாது. நாட்டு நலம் கருதி மழைபெய்விக்க இது செய்யப்படும் என்பர். ஆனால் ஒருவரை சாகவைக்கும் நோக்குடன் செய்யப்படுவதும் உண்டு. இவ்வேள்விக்கு 'வாத்ரு சம்கார யக்ஞனம்' என்று பெயர்.

கேரளத்து வைக்கத்தில் பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்கள் தாழ்த்தப்பட்டோரை கோயிலில் நுழையச் செய்யும் போராட்டம் நடத்தினார். அதனை விரும்பாத பார்ப்பனர் இந்த வேள்வியைச் செய்தனர். பயன் பெரியார் நீண்டகாலம் வாழ்ந்தார்.

வேள்வி தமிழ் மண்ணில் இறக்குமதி செய்யப்பட்டது. குடிமக்கள் இதுபற்றி அறியார். தொடர்பு கொண்டதில்லை. முற்காலத்தில் மன்னர்களே பார்ப்பனர் வேண்டுகோளால் இதனைச் செய்தனர். இதனைச் செய்து இதனால் பெயர்பெற்ற மன்னர் இருந்தனர்.

**''பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி''**
**(பாண்டியன்)**

**'இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளி' (சோழன்)**

**'பல்யானைச் செல்கெழு குட்டுவன்'' (சேரன்)**

மூவேந்தரும் குறிக்கத்தக்கவராயினர், மற்றும்பல மன்னரும் செய்தனர்; காணிக்கையும் பயனும் பெற்றோர் பார்ப்பனமே. பாலைக் கௌதமனார் என்னும் பார்ப்பனப் புலவர் மேலே கண்ட சேர மன்னன்மேல் பத்துப் பாடல்கள் பாடினார்.

> ''பாடிப்பெற்ற பரிசில் (சேரமன்னன்) நீர் வேண்டியது கொண்மின் என, 'யானும் என் பார்ப்பனியும் சுவர்க்கம் புகல் வேண்டும்; என (மன்னன்) **பார்ப்பாரிற் பெரியோரைக் கேட்டு** ஒன்பது பெரு வேள்வி வேட்பிக்க, பத்தாம் பெருவேள்வியில் பார்ப்பானையும். பார்ப்பனியையும் காணாராயினார்''[1] என்று பதிற்றுப்பத்தின் மூன்றாம் பத்தின் இறுதியில் உள்ள பதிகம் அறிவிக்கிறது.

இது கொண்டும் வேள்வி பார்ப்பனர்க்குரியது; அவர்தம் பயனுக்கேற்பட்டது, ஏற்பாடுகளும் பெருஞ்செலவும் மன்னனுக்குரியவை என அறியலாம்.

திருவள்ளுவர் காலச் சூழலில் தமிழ் மண்ணில் மன்னராலும், செல்வப் பெருமக்களாலும் பார்ப்பனர் வேள்வி பரவலாக உலவி வந்தது. தமிழர் அவ்வேள்வியில் எவ்வகைப் பங்கும் பயனும் பெற முடியாது; அவர் தமிழ் மொழியும் அண்ட முடியாது.

**விருந்து-வேள்வி**

'வேள்வி' என்னும் சொல்லும் யாகம் என்பதற்கு உரிமையுடைய சொல் அன்று. 'வேள்வி' என்னும் சொல்லிற்கு 'விரும்பிச் செய்யப்படுவது' என்று பொருள்.

1. பாலைக் கௌதமனார் : பதி. பதிகம். 3.

விரும்பிச் செய்யப்படும்எதையும் 'வேள்வி என்னும் சொல் குறிக்கும்

திருவள்ளுவர் விரும்பிச் செய்யப்படும் விருந்தை 'வேள்வி' என்றார். தமிழரின் விருந்தோம்பல் எனப்படு வதைக் கண்ட வடவர் விருந்தோம்பலை 'மனுசயாகம்' என்று சேர்த்துக் கொண்டனர்:

**''இணைத்துணைத் தென்பதொன் றில்லை. விருந்தின்**
**துணைத்துணை வேள்விப் பயன்''** (87)

**''பரிந்தோம்பப் பற்றற்றேம் என்பர்; விருந்தோம்பி**
**வேள்வி தலைப்படா தார்''** (88)

என்னும் குறட்பாக்களில் விருந்தை கேள்வி என்றார் திருவள்ளுவர். பிறரும் பாடினர்.

ஆனால், திருவள்ளுவர் வேள்வியை 'வேட்டல்' என் னும் சொல்லால் குறித்தார். தீக்குழியில் செய்யப்படும் வேள்வியைத்தான் 'வேட்டல்' என்றார். தீக்குழியில் நெய் ஊற்றி, நெருப்பை வளர்த்து, யாகக் கடவுளர்க்கு உணவுக் காணிக்கையாகப் பல பொருள்களை இடுவர். இப்பொருள் கள் அவிந்து—வெந்து கடவுளர்க்குக் காணிக்கையாகும் இவ்வாறு அவிவதால் திருவள்ளுவரும், அதனை 'அவி' என்றார். 'அவி! என்பது வடமொழியில் செய்யப்படும் 'அவிசு' என்பதன் தமிழுருவம் அன்று. 'அவிசு' என்பதன் சொல் மூலமும் வேறு; பொருளும் வேறு.

**அவி உணவு**

**'செவி உணவாகிய கேள்வியறிவை உடையவர்**
**அவிஉணவைக் கொள்ளும் ஆன்றோரோடு ஒப்பாவார்'** (413)

என்றார் திருவள்ளுவர். இங்கு 'அவி உணவு' என்றது, 'அவிசு' அன்று. உடலைக் கொழுப்பால் கொழுக்கவிடாது அவியக் (இளைக்கச்) செய்யும் இயற்கை உணவைக் குறிக்கும். ''அவியுணவின் ஆன்றோர்'' என்பது ஆன்றவிந் தடங்கிய சான்றோரைக் குறிக்கும.

தமிழ் மண்ணில் வடவர் யாகம்—வேள்வி பெருகியது. பூதயாகத்தில் விலங்குகளை உயிர்ப்பலியாக இடுவர். ஆவினங்களும், ஆடுகளும் சிலபோது மாந்தரும் பலிப் பொருளாயினர். இவ்வாறு உயிர்ப்பலியிடும் செயல் திருவள்ளுவரால் ஏற்றுக்கொள்ளப்படாதது. உணவிற்கு உயிரைக் கொல்லுவதை மறுத்து 'புலால் மறுத்தல்' கூறியவர் திருவள்ளுவர். 'கொல்லாமை' என்று அதிகாரம் படைத்தவர்.

**''கொல்லாமை அறவினை''** (321)

என்றார்.

**''ஒன்றாக நல்லது கொல்லாமை''** (323)

என்றார்.

**''தன்னுயிர்போவதாயினும்பிறிதுயிர்கொல்லற்க''** (327)

என்றார்.

வடவரின் யாகத்தில்—வேள்வியில் உயிர்ப்பலி எனக் கொலை கடைப்பிடிக்கப்பட்டதைத் திருவள்ளுவர் தமிழ் மண்ணில் கண்டார். வேள்வியின் பெயரால் 'அவிசு' என்று உயிரைக் கொலை செய்தும் நெருப்பிலிடுவதைக் கண்டார்.

**''அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று''** (259)

என்று அழுத்தமாக எழுதினார்.

**'உண்ணுதற்கு ஓர் உயிரைக் கொல்லாமை ஆயிரம் வேள்வி செய்வதைவிடச் சிறந்தது'**

என்னும் கருத்து வடவர் வேள்வியைச் சாடும் கருத்து, ஓர் உயிரைக் கொல்லாமை ஆயிரம் வேள்வியிலும் சிறந்தது. இஃது 'உயிர்மேல் அருள்' என்பது மட்டும் அன்று; புலால் உண்ணாமையை வலியுறுத்துவது மட்டும் அன்று; தமிழ் மண்ணில் அறிவிற்குப் புறம்பாக நடந்த வேள்விகளை— ஆயிரக்கணக்கில் நடந்தாலும்—அவ்வேள்விகளை மறுக்கும் கருத்து.

**பகுத்தறிவு முனை 17**

வடவர் வேள்வியில் நான்மறை ஓதப் படும். நான்மறையாம் வேதம் என்பதன் பொருள் 'அறிவிற்கு எட்டாதது' என்னும் பொருள் கொண்டது. 'அறிவால் அதனை ஆராயாதே' என்று தடைபோடுவது.

திருவள்ளுவர் அதனையும் அது ஓதப் படும் வேள்வியையும் அறிவிற்கு ஆட்படுத்தி ஆராய்ந்து ஆயிரம் வேள்வியும் தாழ்ந்து போகும் என்று எழுதியது **பகுத்தறிவு முனையாகக்** கூர்ந்து நிற்கிறது.

## எழு பிறவி, இம்மை—மறுமை

'எழு பிறவி'யைத் திருவள்ளுவர் ஏற்றே பாடியுள்ளார். இம்மை, மறுமை'யைச் சிலவகை முனைகளில் வலியுறுத்தியும் உள்ளார். இவை பகுத்தறிவைப் புறந்தள்ளியவை. அதனால்தான் இப்பேச்சு இந்நூல் **'பகுத்தறிவு முனை'** என்றும் தலைப்பைப் பெற்றது. இன்றேல் 'திருவள்ளுவம் பகுத்தறிவு மனை' என்று முடிசூட்டப்பெற்றிருக்கும்.

# 9. ஐயம் நீக்கும் பகுத்தறிவு முனைகள்

**இந்திரன்**

> **''ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார் கோமான்**
> **இந்திரனே சாலும் கரி''** *(25)*

கௌதம முனிவர் மனைவி அகலிகையை இந்திரன் வஞ்சமாக புணர்ந்தான். அறிந்த கௌதமர் இந்திரனுக்கு உடம்பெல்லாம் கண்கள் பெண்குறிபோல் அமையுமாறு சாபமிட்டார். எனவே, ஐந்தவித்த கௌதமன் ஆற்றலுக்கு உடம்பெல்லாம் பெண்குறிக் கண்களாகப் பதியப்பெற்ற இந்திரன் கண் காணும் சான்றாளான். இந்தக் கதையை குறிக்கிறது இக்குறள் ''அகல்விசும்புளார் கோமான் இந்திரன்'' என்றதால் இது. வானத்துக் கோமான் இந்திரனையே குறிக்கும்; மற்றவரைக் குறிக்காது. எனவே, கௌதமர் கதையைத்தான் குறிக்கிறது. இது பகுத்தறிவை உடைக்கிறது. எனவே, திருவள்ளுவர்தம் பகுத்தறிவு முனை நோக்கில் ஐயத்தை உண்டாக்குவது இயல்பே.

இந்திரன் பெண்குறிக் கண்கள் ஆயிரம் பெறும் சாபத்தை மட்டும் பெறவில்லை. அவன் ஆண்குறி அறுந்து போகும் சாபமும் பெற்றான். தவறுக்குரிய காரணக்

குறிகள் சாபக் குறிகளாயின. இதுபோன்ற கொச்சைக் கதைகள் வடமொழியில் நிறைந்துள்ளன. இந்த இழி கதையும் தமிழ் மண்ணில் உலவ விடப்பட்டமை இந்த மண் பெற்ற அவலங்களுள் ஒன்று.

மாந்தர்க்கு தெரிந்ததும் பரவலாக அறிமுகமாகியுள்ளதுமாகிய இக்கதையைக் குறிப்பதால் தாம் அறிவிக்க விரும்பிய 'ஐந்தவித்தான் ஆற்ற'லைத் தெளிவாக காட்ட முடியும் என்பதே திருவள்ளுவர் நோக்கம். இதனையும், ''அடியளந்தான் தாயதெல்லாம்'' என்று திருமால் — வாமனன் — மாவலி கதையை எடுத்தாண்டது போன்றே இதனையும் எடுத்து மொழிந்தார் — தெரிந்ததைக் கொண்டு தெரியவைக்க வேண்டியதை எளிதாக்க இதனைக் கையாண்டார் என்று கொள்வதே சாலும்.

**பெய்' என'ப் பெய்யுமா ?**

**''தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை''** [55]

இக்குறளும் பகுத்தறிவு நோக்கில் ஐயத்தை மூட்டுவதாகின்றது. கற்புடையவள் 'பெய்' என்று சொன்ன அளவில் மழை பெய்துவிடுமா? பெய்யாது. உண்மைதான். இது குறள் கருத்து அன்று. 'பெய் என்று சொன்னால் பெய்யும்' என்பதற்கு.

''அகர முதல எழுத்தெல்லாம்'' என்னும் முதற் குறளைக் காணவேண்டும். முதற் குறள் உவமை அமைந்த குறள். ''அகர முதல எழுத்தெல்லாம் **போல** ஆதிபகவன் முதற்றே உலகு'' என்று பொருள் காண்போம். இதில் 'போல' என்னும் உவம உருபு குறளில் மறைந்து வருவதால் 'எடுத்துக்காட்டு உவமை அணி' கையாளப்பட்ட குறளாகும்.

‘‘தெய்வம் தொழாஅள்’’ குறளும் இதுபோன்று எடுத்துக்காட்டு அணியால் அமைந்தது. தொழுது எழுவாள் மிகவும் இல்லறப் பயன் தருபவள். விரும்பியவற்றை விரும்பியவண்ணம் தரும் பயனுடையவள், இதனைக் குறிக்க.

‘பெய் என்றதும் உடனே மழை பெய்தால் எந்த அளவு பயனோ அது போன்றவள் கற்புடையவள்’ என்பது பொருள்.

**பகுத்தறிவு முனை**

**18**

இப்பொருளை வைத்தே திருவள்ளுவர் இக்குறளை எழுதினார். இவ்வாறு பொருள் கொள்வதற்கு அவரே மற்றோரிடத்தில் சான்று வைத்துள்ளார்.

**‘‘வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால், வீழ்வார்க்கு**
**வீழ்வார் அளிக்கும் அளி’’** [1192

என்னும் இக்குறள் காதலர் தமக்குள் வழங்கிக்கொள்ளும் அன்பின் பயனைக் குறிப்பது. அப்பயன் ‘உலகில் வாழ்வார்க்கு வேண்டும்போது வானம் மழைப்பயனைத் தருவது போன்றது என்பதை ‘வாழ்வார்க்கு வானம் பயந்தது அற்று’ (போன்றது) என்று உவமையாகக் காட்டுகிறது.

இதிலுள்ள ‘வாழ்வார்க்கு வானம் பயப்பது போல என்னும் உவமையே ‘‘பொய்யெனப் பெய்யும் மழை’ என்னும் உவமையாக தெய்வம் தொழாதவளுக்கு அமைந்தது.

கற்புடையவர் பெய் என்றால் மழை பெய்யும் என்பது பொருள். இது அறிவிற்குப் பொருத்தமும் அன்று.

ஆனால், இப்படி ஒரு கருத்து தமிழ் இலக்கியங்களிலும் புகுந்திருந்தது. ஒரு பெண் ஒருவன் அணைத்ததால் அவனுக்கு உரியவள் ஆகி, மனைவியாகி, கற்புடையவளாக ஆனாள்; அவளை,

> ''பெருமழை தரல்வேண்டின் தருகிற்கும்
> பெருமையளே'' [1]

என்று கலித்தொகை பாடிற்று. திருவள்ளுவரோ பகுத்தறிவிற்கு ஒத்துவரும் பாங்கில் உவமையாக இக்குறளை அமைத்தார். எனவே, இதனால் இக்குறள் **பகுத்தறிவு முனை** கொண்டதாகிறது. முன்னர் எழுந்த ஐயமும் கலைகிறது.

**பாம்பு விழுங்கிய மதி**

வானத்தில் 'கோள் மறைவு' எனப்படும் 'கிரகணம்' ஏற்படுவதை அறிவோம். இது எவ்வாறு ஏற்படுகிறது? ஞாயிற்றின் ஒளித்தடையால் நேரும் நிழலால் ஏற்படுகிறது.

பூவுலகம் தன்னைச் சுற்றும் திங்களுடன் ஞாயிற்றைச் சுற்றுகிறது. இச்சுற்றலில் பூவுலகு நடுவில் அமைய இருபக்கமும் ஞாயிறும் திங்களும் நேர்கோட்டில் அமைவது உண்டு. இந்த அமைப்பில் திங்கள் ஞாயிற்றின் ஒளி நடுவில் உள்ள பூவுலகின் நிழலில் புகுந்து ஒளி குறைந்து முழு நிலவில் இருண்டு, வெளி வரும்போது ஒளி பெறுவது 'திங்கள் மறைவு'—சந்திர கிரகணம் எனப்படும்.

இதனை மேலை நாட்டு வானவியல் அறிஞர் கண்டறிந்தனர்.

ஆனால், இந்தியரில் வடபுலத்தார் கிரகணத்திற்கு வேறு காரணம் கூறினர். இராகு, கேது என்னும் பாம்புகள்

1. கபிலர் : கலி : 39 — 6

முறையே ஞாயிற்றையும் திங்களையும் விழுங்குகின்றன; அவை மறைகின்றன. பின் கக்குகின்றன; அவை வெளி வந்து ஒளிர்கின்றன என்றனர். எதற்கும் கதை படைக்கும் வடவர் இதற்கும் ஒரு கதை கட்டினர். கதை ஒரு புறம் இருக்க, பாம்புகள் விழுங்கும் கருத்து தமிழ் மண்ணிலும் நிலவியது. திருக்குறளிலும் இதனைக் காண்கின்றோம்.

ஒரு வள்ளுவக் காதலி பேசுகிறாள் :

> 'நான் என் காதலனைக் கண்டது ஒருநாள் தான். அது வெளியார்க்குத் தெரிந்து அலராகப் பரவி விட்டது. வானத்துத் திங்களைப் பாம்பு கவ்வுவது பலருக்கும் தெரிவது போன்று பலருக்கும் எங்கள் காதல் தெரிந்துவிட்டது'

என்று தோழியிடம் கூறினாள். இதனைத் திருவள்ளுவர்,

> **''கண்டது மன்னும் ஒருநாள்; அலர்மன்னும்**
> **திங்களைப் பாம்புகொண் டற்று''** (1146)

என்றார்.

திங்கள் என்னும் ஒரு கோளை ஒரு பாம்பு வானத்தில் கவ்வுமா? இது பகுத்தறிவிற்குப் பொருந்துமா? இவ்வாறு ஐய வினாவை எழுப்பக்கூடியது தான் இக்குறள். உண்மையை அறிய விளக்கமாகக் காண வேண்டியுள்ளது.

**வானவியல் அமைவு**

ஆசிரியர் நல்லந்துவனார் பரிபாடலில் ஒரு வானவியல் கருத்தை வைத்துள்ளார். வையை ஆற்றில் வெள்ளம் பெருக மழை பொழிந்ததைக் கூறப் புகுந்த அவர் பெரு மழைக்குரிய காரணத்தை விளக்கினார். சில கோள்களின் இயக்கம் விண்மீன்களின் அமைவு முதலியவற்றைக் கூறும்

அவர் இராகு, கேது என்னும் துணைக்கோள்களின் இயக்கப் பாதையில் திங்கள் செல்லும்போது திங்கள் ஒளிமறைய இருளடைகிறது என்பதை,

**''பாம்பு (கேது) ஒல்லை**
**மதியம் மறைய வருநாளில்''[1]**

என்று பாடினார்.

**''பாம்பு ஊர்மதி''** என்றார் நற்சேந்தனார்.[3]

பாலை பாடிய பெருங்கடுங்கோவும் **'பாம்பு சேர் மதி'** என்று பாடினார்.

**பகுத்தறிவு முறை 19**

இஃதொரு வானவியல் கருத்து. இதன் தொடர்பில் கேது ஏன் பாம்பு எனப்பட்டது என்பதை அறிய வேண்டும்.

இராகு, கேது என்பவற்றைத் தமிழ் நிகண்டுகள் முறையே கரும்பாம்பு, செம் பாம்பு என்று தமிழ்ப் பெயரில் குறிக்கின்றன. இவற்றின் வடிவம் சற்று நீள் வட்ட வடிவத்தில் முன்தலைப்பகுதி அகன்று பின் வால்பகுதி கூர்த்து இருப்பதை வைத்துப் படமெடுத்த பாம்பாக இவை உருவகம் செய்யப்பட்டன.

விண்மீன்களின் அமைப்பிற்கும், கோள்களின் அமைப் பிற்கும் உவமைப் பெயர்களைத் தமிழ் வானவியலார் சூட்டினர். நிகண்டுகள்

---

1. நல்லந்துவனார் : பரி : 11-9, 10
2. பாலை பாடிய பெருங்கடுங்கோ : கலி : 15-17
3. நற்சேந்தனார் ; நற் : 128-2

பரணி—அடுப்பு; ஆயிலியம்—பாம்பு;

விசாகம்—முறம்; கேட்டை—வல்லாரை;

மூலம்—தேள்கொடுக்கு; கர்க்கடகம்—நண்டுக்கால்;

திங்கள்—முயலின்கூடு என அதனதன் வடிவமைப்பை வைத்து உவமைப் பெயர்களாகக் கூறின்,

இவ்வகையில் 'இராகு' என்னும் கோள் வடிவமைப்பில் பாம்பாய்—நிறக் கருமையால் கரும்பாம்பாய் உவமைப் பெயரில் கூறப்பட்டது. கேது வடிவமைப்பாலும் சிவந்த நிறத்தாலும் 'செம்பாம்பு' எனப்பட்டது,

இவ்வுவமைப் பெயர்களைக் கொண்டே கேது அணுகு வதைப் பாம்பு கவ்வுவதாகப் பாடினர். இவ்வாறு பாடுவது தமிழ்ச் சான்றோர்க்கு வழக்கமும் ஆயிற்று.

''பாம்பு சேர் மதி'' என்று பாம்பு மதியைச் சேர் வதாகப் பாடிய பாலைபாடிய பெருங்கடுங்கோவே,

''அரவு (பாம்பு) நுங்கு (விழுங்கும்) மதி'' [1] என்று விழுங்குவதாகவும் பாடினார்.

''அரவு நுங்கு மதியினும்'' [2]

''அரவு நுங்கு மதி'' [3] எனப்பெயர் அறிய முடியாத புலவர் இருவரும் பாடினர்.

---

1. பாலை பாடிய பெருங்கடுங்கோ : அகம் : 313-4
2. பாலை பாடிய பெருங்கடுங்கோ : குறு : 395-4
3. பாலை பாடிய பெருங்கடுங்கோ : அகம் : 114-5

இவ்வழக்கை ஒட்டியே திருவள்ளுவரும்,

"திங்களைப் பாம்பு கொண்டற்று" என்று உவமையாக அமைத்தார். எனவே, வானவியல் அறிவிற்குப் பொருத்தமான ஒரு கருத்து உவமைப் பெயரால் பாம்பாகி அது அணுகுவது கவ்வுதல் போன்றதாகித் திங்களைப் பாம்பு கொண்டதாயிற்று.

இவ்வகையில் வானவியல் கருத்தாகிய இது பகுத்தறிவிற்கு ஒவ்வுமா என்னும் ஐயத்தைப் போக்குகின்றது.

# 10. பகுத்தறிவுடன் எளிமை

**செய்யாதே — செய்தால்**

அனைத்து வகை மாந்தரையும் உளத்தில் கொண்டே தம் நூலைத் திருவள்ளுவர் யாத்தார். அதனால் சொல்வதை எளிமையாகச் சொல்லவேண்டும் என்னும் நோக்கம் கொண்டிருப்பார். அதன் அடையாளங்களாகப் பல குறட்பாக்கள் உள்ளன.

அவற்றுள் பகுத்தறிவு முனையுடன் எளிமையும் இணைந்த ஒன்றை இங்கு நிறைவாகக் காணவேண்டும்.

செய்யும் வினைகளில் தூய்மை வேண்டும்; பிறர்க்கு நன்மையும் தரவேண்டும். அதைவிடத் தீமை தரக் கூடாது. ஒவ்வொரு நாளும் அவனவன் செய்த வினைகள் தூய்மையானவையா என ஒவ்வொரு நாள் இறுதியிலும் மீள் பார்வையிடுவது நல்லது. அவ்வாறு மீள்பார்வையிடும் போது செய்யப்பட்ட நன்மைகள் நினைவில் மலர்ந்து மனத்தை மகிழ்விக்கும். தீமை கலந்திருக்குமானால் நல்ல உள்ளம் 'ஏன் இப்படிச் செய்தோம்' என்று தனக்குத் தானே இரக்கங்கொள்ளச் செய்யும். இந்நிலையை உணர்ந்த திருவள்ளுவர்,

''எற்று என்று இரங்குவ செய்யற்க'' என்றார். (எற்று என்று : எத்தகையவற்றைச் செய்தோம்) தானே

இரங்கத்தக்கதைச் செய்தாகிவிட்டது. அதனால் என்ன நேரும்(?) அதற்கு இப்போது என்ன செய்வது (?) எனக் கலங்க நேரும்.

**பகுத்தறிவு முனை 20**

இந்நிலையில், செய்தவனுக்கு ஆன்மிகத்தாராக இருந்தால் என்ன சொல்வர். தீமை செய்துவிட்டாய்; அது தீவினை. அது உன்னை நிரயத்தில் செலுத்தும்; தீமையை அடைவாய். வேண்டுமானால் கழுவாயாக இன்ன இன்ன செய்யலாம்'' என்று சாத்திரச் சடங்குகளைக் கூறுவர்; செய்தவன் அஞ்சுவான்; கலங்குவான்.

திருவள்ளுவர் அவ்வாறெல்லாம் சொல்லவில்லை.

''செய்வானேல்
மற்றுஅன்ன செய்யாமை நன்று'' [655]

என்றார்.

'செய்துவிட்டானா மீண்டும் அவை போன்றவற்றை இனிச் செய்யாதே; அஃதே நல்லது' என்றமை செய்தவனைத் தேற்றும்; மீண்டும் செய்யாமல் திருத்தும். மிக எளிமையான அறிவுரை. எளிமையுடன் பகுத்தறிவையும் இணைத்துக்கொண்டு வழிகாட்டுதலாகிறது. இஃதும் ஒரு **பகுத்தறிவு** முனை.

# 11. தொகுப்பு

## அ. ஆய்வின் கடைப்பிடி

எடுத்துக்கொண்ட அளவிற்கு ஏற்ப இதுவரை 20 பகுத்தறிவு முனைகள் காணப்பட்டன. இவை போன்று பல பகுத்தறிவு முனைகள் காணப்பட வேண்டியவை திருக்குறளில் உள்ளன.

இந்நூல் ஓர் ஆய்வுப் பொழிவின் எழுத்துருவ நூல். இந்த ஆய்வு, ''காய்தல் உவத்தல் அகற்றிய ஆய்வு; நடுநிலை ஆய்வு; நேர்மையான ஆய்வு. எடுத்த கருத்தை இறுகப்பிடித்துக்கொண்டு வலிந்து எக்கருத்தும் கொள்ளப் படவில்லை.

திருவள்ளுவர் கொண்டு காட்டிய பகுத்தறிவிற்கு ஒவ்வாதவை சில அவர் நம்பிக்கையாகவே கொள்ளப் பட்டன.

சொற்பொழிவு எழுத்துருவ நூலாக ஆக்கப்படும்போது விளக்கத்திற்காகச் சேர்க்கைகள் இடம் பெறும். சான்றுச் செய்யுட்கள் இணைக்கப்படும். அச்செய்யுட்களின் நூல், செய்யுள் எண், அடியின் எண் ஆகியன குறிக்கப்படும். இவை இந்நூலில் இடம் பெற்றன.

சிறப்பாக உண்மையை வெளிப்படுத்திக்காட்டும் பகுத்தறிவு நோக்கு கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

காணப்பட்ட பகுத்தறிவு முனைகளையும் அவற்றைக் காண அடித்தளமாகக் கொள்ளப்பட்ட சார்புக் கருத்துக் களையும் தொகுத்துக் காணல் நூற்பயனாக அமையும், படிப்போருக்கும் நினைவில் தவழும்.

## அடித்தளக் கருத்துக்களின் தொகுப்பு

* திருவள்ளுவம் உணர்வும் அறிவும் தழுவிய படைப்பு
* திருவள்ளுவரின் காலச் சூழல்
* 'பகுத்தறிவு' — விளக்கமும் கொள்கைகளும்
* இறைவன், கடவுள், தெய்வம் — சொல் ஆய்வு; பொருள் விளக்கம்.
* திருவள்ளுவரின் கடவுட் கொள்கை.
* திருவள்ளுவரின் அணுகு முறை.

## ஆ. காணப்பட்ட பகுத்தறிவு முனைகளின் தொகுப்பு

1. உருவத்தைக் குறிக்கும் இலக்கியப் பெருவழக்குச் சொல்லான **'கடவுள்'** என்பதை விடுத்து, **'இறைவன்'** என்னும் அருகிய இலக்கிய வழக்குச் சொல்லைத் தேர்ந்து கையாண்ட பகுத்தறிவுச் சான்று.

2. **'பகவன்'** என்னும் சொல்லாக்கத்தால் கண்ட பகுத்தறிவாண்மை.

3. ''**இறை**'', ''**இறைவன்**'' என்னும் சொற்கள் கடவுட் பொருட் குறிப்பில் தனித்தன்மையுடன் காட்டப்படாமல் 'மன்னவன், என்னும் பொருளுடன் சமமாக்கிய துலாக்கோல்.

4. தாமரைக் கண்ணனாம் திருமாலைப் பகடிக்குள் வைத்தும், அடியளந்தானாம் திருமாலை மடியிலா மன்னவனுக்கு அடுத்த நிலையில் வைத்தும் காட்டிய பொருட்காட்சி.

5. தாமரையினாளாம் திருமகளை மடியிலான் தாள் உள்ளே பொருத்திய தகவாக்கம்.

6. கையேந்தி இரப்போரைக் கண்டு கவன்ற மனக் முகுறலால் ''உலகை இயற்றிய''வனாம் நான் முகக் கடவுளைப் ''பரந்து கெடுக'' என்ற பகுத்தறிவு மிடுக்கு.

7. உயிரையும் உடலையும் கூறுபடுத்தும் கூற்று வனாம் காலன், நோன்பு வலிமையுடையவர்க்கு எதிர் நிற்க ஆற்றாமல் தோற்றோடச் செய்த வெற்றிப் பதாகை.

8. ''உலகத்தார் உண்டு'' என்றமை கடவுளைக் குறிக்காது; இவ்வகையில் பகுத்தறிவாளர்க்குத் துணையாக வழங்கிய கேடயம்.

9. 'மாந்தனே தெய்வம்' என்ற வாழ்வியல் நிறைவு நோக்கு.

10. வடவரின் நான்மறைகளும் மனுநூலும் விதித்த சாதி வேற்றுமைகளைச் சாடி விலக்கிய உறுதிப் பாடு.

11. 'நான்மறையை ஓதலைவிட நல்லொழுக்கம் குன்றுவது கேடு தரும்' என்ற நல்லாக்கம்.

12. பார்ப்பனர் ''**அந்தணர்**'' ஆகார் என்ற கருத் தேற்றமும் ''**அந்தணர் நூல்**'' நான்மறைஆகாது என்ற பொருள் தோற்றமும்.

13. 'உழுதொழில் இழிதொழில்' என்று ஆரியர் எழுதிய பழிப்பைப் புறந்தள்ளி "உழவேதலை" என்ற பெருமிதம்.

14. "இருவினை", "இருள்வினை" என்ற முதற் புரட்சி.

15. பெருவலிமையோடு எழுந்த எதிர்ப்பையும் முந்துறும் "ஊழ்" எனப்படும் விதியை அரும் முயற்சி உடையார் "உப்பக்கம்" காண்பர் என்ற வெற்றித்தூண்.

16. ஈகையின் சிறப்பால் "மேல் உலகம்" ஒதுக்கப் பட்ட கருத்து வாள்.

17. கொல்லாமையின் முன்னே ஆரியர் செய்யும் ஆயிரம் வேள்வியும் தீமையாகும் என்னும் தோலுரிப்பு.

18. மாந்தர் வேண்டும்போது மழை பெய்தால் எத்துணை பயனோ அத்துணை பயன் போன்றவள் கற்புடையவள் என்ற பெண்மை மணிமுடி.

19. திங்களைப் பாம்பு கவ்வும் வானவியல் கருத் தமைப்பு.


20. தனக்குத் தானே வருந்தும் அளவு தீய செயல் செய்தவனை 'நிரயம் செல்வாய்' என்று அச் சுறுத்திக் 'கயவன்' ஆக்காமல் 'மீண்டும் அதனைச் செய்யாமல் திருந்து' என்று வழி காட்டிய எளிமைச்சுளை.

இவ்வாறு இருபதாகக் காணப்பட்ட

**திருவள்ளுவத்தில் பகுத்தறிவு முனைகள்**
**தமிழகத்தின் பண்பாட்டுச் சுளைகள்.**

# சான்றுத் தமிழ் நூல்களின் விளக்கம்

| | | |
|---|---|---|
| அகம் | : | அகநானூறு |
| ஆத்தி | : | ஆத்திசூடி |
| இன்னா | : | இன்னா நாற்பது |
| இனிய | : | இனியவை நாற்பது |
| கம்.இரா. | : | கம்ப இராமாயணம் |
| கலி | : | கலித்தொகை |
| குறி | : | குறிஞ்சிப்பாட்டு |
| குறு | : | குறுந்தொகை |
| சிலம்பு | : | சிலப்பதிகாரம் |
| சிறுபாண் | : | சிறுபாணாற்றுப்படை |
| சொல்.கட். | : | சொல்லராய்ச்சிக் கட்டுரைகள் |
| திரி | : | திரிகடுகம் |
| தொல் | : | தொல்காப்பியம் |
| நற் | : | நற்றிணை |
| நான் | : | நான்மணிக்கடிகை |
| பதி | : | பதிற்றுப்பத்து |
| பரி | : | பரிபாடல் |
| பழ | : | பழமொழி நானூறு |
| புறம் | : | புறநானூறு |
| மது.கா. | : | மதுரைக் காஞ்சி |
| மலை | : | மலைபடுகடாம் |



பகுத்தறிவு

முனையை

வகுத்தவர்

- ★ பகுத்தறிவுப் பண்பாடு, வாழ்வு நெறி, மொழி அழுத்தம், ஆய்வுப் புலமை, செயல் நிறைவு.

- ★ ஆசிரியத்தில் : 'நல்லாசிரியர்' [தமிழ் நாட்டரசு] கவிதையில் 'கவிஞர்கோ' [பாரி விழா], பாவேந்தர் பாரதிதாசன் விருது [தமிழக அரசு].

- ★ பொழிவில் : 'சிலம்புச் சேரனார்' [இலங்கை-யாழ்] ஆகிய சிறப்புகள் இவரை அணைத்து மகிழ்ந்தவை.

- ★ நூலாக்கத்தில் : இவ்வாண்டில் 'திருவள்ளுவத்தில் பகுத்தறிவு முனை' 'அறிவியல் திருவள்ளுவம்' 'பட்டி மண்டப வரலாறு', 'இலந்தை முதல் இன்று வரை' மலர்கின்றன.

- ★ முத்திரையில் : நாகையில் மறைமலையடிகளார் முழு உருவ வெண்கலச் சிலை, பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடச் சிற்பங்கள், அதன் முகப்பு எழுநிலை மாடம் ஆகியவற்றின் இலக்கிய நெறி காட்டி. நாகையில் இளஞ்சேரன் நகர்.

இவற்றின் தொகுப்பு உருவம் **கவிஞர் கோ. கோவை இளஞ்சேரனார்.**

அன்பன்

**இரா. இரத்தினகிரி**

தஞ்சை